

# பாரதியின்
# லமைத்துவம்

திதி மனோன்மணி சண்முகதாஸ்

JPL
C10394

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியின் புலமைத்துவம்

KOHA JPL

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம். 10394 CC
விசேட சேர்க்கைப் பகுதி

10394 C.C

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

229113

2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

229113 CC

தலைப்பு : பாரதியின் புலமைத்துவம்

ஆசிரியர் : கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

உரிமை : பேராசிரியர் அ. சண்முகதாஸ்

பதிப்பு : முதற்பதிப்பு

வெளியீடு : கோகுலம் வெளியீடு - 04

அச்சிட்டோர் : கரிகணன் பிறிண்டேர்ஸ்,
இல.424, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**Title** : **PARATHIYIN PULAIMAITHUVAM**

**Author** : Dr.Manonmani Sanmugadas

**Copy Right** : Prof.A.Sanmugadas

**Edition** : First Edition

**Published by** : KoKulam Publication - 4

**Page** :**132**

**Printed by** : Harikanan Printers,
No.424, K.K.S. Road, Jaffna.

Price : 450/=

ISBN : 978-955-98925-57



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

பாரதி உலகறிந்த ஒரு மகாகவி. அவரைக் காலம் எமக்குத் தந்தது. மரபான கவிதை வரலாற்றில் பாரதியின் கவிதைகள் ஒரு புதிய பாய்ச்சல். மக்கள் எல்லோரும் படித்து மகிழக்கூடிய எளிய தமிழ் நடையில் அமைந்த பாரதியின் கவிதைகள் 'புதுமைக் கவிஞன்' பெயர் அவருக்குக் கிடைக்கக் காரணமாயின. அவர் உரைநடை, வசனகவிதை என்பனவும் அதற்கு அணியாக நின்றன. பாரதியாரின் பாடல்கள் சிறு தொகுதிகளாகப் பலரால் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. பாரதியின் மறைவுக்குப் பின்னர் பாரதி பிரசுராலயத்தார் அவருடைய கவிதைகளையும், வசன இலக்கியங்களையும் சிறுதொகுதிகளாகவும், மூன்று பெருந்தொகுதிகளாகவும் (காவியங்கள், வசனங்கள், கட்டுரை கள்) பற்பல பதிப்புகளை வெளியிட்டுள்ளனர். அத்தகைய வெளியீட் டாளர்களில் ஸ்ரீபரலி சு.நெல்லையப்பபிள்ளையவர்கள் நாட்டுப்பாடல் என்னும் தொகுப்பை இரண்டாம் பதிப்பாக வெளியிட்டபோது ஒரு முகவுரை எழுதியுள்ளார். அவர் பாரதியாரின் கவிதையைப் பற்றி எழுதியதை வருமாறு காணலாம்.

> 'பாரதியாரின் பாடல்கள் தமிழர்களுக்குப் புதிய உயிர் அளிப்பன. அவரது பாடல்களெல்லாம் மேலான தேசபக்தி யையும், தெய்வபக்தியையும், உண்மையான கவிகள் விளைக்கும் ஒப்பற்ற இன்பத்தையும் விளைக்கின்றன. அவர் பாடல்களைப் படித்த காசிவாசியான எனது நண்பர் ஒருவர் "அவரது அரிய கவிதைகளைப் படித்து உடம்பு சிலிர்த்தேன். இத்தகைய சிறந்த கவிவல்லோர்கள் இன்னும் இருந்து பாரத நாட்டைச் சிறப்பித்து வருவதாலேதான் தமிழ் மாது விருத்தாப்பியதசை அடைய வில்லை; அடையமாட்டாள் என மகிழ்ந்தேன்" என்று எழுதினார். ஆயினும் இத்தகைய புலவர்களின் பெருமையை அறிந்து, அவர்களை ஆதரித்து, அவர்கள் அறிவும் திறமையும் தமிழ் நாட்டாருக்கு மிகவும் பயன்படும் வண்ணம் செய்யக் கூடிய தமிழர்கள் மிகச் சிலர்கூட இல்லாதிருப்பதை நோக்கும் பொழுது எனக்கு அளவற்ற விசனமும் உண்டாகிறது.

இந்த எழுத்து 1919ஆம் ஆண்டில் இருந்த நிலையைப் பதிவு செய்துள்ளது. ஆனால் ஒரு நூற்றாண்டு கழிந்த நிலையிற் பாரதியின் ஆக்கங்கள் உலக அரங்கிலே பேசப்படும் உயர்ந்த நிலையைப் பெற்றுள்ளன. தமிழர்கள் மட்டுமன்றிப் பிறமொழியாளர்களும் பாரதி பாடல்களைப் படிக்கத் தொடங்கிவிட்டார்கள். பல்வேறு நிலைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுகள் செய்யப்படுகின்றன. பாரதி 'தேசிய கவியாக' எல்லோரது நினைவிலும் நிலைத்துவிட்டார்.

தமிழ்மொழிமீது பாரதி கொண்டிருந்த பற்று அவரது பாடல்களிற் பரவிக்கிடக்கிறது. பாரதியின் பாடல்கள்: பிறந்த நாட்டின்மீது எல்லோருக்கும் ஈடுபாட்டை ஏற்படுத்தவல்லவை. நமது முன்னோர் வாழ்ந்த நாடு என்ற உயர்ந்த எண்ணத்தை அவரது கவிதை ஏற்படுத்தியது.

**"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி**
**இருந்ததும் இந்நாடே - அதன்**
**முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து**
**முடிந்ததும் இந்நாடே - அவர்**
**சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து**
**சிறந்ததும் இந்நாடே - இதை**
**வந்தனை கூறி மனத்தில் இருத்திஎன்**
**வாயுற வாழ்த்தேனோ?"**

எனப் பாரதி அன்று பாடிய கவிதை இன்றும் எந்நாட்டவர்க்கும் பொருத்தமாக உள்ளது. பிறந்த நாட்டைவிட்டுப் புலம்பெயர்ந்து வாழ்வில் நாட்டுப்பற்று எனும் கனலை ஏற்றும் பாடலாகவுள்ளது. தேசப்பற்று, மொழிப்பற்று, சமூகப்பற்று எனப் பாரதியின் பாடல்கள் சுட்டும் உணர்வு இயல்பான வாழ்வியலை நெறிப்படுத்தும் இனிய வழிமுறையாகும். பாப்பா முதல் முதியோர் வரை எல்லோரையும் சிந்தையில் இருத்திப் பாடிய பாரதி காலத்தால் அழியாத கவிஞர் ஆனார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த பெரும் புலவனுடைய புலமைத்து வத்தை ஒரு பார்வையிற் காணும் முயற்சியாக இந்நூல் ஆக்கப்பட் டுள்ளது. நூலைக் கையிலெடுத்துப் படிக்கும் பழக்கம் அருகிவரும் இக்கணினி யுகத்தில் இச்சிறுநூல் பாரதியை மீள நினைக்கவைக்கும். இந்நூலில் 12 கட்டுரைகள் அடங்கியுள்ளன. இன்றைய மாணவர்களை நோக்கியே உருவாக்கம் பெற்றுள்ளன. பாடசாலை முதல் பல்கலைக் கழகம் வரை பாரதி பாடல்கள் நம்நாட்டிற் பாடத்திட்டத்தில் அடக்கப்பட்டுள்ளன. எனவே அவ்வாறு பயிலும் மாணவர் களுக்குப் பாரதியின் புலமைத்துவத்தை அறிந்துகொள்ள ஒரு வழிகாட்டியாக இந்நூல் பயன்படும். ஒரு நூற்றாண்டு கழிந்த நிலையில் தமிழ்ப்புலமையாளர்களைத் தரிசிக்கும்போது ஏற்படும் மனக்கசிவை இந்நூல் தருமென நம்புகிறோம். அரைநூற்றாண்டுகூட வாழாத பாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் தருமென நம்புகிறோம். அரைநூற்றாண்டுகூட வாழாத பாரதி கண்ட கனவு மெய்ப்படவேண்டும் என்ற எண்ணம் வாசகருக்கும் ஏற்படும். பாரதியின் கவிதைகள் எல்லாவற்றையும் படிக்கவேண்டும் என்ற ஆவல் பிறக்கும். அதுவே நூலின் இலக்கு.

இந்த இலக்கு நிறைவேறக் கரிகணன் பிறிண்டேர்ஸ் கைகொடுத்தது. யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்தும் முதல்விழாவான பாரதி விழாவில் இந்நூல் அரங்கேறுவது காலம் நமக்குத் தந்த அரிய வாய்ப்பு. எனவே இவ்வெளியீட்டுக்குத் துணைநின்ற அனைவருக்கும் எமது மனம் கனிந்த நன்றிகள். எல்லாவற்றையும் நேர்பட நின்று இயக்கும் பராசக்தியின் பாதங்கள் என்றும் எமக்குத்துணை.

**"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்**
**இனிதாவது எங்கும் காணோம்**
**பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்**
**இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு**
**நாமமது தமிழரெனக் கொண்டு இங்கு**
**வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்**
**தேமதுரத் தமிழோசை உலகமெலாம்**
**பரவும்வகை செய்தல் வேண்டும்". (பாரதி)**

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**
**11-09-2012**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1) விநாயகர் நான்மணிமாலை 01

2) பாரதியும் பராசக்தியும் 08

3) நான் விரும்பிய காளி தருவாள் 17

4) பாரதியும் முருகனும் 23

5) பாரதியின் கண்ணன்பாட்டு - ஒரு நோக்கு 34

6) கண்ணன் பாட்டில் அணிநயம் 44

7) பாரதியில் தெய்வீகமும் மானிடமும் 52

8) மனமெனும் பெண்ணே 63

9) பாரதியார் கவிதைகளில் பெண்மை மரபு நிலையும், புரட்சி நிலையும் 75

10) பாரதியின் பெண்கள் விடுதலைக்கும்மி - ஒரு நோக்கு 89

11) பாரதியின் பாப்பாப் பாட்டு 96

12) கற்பு - சங்கச் சான்றோர் முதல் பாரதி வரை 107




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் நான்மணிமாலை

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த புதுமைக்கவிஞன் பாரதியாவான். தேசிய மகாகவி என்ற பாராட்டைப் பெற்றவன். தமிழ்க் கவிதைக்குப் புதிய வடிவம் தந்தவன். பாரதியின் பாடல்கள் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்குப் புத்துயிர் அளிப்பவை. பாடல்களில் தேசபக்தியும், தெய்வபக்தியும் விரவிக் கிடக்கின்றன. பாரதி பாடிய பாடல்களைத் தெய்வப்பாடல்கள், பல்வகைப்பாடல்கள், முப்பெரும்பாடல்கள் என மூவகையாகத் தொகுத்துள்ளனர். தெய்வப்பாடல்களைத் தோத்திரப்பாடல்கள், ஞானப் பாடல்கள் என வகுத்துப் பார்க்கலாம். இருவகைப் பாடல்களிலும், ஏறக்குறைய 100 பாடல்கள் உள்ளன. அவற்றுள் 'விநாயகர் நான்மணிமாலை என்னும் பாடல் தொகுப்பைப்பற்றி இக்கட்டுரை சில செய்திகளைத் தொகுத்துத் தரவுள்ளது.

**விநாயகர் நான்மணிமாலை பாடல் அமைப்பு :**

பாரதி 1882ஆம் ஆண்டு பிறந்தவன். 1921ஆம் ஆண்டு மறைந்தவன். 39 ஆண்டுகளே இவ்வுலகில் வாழ்ந்தவன். 7 வயதிலேயே கவிதைபாடும் ஆற்றல் பெற்றிருந்தவன். 11 வயதில் "பாரதி" (கலைமகள்) என்ற பட்டத்தைப் பெற்றவன். 15 வயதில் திருமணம் செய்தவன். எனவே மிக இளமைப் பருவத்திலேயே கவிதை பாடிப் புகழ்பெற்றவன். அவன் பாடிய தெய்வப் பாடல்களிலே விநாயகர் பற்றிய பாடல்கள் 40; 'விநாயகர் நான்மணிமாலை' என்ற தொகுப்பாக இன்று எமக்குக் கிடைத்துள்ளன.

நான்கு மணிகளால் இயற்றப்பட்ட பாமாலையாக விநாயகர் நான்மணிமாலை அமைந்துள்ளது. பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்றாகிய நான்மணிக்கடிகை என்ற நூலின் முறையைப் பின்பற்றித் தமிழ்ச்சான்றோர் தாம் பாடிய பிரபந்தங்களில் நான்மணிமாலையை அமைத்தனர். பட்டினத்தடிகள் இயற்றிய 'கோயில் நான்மணிமாலை' இத்தகையது. வெண்பா, கலித்துறை, விருத்தம், ஆசிரியம் என்னும் பாவகைகளே நான்குமணிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டது. பாரதியும் இக்கட்டமைப்பைப் பின்பற்றியே முதலாவது மணி: வெண்பாவாகவும் இரண்டாவது மணி: கலித்துறையாகவும், மூன்றாவது மணி:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தமாகவும், நான்காவது மணி : அகவலாகவும் அமைத்து விநாயகர் நான்மணி மாலையைப் பாடியுள்ளான். பட்டினத்தார் பாடிய நான்மணிமாலையைப்போல 40 பாடல்களை அமைத்துள்ளான். அந்தாதி அமைப்பிலே செய்யுட்கள் தொடர்கின்றன. எக்காரியத்தைச் செய்யப் புகினும் விநாயகரைத் தொழுவதே மரபு. இம்மரபினைப் பின்பற்றிப் பாரதியும் முதலில் தான்இயற்றும் பாடல் தொகுப்பிற்குக் காவலாக இருந்தருள் செய்யும்படி காப்புச் செய்யுளைப் பாடியுள்ளான்.

"சக்திபெறும் பாவாணர் சாற்றுபொருள் யாதெனினும்
சித்திபெறச் செய்வாக்கு வல்லமைக்கா - அத்தனே
நின்றனக்குக் காப்புரைப்பார் நின்மீது செய்யும் நூல்
இன்றிதற்கும் காப்பு நீயே."

ஏனைய மரபான தமிழ்க் கவிஞர்களைப் போலவே தானும் நூல் செய்வதைப் பாரதி காப்புச் செய்யுளிலே தெளிவாகக் கூறியுள்ளான். நான்கு பாவகைகளாற் பாடிய பாடல்களில் முதலில் அமைந்த காப்புச் செய்யுள் வெண்பாவிற் பாடப்பட்டுள்ளது.

காப்புச் செய்யுளை அடுத்துவரும் செய்யுள் கலித்துறையிலே பாடப்பட்டுள்ளது. அப்பாடலிற் பாரதி தான்செய்யும் வழிபாடுபற்றிக் குறிப்பிட்டுள்ளான். 'நீயே சரணம் நினதருளே சரணஞ் சரணம்' என்று முதலிலே விநாயகரிடம் அடைக்கலமாகி நிற்கிறான். 'பல பிழை செய்து களைத்துனை நாடி வந்தேன்' எனப் பாரதி தன்பிழையை முதலிலேயே சொல்லிவிடுகிறான். மேலும், தான் பாடப்போகும் பாடலைப்பற்றி ஒரு குறிப்பையும் கூறியுள்ளான். 'தீயை நிகர்த்தொளி வீசுந்தமிழ்க்கவி செய்குவனே' என்ற பாரதியின் பாடலடி அவனுடைய செந்தமிழ் மொழிப்பற்றையும் வெளிப்படுத்திநிற்கிறது. அவனுடைய விநாயகர் பற்றிய பாடல்களின் உள்ளடக்கம் விளக்கமாக நோக்கப்பட வேண்டியுள்ளது.

**பாரதி பாடலில் வழிபாட்டின் பயன்பற்றிய எடுத்துரைப்பு:**

விநாயகர் வழிபாடு பாரதியின் வாழ்வியலில் ஒரு கட்டத்தில் மிகவும் உன்னதமாக இருந்ததையே விநாயகர் நான்மணிமாலைப் பாடல்கள் உணர்த்துகின்றன. விநாயகருடைய தாளைக் கருத்திடை வைக்கவேண்டும் என்று வற்புறுத்தியுள்ளான். அவ்வாறு கருத்தோடு வழிபட்டால் ஏற்படும் பயன்களையும் பாடலிலே கூறியுள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி தாளைக் கருத்திடை வைப்போம்
குணமதிற் பலவாம் கூறக்கேளீர்
உட்செவி திறக்கும் அகக்கண் ஒளிதரும்
அக்கினி தோன்றும் ஆண்மை வலியுறும்
திக்கெல்லாம் வென்று ஜெயக்கொடி நாட்டலாம்
கட்செவி தன்னைக் கையிலே எடுக்கலாம்
விடத்தையும் நோவையும் வெம்பகை யதனையும்
துச்சமென் றெண்ணித் துயரிலா திங்கு.

உலகியல் வாழ்க்கையில் இன்பமாகவும் மகிழ்வாகவும் வாழ்வதற்கு வழிபாடே உதவும் என்பதைப் பாரதி கவிதை மூலம் எல்லோருக்கும் எடுத்தியம்பியுள்ளான். பாரதி ஒரு சாதாரண மனித நிலையிலே வாழ்வுக்குத் தேவையான எல்லாவற்றையும் வழிபாட்டாற் பெறமுடியும் என நினைப்பதற்கு அவனுடைய வளர்ப்புச் சூழலும் ஒரு காரணமாயமைந்தது என்பதில் ஐயமில்லை. புதுச்சேரியில் அவன் வாழ்ந்தபோது வாழ்வில் ஏற்பட்ட சிக்கலைத் தீர்க்க வழிபாட்டை நாடியுள்ளான். புதுச்சேரி மணக்குள விநாயகரை வழிபட்ட அனுபவத்தையே விநாயகர் நான்மணிமாலையாகப் பாடியுள்ளான். பாரதி கேட்கும் வரம் இக்கருத்துக்குச் சான்றாக உள்ளது.

"எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி
மனத்திற் சலன மில்லாமல்
மதியில் இருளே தோன்றாமல்
நினைக்கும் பொழுது நின்மவுன
நிலை வந்திட நீ செயல்வேண்டும்
கனக்குஞ் செல்வம் நூறுவயது
இவையும் தரநீ கடவாயே"

தன் மனத்தைத் தானே கட்டுப்படுத்தும் ஆற்றலை விநாயகரிடம் பாரதி கேட்கிறான். நினைத்தபோது மவுனமாக இருப்பது மனிதரால் முடியாத காரியம். ஐம்புலன்களை நினைத்தபோது கட்டுப்படுத்த வேண்டுமாயின் தெய்வ சிந்தனைமூலம்தான் செய்யமுடியும். பாரதி ஒரு சராசரி மனிதன். உலக இன்பங்களில் நாட்டம் உள்ளவன். அதனால் அதனை முழுதாக அனுபவிப்பதற்குக் கனத்த செல்வத்தையும் நூறுவயதையும் வேண்டுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணக்குள விநாயகரின் பெருமையையும் பாரதி பாடலிலே பதிவுசெய்துள்ளான். நிழலிலும் வெயிலிலும் நேர்ந்த துணையாய் இருப்பவன் விநாயகன். நெருப்பிலும் நீரிலும் எம்மைக் காப்பவன். மண்ணிலும் காற்றிலும் வானிலும் எமக்குப் பகைமை ஒன்றின்றிக் காப்பவன். பயத்தைத் தவிர்த்தருள்பவன். இத்தகைய அருள்செய்யும் விநாயகன் தோற்றத்தைப் பாரதி பாடலிலே காட்சிப்படுத்திக் காட்டுகிறான்.

"மௌனவாயும் வரந்தரு கையும்
உடையநம் பெருமான் உணர்விலே நிற்பான்
ஓமெனும் நிலையில் ஒளியாய்த் திகழ்வான்."

விநாயகன் வேழமுகமுடையவன். அதனால் மௌனவாயை யுடையவன் எனப் பாரதி குறிப்பிட்டுள்ளான். மனித உடலும் வேழமுகமும் கொண்ட மணக்குளவிநாயகன் தானேயாகிய தனிமுதற் கடவுள். முத்திநிலைக்கு மூலவித்தானவன். சதுர்மறையாளர் நித்தமும் போற்றும் நிர்மலக்கடவுள். எல்லாவற்றிற்கும் மேலாக ஏழையர்க் கெல்லாம் இரங்கும் பிள்ளை. வாழும்பிள்ளை. மணக்குளப்பிள்ளை. பாரதியின் பக்திப்புலப்பாடு பாடல்களிலே பல்வேறு விதமாகப் புலப்படுத்தப்பட்டுள்ளது.

**பாரதியின் பக்திப் புலப்பாடு**

வழிபாட்டின் பயனை நன்குணர்ந்தவர் மற்றவர்களையும் அந்நெறியிற் செல்ல ஆற்றுப்படுத்துவர். பாரதியின் பக்திப் புலப்பாடு இத்தகையதொரு நோக்குடையதாகவே காணப்படுகிறது. தனது சிந்தைக்கு எடுத்துரைப்பதாக அவன்பாடிய வெண்பா இதனை உறுதி செய்கிறது.

"நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதுஞ் சோராதிருத்தல் - உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நங்குடியை வாழ்விப்பான்
சிந்தையே இம்மூன்றும் செய்"

பாரதியின் பக்தியுணர்வு சுயநலம் தாண்டிப் பரநலநோக்கைக் கொண்டதாக விளங்குகிறது. மக்கள் செயற்பாட்டையே மாற்ற வேண்டும் எனப் பாரதி கருதினான். நாட்டிற்குழைத்தல், இமைப் பொழுதும் சோராதிருத்தல் எனச் செயற்பாட்டை வரையறைசெய்து கூறியுள்ளான். பாரதியின் பக்தியுணர்வு தனக்கு வேண்டியதைப் பெறுதல் என்ற குறுகிய நோக்குடையதல்ல. வீட்டையும் சமூகத்தையும் தாண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JPL

நாடுவரை பரந்திருந்தது. இதனைப் பாரதியின் ஏனைய தெய்வீகப் பாடல்களிலும் காணமுடிகிறது. பக்தியுணர்வை விளக்கமாக ஒரு பாடலிலே கூறியுள்ளார்.

"பக்தியுடையார் காரியத்திற்
பதறார் மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்குந் தன்மை போல்
மெல்லச் செய்து பயனடைவார்
சக்தி தொழிலே அனைத்துமெனிற்
சார்ந்த நமக்குச் சஞ்சலமேன்
விந்தைக் கிறைவா கணநாதா
மேன்மைத் தொழிலிற் பணியெனையே"

தெய்வசிந்தனையுடையவரது செயற்பாடுகளில் ஒரு நிதானம் இருக்கும். அவர்கள் எதற்கும் பதற்றமடையமாட்டார்கள். ஒரு வித்து மண்ணிலே முளைத்து வளர்வதுபோலச் செயற்படுவார்கள். பேசாப் பொருளைப் பேசப் பாரதி துணிந்ததாகக் கூறுகின்றான். அவன் கேட்கா வரத்தைக் கேட்கத் துணிகிறான். மண்மீதுள்ள மக்கள், பறவைகள், விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு, மரங்கள் எல்லாமே இடும்பையின்றி இன்பமுடன் வாழவேண்டுதல் செய்யும் பாரதி எல்லா உயிர்களையும் நேசிக்கும் பண்புடையவனாகச் சிறந்த மானிடனாக விளங்குகின்றான். காக்கை, குருவி எங்கள் ஜாதி. கடலும், மலையும் எங்கள் கூட்டம் என்ற அன்புநிலையிற் கவிதை பாடிய பாரதி எல்லா உயிர்களுக்காகவும் விநாயகனைத் தொழும் உயர்ந்த பக்தனாக விளங்குகின்றான்.

பாரதிகூறும் பக்திவாழ்வு இன்னொரு பாடலில் மிகச் சிறப்பாகப் புலப்படுத்தப்பட்டுள்ளது.

"செய்கதவம் செய்கதவம் நெஞ்சே தவம் செய்தால்
எய்த விரும்பியதை எய்தலாம் - வையத்தில்
அன்பிற் சிறந்த தவமில்லை அன்புடையார்
இன்புற்று வாழ்தல் இயல்பு.

வழிபாட்டு நடைமுறையில் தவம் செய்தல் மிகக்கடின மென்பர். தவமென்பது மனம் பொறிவழிச் செல்லாது ஐம்புலன் களையும் ஒடுக்கியிருப்பது என்பர். ஆனால் பாரதியோ அன்பிற் சிறந்த தவமில்லை என்கிறான். தவம் செய்தால் நாம் விரும்பியதைப் பெறலாம். அன்புடையராக வாழ்ந்தால் எல்லாவற்றையும் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியின் தெய்வ நம்பிக்கை மிகவும் வலியதாக இருந்தது. தடுமாற்றம் இல்லாத பக்தி நிலையிற் பாரதி வாழ்ந்தான். துன்பங்களைக் கண்டு துவண்டுவிடாமல் துணிவோடு செயற்படும் ஆற்றல் வழிபாட்டாற் கிடைக்கும் தெய்வத்தின் விதியையே பாடலிற் பாரதி காட்டியுள்ளான்.

மொய்க்குங் கவலைப் பகைபோக்கி
　　முன்னோன் அருளைத் துணையாக்கி
எய்க்கும் நெஞ்சை வலியுறுத்தி
　　உடலை இரும்புக் கிணையாக்கி
பொய்க்குங்கலியை நான்கொன்று
　　பூலோகத்தார் கண்முன்னே
மெய்க்குங் கிருத யுகத்தினையே
　　கொணர்வேன் தெய்வ விதியிஃதே.

இப்பாடலில் பாரதியின் பக்திப் புலப்பாடு காலத்தையே வெல்லும் ஆற்றலாக உளது. தனக்கு முன்னே வாழ்ந்த மெய்யடியார்களின் பாடல்களிலே பாரதி அவர்களுடைய பக்திப் புலப்பாட்டை நன்கு அறிந்திருந்தான். வாழும் காலத்திலே வழிபாட்டின் பயனை உணரப் பாரதி இப்பாடலைச் சிறப்பாகப் பாடியுள்ளான். 'நாமார்க்கும் குடியல்லோம். நமனை அஞ்சோம்' என்ற மனவுரமுடைய அடியார் பக்திநிலையையும் பாரதி தாண்டி யுகத்தையே கொணர்வேன் என நம்பிக்கையுடன் பாடியுள்ளான். இது அவனுடைய தனித்துவமான பக்திப் புலப்பாடாக உள்ளது.

நான்மணிமாலையில் உள்ள நாற்பது பாடல்களும் பாரதி விநாயகர் மீது கொண்டிருந்த பக்தியைப் புலப்படுத்துகின்றன. மணக்குள விநாயகரை நித்தம் வழிபட்டதால் பாரதியின் உள்ளத்தில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. பிறந்த பொன்னாட்டின்மீது பாரதி கொண்டிருந்த மதிப்பையும், பாடல்கள் வெளிப்படுத்தியுள்ளன. தேசியக் கவிஞனாகப் பாரதியை நினைப்பவர் பாரதியின் தெய்வீக நிலையையும் இப்பாடல்களிலே காண்பர்.

'பாரிடை மக்களே கிருதயுகத்தினைக் கேடின்றி நிறுத்த விரதம் கொண்டனன்' என்ற பாரதியின் கூற்று அவனை உலக மகாகவியாக்கியுள்ளது. பாரதியின் தமிழ்மொழியாற்றலும், தமிழ்நூற் பயிற்சியும், இலக்கணப் புலமையும் விநாயகர் நான்மணிப் பாடல்களில் விரவிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடக்கின்றன. பாடல்களிற் பாரதி பயன்படுத்திய சொற்கள் உள்ளத்தைப் பக்திநெறியிற் செல்ல வழிகாட்டுகின்றன. 'கோமான் பாதக்குளிர்நிழல் என்ற தொடர் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. நாம் ஆறுதல் தேடும் இடத்தைத் தெளிவாகப் பாரதி சுட்டிக்காட்டுகிறான்.

தொகுத்து நோக்கும்போது பாரதி பாடிய ஏனைய பக்திப் பாடல்களைவிட விநாயகர் நான்மணிமாலை தனிச் சிறப்புடைய தென்பதை நன்குணரமுடிகிறது. 40 பாடல்களில் விநாயகர் பற்றி மட்டுமல்லாமல் ஏனைய தெய்வங்களைப் பற்றியும் தொடர்புறுத்திக் காட்டியுள்ளான். எல்லாத் தெய்வங்களையும் வணங்குவதற்கு முன்பாக விநாயகனை வழிபடல் மரபு. பாரதி பாடிய தோத்திரப் பாடல்களில் விநாயகர் நான்மணிமாலை முதலாவதாகத் தொடுக்கப்பட் டுள்ளமையும் மரபு நிலையாகவும் உள்ளது. யானைமுகனாக, கற்பக விநாயகனாக, கணபதியாக, மணக்குளவிநாயகனாக, வான்மறைத் தலைவனாக, பிரணவமாக, தனிச்சுடர்ப் பொருளாக, சக்திகுமாரனாக, கோமானாக, தனிமுதற்கடவுளாக, மந்திரத்தேவனாக, சுடராக, தேவர்துரையாக, பரம்பொருளாக, ஆதிமூலமாக, கரிமுகனாக, ஆனைமுகனாகப் பல்வேறு வடிவிலே காட்டும் தரிசனம் மிகச்சிறப்பாகச் சொற்சித்திரமாக அமைந்துள்ளது. நான்மணிமாலை என்ற செய்யுட் தொகுப்புநிலை இதற்குப் பொருத்தமாக இருப்பதைப் பாரதி கண்டான். புலமையும் தெய்வீகமும் ஒன்றுபட்ட பாரதியின் இப்பாடல் விநாயகர் வழிபாட்டிற்குச் சிறந்ததொரு வழிகாட்டியாகும்.

மொய்க்கு கவலைப் பகை போக்கி
　　முன்னோன் அருளைத் துணையாக்கி
எய்க்கும் நெஞ்சை வலியுறுத்தி
　　உடலை இரும்புக் கிணையாக்கிப்
பொய்க்குங் கலியை நான் கொன்று
　　பூலோகத்தார் கண்முன்னே
மெய்க்குங் கிருத யுகத்தினையே
　　கொணர்வேன் தெய்வவிதியிஃதே
　　　　(விநாயகர் நான்மணிமாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியும் பராசக்தியும்

தாய்வழி மரபினை ஒட்டியே திராவிடச் சமூகம் வளர்ந்து வந்ததெனத் தொல்பொருளாராய்ச்சியாளர் கருதுகின்றனர். தாய்வழி மரபினைப்பேணிய நாடுகளிலெல்லாம் பெண்தெய்வ வழிபாடும் சிறப்புற்றிருந்தது. திராவிட மக்களிடையே அக்காலந்தொட்டே போற்றப்பட்ட பெண்தெய்வ வழிபாடு இடையிலே திடீரென நின்றுவிடாமல் காலமாற்றங்களுக்கெல்லாம் ஈடுகொடுத்துத் தற்காலம் வரையும் நிலவிவருகின்றது. தற்கால இந்துசமயத்தில் ஓரங்கமாகச் சக்தி வழிபாடு இருப்பது இதற்குச் சான்றாகும். சக்தியை வழிபடுபவர்களைச் சாக்தர்களென்றும் சக்திதாசர்களென்றும் அழைப்பர். இச்சக்தி வழிபாட்டை அல்லது பெண்தெய்வ வழிபாட்டை வரலாற்று ரீதியாக அறிந்துகொள்வதற்குத் தமிழ் இலக்கியங்களும் ஓரளவில் துணையாக அமைகின்றன. சங்ககால இலக்கியங்களிற் கொற்றவை எனப் பேசப்பட்டபெண்தெய்வம் அதற்குப் பின்னெழுந்த இலக்கியங்களிலும் பேசப்படுகிறாள். கம்பர், குமரகுருபரர் போன்ற புலவர்கள் 'சரஸ்வதி' பற்றிப் பாடினும் அப்பாடல்களிற் பெணதெய்வம் பற்றியே கூறப்பட் டுள்ளதெனலாம். இப்படியாக வளர்ந்துவந்த சக்திவழிபாட்டிலே ஈடுபட்டுச் சக்திதாசர் எனப்படும் பாரதியின் பாடல்களில் அப்பெண் தெய்வம் போற்றப்பட்டிருக்கும் வகைகளை மேலெழுந்தவாரியாக ஆராய்வதே இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

ஒரு நாட்டின் அரசியல் பொருளாதார சமுதாயநிலை களுக்கேற்ப அந்நாட்டுச் சமயங்களிலுள்ள தெய்வங்கள் வணங்கப் படுவதைப் பல உதாரணங்கள் மூலம் காணலாம். இந்தியாவிற்கு வந்த ஆரியர்கள் திராவிடர்களெனக் கருதப்படும் தாசர்களை முறியடிக்கும் பணியிலே ஈடுபட்டிருந்தபோது அவர்கள் வணங்கும் தெய்வங்களுள் முக்கியமானவர்களாக இந்திரன், சோமன், அக்கினி ஆகியோர் காணப்பட்டனர். சோமபானத்தைப் பல இடங்களில் அருந்திய இந்திரன் போரிலே முன்னின்று தாசர்களை ஓட்டி அவர்களிடத்தை அக்கினிக்கிரையாக்கியதை இருக்குவேதப் பாடல்கள் கூறும். ஆகவே காலத்தின் தேவையாக இந்திரன் என்னும் போர்க்கடவுள் அக்காலத்தில் முக்கியத்துவ மடைந்தது ஆச்சரியப்படுவதற்கில்லை. வேதகால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியரின் தேசியக் கடவுளாகவும் விரும்பமுள்ள தேவதையாகவும் இந்திரன் போற்றப்பட்டான் இருக்குவேதப் பாடல்களிற் கால்வாசிக்கு மேற்பட்டவை இந்திரனைப் பற்றிப் பாடுவது அக்கடவுளின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. இதேபோன்று வங்காளத்திலும் தேவைக்கேற்ப ஒரு பயங்கரப்போர்த் தெய்வமொன்றை ஒரு புலவன் பாடுவதைக் காணலாம். வங்காளம் கொள்ளைக்காரர்களாலும் அடக்குமுறைக்காரர்களாலும் தாக்கப்பட்டிருந்த காலத்தில் வாழ்ந்த இராமப்பிரசாத் என்னும் புலவர், கபாலங்களை ஏந்தியவளாகவும் இரத்தம் வடியும் நாக்கினையுடையவளாகவும் உள்ள காளியின் வடிவத்தினைப் பாடுகின்றார்." இந்த அடிப்படையிலேயே பாரதியின் பாடல்களிற் பராசக்தி பல்வேறு வடிவுகள் கொண்டிருக்கும் வகையினை நாம் அணுகுதல் வேண்டும்.

பாரதி வாழ்ந்தகாலம் ஆங்கிலேயருக்கெதிராக இந்திய மக்கள் தேசிய உணர்வுடன் எதிர்ப்புக்கிளப்பிய காலமாகும். இந்திய மக்களிடையே மூன்று வகைப்பட்ட மக்களை இனங்கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது. ஒரு பகுதியினர் வெள்ளையருடன் ஒத்துழைப்பவர்; இன்னொரு பகுதியினர் கத்தியின்றி, இரத்தமின்றி யுத்தமொன்று செய்து பாரதத்தை அடிமைத் தளையினின்றும் மீட்பவர், அடுத்த பகுதியினர் இரத்தஞ் சிந்தியேனும் எதிரியைக் கலைக்க முற்பட்டவர். இவர்களுள் மூன்றாவது பகுதியினரை 'மிதவாதிகள்' என இந்திய வரலாற்றறிஞர் கூறுவர். பாரதியும் இந்த இனத்தைச் சேர்ந்தவராகவே இருந்தார். 1907ஆம் ஆண்டு இந்தியத் தேசிய காங்கிரஸ் சபையில் ஏற்பட்ட பிளவின் நிமித்தமாக இரத்தத் துடிப்புடைய வாலிபர்கள் ஒன்றுசேர்ந்த ஒரு கூட்டத்திலுள்ள வரையே 'மிதவாதிகள்' என்றனர். அவ்வாண்டில் காங்கிரஸ் சபைக்கு லாஜ்பத்ராய் அவர்களைத் தலைவராகத் தெரியும்படி மிதவாதிகள் கேட்டனர். ஆனால், அதனை ஏற்றுக் கொள்ளாது டாக்டர் ருஷ்பெஹாரி கோஷ் அவர்களையே ஏனையோர் தெரிந்தெடுத்தனர். இச்செய்கை 'மிதவாதிகள்' எனப்பட்டோரை ஆத்திரத்திற்குள்ளாக்கியது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. சென்னையில் பாரதி உட்பட நூறு தேசியவாதிகள் இவ்வெதிர்ப்பில் கலந்துகொண்டனர். ஆகவே மிதவாதியான பாரதியை வங்காளப் புலவரான இராமப்பிரசாத்துடன் ஒப்பிடக்கூடியதாயுள்ளது. இந்நிலையில் பாரதி வணங்கும் தெய்வங்களாக, அவர்பாடிய தெய்வங்களாக முருகன், கண்ணன், பராசக்தி ஆகியோர் காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்கள் பல நிகழ்ந்த சங்ககாலத்தில் போர்த் தெய்வமாயிருந்த முருகன்; இஸ்லாமியரை எதிர்க்கத் தென்னகம் திரண்டபோது தமிழ்ப் புலவர்கள் பாடல்களில் வீரனாகத் திகழ்ந்த முருகன், திரும்பவும் பாரதி பாடல்களிற் தோற்றுகின்றான்.

சுற்றி நில்லாதே போ பகையே!
துள்ளி வருகுது வேல்"

என்று முருகவேலினால் ஆங்கிலப் பகைக்குச் சவால் விடுகிறார் பாரதி. அடுத்துப் பாரதநாட்டின் குலதெய்வமாகிய கண்ணனைப் பாரதி பாடியதன் தேவையைப் பார்க்கலாம். "தன்னை நெடுநாட்களான மறந்திருந்த பாரதநாடு திடீரென விழித்துக் கொண்டதும் அதன் எதிரே முதலிற்றோன்றிய ஒளி, கீதாசாஸ்திரத்தைக் கூறிப் பார்த்தனுடைய ரதத்தை வெற்றிபெற ஓட்டிய கண்ணபிரானுடைய உருவமே. அந்த உருவமானது நமது கவியின் இருதயத்திலும் எழுந்து அவருடைய கவிதைக்கு ஒரு சோபையைக் கொடுத்தது" அதர்மத்தை எவ்வகை யிலேனும் அழித்த கண்ணனை அதர்மமாகிய ஆங்கிலப் பகைக்கெதிராக ரதமோட்டுதற்குப் பாரதி திரும்பவும் அழைத்தார்போலும்! இவ்விரு தெய்வங்களைவிட அவர் பாடல்களுள் பெரும்பான்மையான பாடல்களிற் பராசக்தியே பாடப்பட்டுள்ளாள். பராசக்தியைப் பல்வேறு வடிவங்களில் அவர் பாடலில் நாம் கண்டுகொள்ளலாம்.

தன்னை அடிமையாக்கி வைத்துள்ள ஆங்கிலேய ஆதிபத்தி யத்திற்கெதிராக வீறிட்டெழுந்த பாரதநாட்டின் தென்கோடியில் வாழ்த்த பாரதி அப்பாரத நாட்டினையே பராசக்தியாகக் காண்கிறார். பாரதநாட்டில் முற்காலத்தில் திகழ்ந்த வீரம், கொடை, அன்பு, அறிவு ஆகியவையெல்லாம் பாரத ராணியாகிய பராசக்தியின் செயலென்பதே பாரதியின் நம்பிக்கை.

"காண்டீவ மேந்தி உலகினை வென்ற
கல்லொத்த தோளெவர் தோள்? - எம்மை
ஆண்டருள் செய்பவள் பெற்று வளர்ப்பவள்
ஆரியர் தேவியின் தோள்."

என்று பாரதியார் பாடுகிறார். நல்லறம் நாடிய மன்னரை வாழ்ந்த நயம் புரிவதோடன்றி, அல்லவ ராயினவரை விழுங்கி ஆனந்தக் கூத்தாடுபவள் எங்கள் பாரதத்தாயாகிய பராசக்தியெனப் பாரதி முழங்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரத நாட்டினைப் பராசக்தியாகக் கண்ட பாரதி, அந்நாட்டு மக்களையே பராசக்தி வடிவாகக் காண்கின்றார். அன்னை பராசக்தியின் துணைகொண்டு எந்தச் செயலையும் சாதிக்கலாமென்பது அவர் கொள்கை. அவளுக்குப் பிடித்தமான செயல்செய்வதே அவர் நோக்கம். அத்தேவியைப் பொதுமக்களாக உருவகிக்கும்போது அப்போது மக்களுக்குப் பிடித்ததைத்தானே அவர் செய்வார்? பாஞ்சாலி சபதத்திற்கு முன்னுரை எழுதிய பாரதி "தமிழ் ஜாதிக்குப் புதிய வாழ்வு தரவேண்டு மென்று கங்கணங்கட்டி நிற்கும் பராசக்தியே என்னை இத்தொழிலிலே தூண்டினாளாதலின், இதன் நடை நம்மவர்க்குப் பிரியந் தருவதாகு மென்றே நம்புகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார். பராசக்தி தன்னைத் தூண்டி அத்தொழிலைச் செய்யும் பாரதி அத்தொழிலைப் பொது மக்களுக்குப் பிரியந்தரும் எனக் குறிப்பிடுவதால் அப்பராசக்தியே அம்மக்கள் என்ற கருத்து ஏற்படும்படி கூறியுள்ளார்.

"முப்பது கோடி முகமுடை யாளுயிர்
மொய்ம்புற வொன்றுடையாள் - இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள் எனிற்
சிந்தனை யொன்றுடையாள்"

என்று பாரதநாட்டின் முப்பதுகோடி மக்களும் பராசக்தியின் அங்கமாகக் காண்கிறார். இன்னும் 'புதிய ரூஷியா' என்ற பாடலில் ஜார் அரசனுடைய வீழ்ச்சியைப் பற்றிப் பாடுகிறார். ஜார் அரசாட்சி வீழுதற்கு ரூஷியமக்கள் அக்கொடுங்கோலாட்சிக்கு எதிராகப் புரட்சிசெய்ததே காரணம். பொதுமக்களுடைய சக்தியினாலேயே அவ்வாட்சி தலை கவிழ்ந்தது. ஆனால் பாரதியோ.

"மாகாளி பராசக்தி உருஷிய நாட்டினிற்
கடைக்கண் வைத்தாளங்கே
ஆகாவென் றெழுந்தது பார்யுகப் புரட்சி
கொடுக்காலன் அலறிவீழ்ந்தான்"

என்று கூறுகின்றார். மாகாளி பராசக்தி கடைக்கண் வைத்த தாலேயே யுகப் புரட்சியும் கொடுங்காலன் வீழ்ந்ததுமாகிய காரியங்கள் நிகழ்ந்தன என்பது பாரதியின் அபிப்பிராயம். இங்குதான் பாரதி யினுடைய பராசக்தித் தத்துவத்தை நன்கு விளங்கிக்கொள்ள முடிகின்றது. பொதுமக்களுடைய சக்தியைப் பற்றிப் பாரதிக்கு நன்கு தெரியும். அவர் மனத்துக்கு ஆவேசம் ஊட்டும் ஒரு ஞானரூபமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பவள் பராசக்தி. நாட்டுப்பற்றுடன் தேசிய உணர்வின் வேகத்தில் இயங்கும் பாரதநாட்டுப் பொதுமக்களின் சக்தியைப் பராசக்தியாகப் பாரதி கண்டாரெனில் அதையிட்டு ஆச்சரியப்படுவதற்கில்லை. இவ்விடத்திற் பேராசிரியர் மகாதேவன் அவர்கள் கூறுவதைப் பார்க்க லாம். "நாட்டுப்பற்று இயற்கையாகவே தெய்வீகப் பக்தியாக மாறுதல டையுமென்பது இந்தியர்களின் அபிப்பிராயம். உண்மையில் நாட்டுப் பற்று என்பது எங்களைப் பொறுத்தவரையில் ஒரு சிறிய சமயப் பகுதி யாகவும் அடங்கும். "பெற்றதாயும் பிறந்தபொன்னாடும் நற்றவ வானிலும் நனிசிறந்தனவே", "பாரதமாதா" என்ற சொல் உணர்ச்சி வேகத்தினாலும் கலையுணர்வின் தாக்கத்தினாலும் விசுவரூபம் எடுத்து இறைமை என்ற பொருளுடையதாயிற்று. ஆகவேதான் பாரதியின் பாடல்களில் அநேக தோத்திரப்பாடல்கள் சக்தி அல்லது தாய் அல்லது பராசக்தி பற்றியன வாயுள்ளன. இக்கூற்றிலிருந்து பாரதி தேசிய உணர்வுடன் நாட்டின் விடுதலைக்கு உழைத்த மக்களையும் அந்நாட்டி னையும் பராசக்தியாகக் கண்டதன் காரணத்தினைக் கண்டுகொள்ளக் கூடியதாயிருக்கிறது. ஆகவேதான் ஜார் அரசன் வீழ்ச்சிக்குக் காரணமான பொதுமக்களின் எழுச்சியை மாகாளி பராசக்தியின் கடைக்கண் பார்வையெனக் கூறுகிறார் பாரதி.

பெண்களைப் பெண் தெய்வமாகிய பராசக்தியாகப் பாரதி கண்டதற்கு வலுவான காரணமுண்டு. அடிமைத்தளை நீக்க அன்னை பராசக்தியை வேண்டிநிற்கும் பாரதி அவளின் வடிவங்களாகிய பெண்கள் அவர் வாழ்ந்த நாட்களில் அடிமைத்தனத்துடன் நடத்தப் படுவதைக் கண்டு சீறினார். அவர்களைப் பேரன்னையாகவே படைத்து விடுகிறார்.

**"போற்றி, போற்றி, ஜயஜய போற்றி**
**புதுமைப் பெண்ணொளி வாழிபல் லாண்டிங்கே**
**மாற்றி வையம் புதுமையுறச் செய்து**
**மனிதர் தம்மை யமரர்க ளாக்கவே**
**ஆற்றல் கொண்ட பராசக்தி யன்னைநல்**
**லருளினா லொரு கன்னிகை யாகியே**
**தோற்றி யுண்மைகள் கூறிட வந்திட்டாள்."**

எடுத்த முயற்சிகள் வெற்றியடையவேண்டுமென்பது பாரதியின் பேரவா. நாடு சுதந்திரமடையவேண்டும்; பெண்கள் சுதந்திரத்துடன் புதுமைப் பெண்களாகத் திகழவேண்டுமென விரும்பினார். இவ்விரு விருப்பங்களும் நிறைவேறிவிட்டனவென்றே கனவுகண்டு பாடியுள் ளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்; 103746C
விசேட சேர்க்கைப் பகுதி

பாரதி. இவற்றிலே வெற்றியுறுவதற்குத் தேவையான சக்தியை மக்கள் மனத்திலே பதித்துவிடுவதற்காக அவற்றை எல்லாச் சக்திகளின் மூலாதாரமாகிய பராசக்தியின் வடிவங்களாகப் படைக்கிறார் எனக் கூறலாம்.

பராசக்தியின் அழிவுச் சத்தியிலேயே பாரதி அதிகமாக ஈடுபட்டுள்ளார். நெஞ்சைப் பதைபதைக்க வைக்கும் ஆங்கில அட்டகாசங் களை அழித்தொழிக்க வேண்டுமென்றெண்ணிய அவர் நெஞ்சுக் கொதிப்பின் பிரதிபலிப்பே அதுவென்று கூறினும் அமையும்.

நெஞ்சங் குமுறுகிறார் - கற்பு
நீங்கிடச் செய்யுங் கொடுமையிலே யந்தப்
பஞ்ச மகளிரெல்லாம் - துன்பப்
பட்டு மடிந்து மடிந்து மடிந்தொரு
தஞ்சமு மில்லாதே - அவர்
சாகும் வழக்கத்தை இந்தக் கணத்திலே
மிஞ்ச விடலாமோ - ஹே!
வீரகாளி சாமுண்டி காளி?

229113

எனப் பயங்கரமாக ஓலமிடுகிறார் பாரதி. கரும்புத் தோட்டத்துப் பெண்கள்படும் கஷ்டங்களுக்குக் காரணமாயுள்ளவை யாவற்றையும் அழித்தொழிக்க ஆவேசங் கொண்டதின் விளைவே இறுதியடிகளில், சக்தியின் அழிவு வடிவங்களாகிய சாமுண்டி காளியெனப் பெயர்பூண்ட பராசக்தியை அழைத்ததாகும். இவ்விடத்திற் பாரதி ஒருமுறை கூறிய ஒரு கூற்றினை மனங்கொள்ளுதல் நலம். "அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரின் சக்தி கொஞ்சமோ? அதிலே தேவி பராசக்தியின் அழிவுச் சக்தி குடிகொண்டிருக்கிறது, எனவே அந்த ஏழைப் பெண்ணும் மாகாளியின் அம்சம்தான்."

இயற்கையில் இறைமையைக் காண்பதென்பதென்னும் அம்சத்தினை, எந்த நாட்டுச் சமயப் பாடல்களுக்கும் பொதுவான ஒரு தன்மையெனலாம்.

"காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு - மாலையின்
றாங்குருவே போலும் சடைக்கற்றை மற்றவர்க்கு
வீங்கிருளே போலும் மிடறு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று காரைக்காலம்மையார் இயற்கையின் மாற்றங்களில் இறைவனின் திருக்கோலங்களைக் காண்கிறார். பாரதியும் இயற்கை யிலே "பராசக்தியைக் கண்டு பாடியுள்ளார். வேதநாயகம்பிள்ளை ஒருமுறை பராசக்தியே பாரதியாருக்குப் பாரத ராணியாகவும், இயற்கை யரசியாகவும், கவிதாராணியாகவும் காட்சியளிக்கிறாள்' என்றார். இயற்கைத் தோற்றங்களெல்லாம் பாரதிக்குப் பராசக்தியின் கதையையே கூறுகின்றன. சந்திரனொளியிலே அவளைக் கண்ட கவிஞர் மழைபொழி யும் வண்ணத்தைக் கண்டு.

"வானிருண்டு கரும்புயல் கூடியே
இழையு மின்னல் சரேலென்று பாயவும்
ஈரவாடை இரைந்தொலி செய்யவும்
உழையெலாம் இடையின்றி யிவ்வானநீர்
ஊற்றுஞ் செய்தி யுரைத்திட வேண்டுங்கால்,
மழையுங் காற்றும் பராசக்தி செய்கைகாண்
வாழ்க தாய்"

என்கிறார். அண்டசராசரங்களின் அடிநாதமாகப் பராசக்தி யைப் பாரதி எண்ணிப் பாடிய பாடல்களுள் "ஊழிக்கூத்து" உச்ச நிலையை அடைகின்றது. "கவிதையின் கருத்தம்சம் புவன அழிவில் பராசக்தி என்று பாரதி சதா குறிப்பிடும் பராசக்தியின் தொழிலைப் பற்றியது. அழிவில் துவங்கி மோனத்தில் இலகும் கடவுளைக்கண்டு. அழிவுச் சக்தி சினம் விலகி அவனைத் தொடுவதால் மீண்டும் சிருஷ்டிக்கு அதேசக்தி செயற்பட ஆரம்பிக்கிறது என்ற குறிப்புணர்த்தலோடு கவிதை முடிகிறது. நாட்டிலே நடைபெறும் அட்டூழியங்களாலும் ஏகாதி பத்தியக்காரரால் பிறந்த நாட்டிலேயே வாழமுடியாமல் ஒளித்து வாழவேண்டிய கதி ஏற்பட்டதோடன்றித் தன் வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் துன்பங்களையே கண்டதாலும் பாரதி ஒரு 'ஊழிக் கூத்தினை' முடித்துப் பராசக்தி புதிய வாழ்வொன்றினைச் சிருஷ்டிக்கப் போவதாகக் கனவு கண்டதன் விளைவே இப்பாடலெனவும் விளக்கங் கூறலாம்.

துன்பங்களில் அமிழ்ந்து மூழ்கிப்போய் விடாமல் பாரதியாரை வாழவைத்தது கவிதைதான் என்பது அவர் காலத்து வாழ்ந்த அவர் நண்பர்களின் அபிப்பிராயம். அக்கவிதையும் பாரதிக்குப் பராசக்திதான். இவ்வுண்மையினை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்ஙனம் சென்றிருந்தீர் - என
தின்னுயிரே யென்றன் இசையமுதே"

என்று தொடங்கும் பாடலிற் காணலாம் "திங்களைக் கண்டவுடனும் கடலலையைக், காற்றினைக் கேட்டவுடனும் கங்குலையும் காலை ஞாயிற்றையும் பார்த்தவுடனும் அமிழ்தெனப் பொங்குவாயே! அந்தப் புதுமையிலே நான் என்னுடைய துயர்களை மறந்திருக்கிறேன், ஆனால் நாலுமாதமாக என்னை நீ அன்பு வறுமையில் வீழ்த்தி விட்டாயே.

"தாயென வுமைப் பணிந்தேன் - பொறை
சார்த்தி நல்லருள் செய வேண்டுகின்றேன்
வாயினிற் சபத மிட்டேன் - இனி
மறக்ககில்லேன் எனை மறக்ககிலீர்"

என்றும் கவிதையாகிய அன்னையினை வேண்டுதல் புரிகிறார் பாரதி.

எல்லாவற்றையும் தொகுத்துப் பார்க்கும்போது பாரதியின் பாடல்களின் உணர்ச்சி வேகத்துக்குக் காரணம் அவருடைய சக்திக் கொள்கையாகும். இயற்கைச் சக்தியினதும் மனித சக்தியினதும் தேவைகளை உணர்ந்துகொண்ட பாரதி அச்சக்திகளின் ஒருமைப் பாட்டினைக் கண்டு கொள்வதற்காக அவற்றிற்குத் தெய்வீகத் தன்மை ஊட்டினாரோ என்றும் எண்ண இடமுண்டு. ஆனால் அவர் ஸ்ரீ அரவிந்தருடன் கொண்ட தொடர்பின் காரணமாகவே சக்தி வழிபாட்டில் தீவிரமாக ஈடுபடவேண்டியேற்பட்டதெனவும், அது அவர் கவிதைகளில் ஐக்கியமாகிவிட்டதெனவும் பேராசிரியர் மகாதேவனவர்கள் விளக்கிச் செல்கிறார். 'சோர்வுடன் போர், பயத்துடன் போர், அவநம்பிக்கையுடன் போர், வறுமையுடன் போர், செல்வச் செருக்குடன் போர், தீமையுடன் போர் இப்படி எத்தனையோ போர்களுக்குப் பட்டாளம் திரட்டி நடத்திக்கொண்டுபோக வேண்டியிருக்கிறதே அதுதான் என் தொழில்" என்று பாரதியார் ஒரு தடவை கூறியுள்ளார். இவ்வகைப்பட்ட போர்களின் மத்தியிலே முன்பு போர்த் தெய்வமாக விளங்கிய பராசக்தியினை இஷ்ட தெய்வமாகக்கொண்டு அவளே எல்லாமென்று, அவளையே சரணடைந்து பாரதி வாழ்ந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராசக்தியினைப் பாரதராணியாகவும், பொதுமக்களாகவும், இயற்கையன்னையாகவும், கவிதாரணியாகவுங் கண்ட பாரதி இவற்றிற்கு மேலால் தன் மனத்திலே நின்று இவற்றையெல்லாம் கவிதை வடிவங்களாகப் படைப்பதற்கு அவளே காரணமாகின்றாள் என்கிறார்.

"எனக்கு முன்னே சித்தர் பலரிருந் தாரப்பா
யானும் வந்தேனொரு சித்த னிந்த நாட்டில்
மனத்தினிலே நின்றிதனை எழுதுகின்றாள்
மனோன்மணி என் மாசக்தி வையத்தேவி"

எதைப் பாடினாலும் பாரதி சக்தியினை அதனிடையே எப்படியாவது புகுத்திவிடுகிறார். கண்ணன் பாட்டிற்கூட கண்ணம்மா - என் குழந்தை, கண்ணன் - என்தாய் போன்ற பாடல்களிற் பராசக்தியை நினைவில் வைத்தே பாரதி பாடியுள்ளாரென எண்ணக் கிடக்கின்றது. தன் வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்களுக்குச் சமாதானந் தேடிக் கொள்ள எடுத்த முயற்சியும், தன்நாட்டின் அவலநிலையைக் கண்டு ஆவேசங்கொண்டு துடித்தெழுந்தனவும் ஆகியவே அவர் பாடல்களிற் பராசக்தி உருவமாக இழைபோடுகின்றதென்று கூறுவது எவ்வளவு தூரம் பொருந்துமென்பது ஆராயற்பாலது.

துன்ப மிலாத நிலையே சக்தி
தூக்க மிலாக்கண் விழிப்பே சக்தி
அன்பு கனிந்த கனிவே சக்தி
ஆண்மை நிறைந்த நிறைவே சக்தி
இன்ப முதிர்ந்த முதிர்வே சக்தி
எண்ணத் திருக்கும் எரியே சக்தி
முன்புநிற் கின்ற தொழிலே சக்தி
முக்தி நிலையின் முடிவே சக்தி
(சக்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் விரும்பிய காளி தருவாள்

உலகில் வாழும் மக்களுக்கு வழிபாடு இன்றியமையாதது வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் துன்பங்களையெல்லாம் வழிபாட்டினால் வெல்லலாம். இந்த உண்மையனுபவத்தை உலகிற்கு எடுத்துக் கூறியவர் பலர். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற மக்கள் கவிஞனான மகாகவி பாரதி தனது பாடல்களில் தெளிவாக இவ்வுண்மையை விளக்கியுள்ளான். பாரதி பாடிய காளி பற்றிய பாடல்கள் வழிபாட்டின் பயனைக் கூறுகின்றன. அப்பாடல்களில் பாரதியின் பக்தியனுபவம் சிறப்பாக வெளிப்பட்டு நிற்கிறது. அதனை இன்றுள்ளவாறு அறிவது பயனுடையது.

நம்முன்னோர் நமது வாழ்க்கைக்குப் பயன்தரும் செல்நெறியாக வழிபாட்டை நமக்குக் காட்டிச் சென்றுள்ளனர். பக்திவழி நிற்போர் வாழ்வில் துன்பத்திற்கு இடமில்லை. பாரதியின் கவிதை வரிகள் இதனை நன்கு விளக்குகின்றன.

சக்தியென்று புகழ்ந்திடுவோம் முருகன் என்போம்
சங்கரனென் னுரைத்திடுவோம் கண்ணன் என்போம்
நித்தியமிங்கவள் சரணே நிலையென் றெண்ணி
நினக்குள்ள குறைகளெல்லாம் தீர்க்கச் சொல்லி
பக்தியினாற் பெருமையெல்லாம் கொடுக்கச்சொல்லி
பசிபிணிகளில்லாமற் காக்கச்சொல்லி
உத்தம நன்னெறிகளிலே சேர்க்கச் சொல்லி
உலகளந்த நாயகி தாள் உரைப்பாய் நெஞ்சே.
(பேதைநெஞ்சே)

பக்தியின் வழிநிற்பவருடைய குணநலன்களைப் பாரதி சுட்டிக் காட்டும்போது அவர்களுடைய நம்பிக்கையைக் காட்டுகிறான். நாம் செய்யும் தொழில்கள் யாவும் சக்தியின் அருளால் நடப்பவை. எனவே நாம் அதை உணர்ந்து சஞ்சலமின்றி வாழலாம் என்பதே பாரதியின் நம்பிக்கையாக இருந்தது. எனவே அதை மக்களுக்கு எடுத்துக் காட்டுவதே அவன் தொழிலாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி சிவனுடைய சக்தி - எங்கள்
அன்னையருள் பெறுதல் முக்தி
மீதி உயிர் இருக்கும் போதே - அதை
வெல்லல் சுகத்தினுக்கு யுக்தி

எனக் கவிதையால் நாட்டு மக்களுக்கு பக்தியூட்டுகின்ற தொழிலைப் பாரதி மேற்கொண்டான்.

பாரதி காளியைப் பற்றிப் பாடிய பாடல்கள் உள்ளத்தில் வழிபாடு பற்றிய உறுதியை நிலைநாட்டவல்லவை. காளிக்குச் சமர்ப்பணம், காளிதருவாள், மகா காளியின் புகழ், வெற்றி என அவன் இயற்றிய பாடல்கள் காளியின் வழிபாட்டு மரபையும், அருள்நிலை யையும் மக்களுக்கு நன்குணர்த்துவன. எனவே, அவை பற்றிய கருத்துக் களைப் பகிர்ந்து கொள்வது நற்பயன்தரும்.

**காளிக்குச் சமர்ப்பணம்**

இப்பாடலில் பாரதி காளியைத் தான் வழிபட்ட காலத்தைப் பற்றிப் பாடியுள்ளான்.

இந்த மெய்யும் கரணமும் பொறியும்
இருபத் தேழு வருடங்கள் காத்தனன்
வந்தனம் அடி பேரருள் அன்னாய்
வைரவீ திறற் சாமுண்டி! காளி!
சிந்தனை தெளிந் தேனினி யுன்றன்
திருவ ருட்கெனை அர்ப்பணஞ் செய்தேன்
வந்திருந்து பல பயனாகும்
வகைதெரிந்துகொள் வாழி யடிநீ!

மனித வாழ்க்கையில் உடலையும், தொழிலையும் உணர்வு களையும், வழிபாட்டுடன் இணைத்து வாழும் மரபு ஒன்று உண்டு. தமிழர்களது பண்பாட்டில் வழிபாடு தனியிடம் பெற்றிருந்தது. பாரதி இப்பாடலில் அந்த மரபைத் தானும் பின்பற்றுவதைக் கூறுகிறான். இருபத்தியேழு ஆண்டு காளியை வழிபட்டதையும் அவள் அருளைத் தெளிந்து கொண்டதையும் குறிப்பிடுகிறான். சிறுவயதிலிருந்து இளமைக் காலம்வரை தான் வழிபாட்டைத் தொடர்ந்ததைச் சொல்கிறான். தாய் தந்தையர் சிறுவயதிலே பயிற்றிய வழிபாட்டு நெறியை மறவாமல் தொடர்ந்து பயன்பெறவேண்டும் என்பதையே பாரதி எடுத்துரைக்கின் றான். உடம்பும், தொழிலும், உணர்வும் ஒன்றிய நிலையில் செய்யும் வழிபாடே சிறந்தது. செய்யும் தொழில் அவள் அருளால் நடைபெறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது என்ற உணர்வு வழிபாட்டின் அடித்தளமாகும். வெறுமனே மனித முயற்சியால் எந்தத் தொழிலையும் செய்யமுடியாது. மனிதன் தன்னுடைய உடலைத் தொழில் செய்யக் கூடியதாகப் பக்குவப்படுத்த வேண்டும். அதற்காக ஐம்பொறிகளையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் உணர்வு ஒன்றிய நிலையில் வழிபாட்டைச் செய்யமுடியும். இது பாரதியின் அநுபவம். ஆனால் எல்லோருக்குமே பொருந்தும்.

**காளி தருவாள்**

காளியை வழிபடுவதால் பெறும் நன்மைகள் இப்பாடலில் விளக்கப்பட்டுள்ளன. மனிதன் விரும்புகின்றவற்றை அவளே தருவாள். ஆனால், அந்த விருப்பங்கள் எவையென்பதைப் பாரதி விளக்குகிறான். மனிதன் விருப்பங்களில் முதன்மைபெறுவது எண்ணில்லா பொருட் செல்வமே. பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லையென வள்ளுவரும் கூறியுள்ளார். பாரதியும் அதனை நன்குணர்ந்து பாடியுள்ளான்.

**"எண்ணி லாத பொருட்குவை தானும்**
**ஏற்றமும் புவி ஆட்சியும் ஆங்கே**
**விண்ணில் ஆதவன் நேர்ந்திடும் ஒளியும்**
**வெம்மை யும்பெருந் திண்மையும் அறிவும்**
**தண்ணி லாவின் அமைதியும் அருளும்**
**தருவள் இன்றென தன்னை யென்காளி**
**மண்ணி லார்க்குந் துயரின்றிச் செய்வேன்**
**வறுமை யென்பதை மண்மிசை மாய்ப்பேன்.**

காளிதருவனவற்றை வரிசைப்படுத்திய பாரதி அவற்றால் தான் செய்யப்போகும் பணியையும் குறிப்பிட்டுள்ளான். தான்பெற்ற பொருளை மற்றவர் பயன்பெறக் கொடை செய்யவேண்டும் என்ற பக்தியின் உன்னதமான செயற்பாட்டையும் பாடியுள்ளான். அறிவின் துணையால் அமைதியை உருவாக்கலாம். காளி அருளால் பெற்ற ஏற்றத்தையும் புவி ஆளும் தகுதியையும் கொண்டு இந்த மண்ணில் வறுமையை ஒழிக்கவேண்டும் என்பது பாரதியின் குறிக்கோள். துன்பங்களிளெல்லாம் மிகக் கொடுமையானது வறுமையால் வரும் துன்பம். அதை இந்த மண்ணில் வாழும் மக்கள் துன்பத்தை வெல்வதற்கு வழிபாடுதான் தேவையானது.

வழிபாடு சிறந்தமுறையில் நடைபெற்றால் தானம், வேள்வி, தவம், கல்வி யாவும் இந்த மண்ணில் நிலைபெறும் காலத்துக்கேற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரிவளம் தரும். எல்லா வளமும் கிடைக்கும். இன்று திருக்கோயில் வழிபாடு பற்றிய தெளிவான சிந்தனை மக்களிடையே குறைவுபடத் தொடங்கியுள்ளது. பாரதி வாழ்ந்த காலத்தில் மேலைத்தேயப் பண்பாட்டின் செல்வாக்கால் வழிபாடு பற்றிய நம்பிக்கை குறைவு பட்டது. அதனால் மக்கள் வாழ்வில் வறுமை குடிகொண்டது. அதனால் பாரதி வழிபாடுபற்றிய உணர்வு மக்களிடையே மீண்டும் தழைக்கப் பாடினான்.

"ஞானமோங்கி வளர்ந்திடச் செய்வேன்
நான் விரும்பிய காளி தருவாள்"

எனத் தனது அசையாத நம்பிக்கையைப் பாரதி பாடினான். காளியின் புகழைப்பாடி வழிபாட்டு நெறியிலே மக்களை மீண்டும் ஈடுபடுத்தப் பணி செய்தான்.

**மகா காளியின் புகழ்**

காளி அன்பு வடிவமாகி நிற்பவள். இன்பவடிவாக நிற்பவள். என அவள் வடிவைக் காட்டுகிறான். பண்டைக் கால முனிவர் காளி பற்றி உரைத்தவற்றை மீண்டும் நினைவூட்டுகிறான்.

"காலமாம் வனத்திலண்டக் கோலமா மரத்தின்மீது
காளிசக்தி யென்ற பெயர் கொண்டு - ரீங்
காரமிட் டுலவுமொரு வண்டு - தழல்
காலும் விழி நீலவண்ண மூலஅத்து வாக்கனெனும்
கால்களா றுடையதெனக் கண்டு - மறை
காணுமுனி வோருரைத்தார் பண்டு.

இத்தோற்றம்; காளியை நாம் அணுகமுடியாத ஒரு நிலையில் இருப்பதைப் பாரதி உணர்ந்தான். அதனால் வடிவத்தை அன்பாகவும், அருளாகவும் காட்டுகிறான். முனிவர்களது வழிபாட்டுநெறி வேறுபட்டது. ஆனால், காளியின் திருவருளைப் பொதுவானதாகப் பாரதி பாடுகிறான். முனிவர் வழிபாட்டு நெறியை விளக்கி நிற்கிறான்.

"ஆதியாஞ் சிவனும்வன் சோதியான சக்தியுந்தான்
அங்குமிங்கு மெங்குமுள வாகும் - ஒன்றே
யாதினா லுலகனைத்தும் சாகும் - அவை
யன்றியோர் பொருளுமிலை அன்றியொன்று மில்லை
ஆய்ந்திடில் துயரமெல்லாம் போகும் - இந்த
அறிவுதான் பரமஞான மாகும்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளியினுடைய திருவடிகளை வழிபடுவோர் உள்ளத்தில் ஐயம் தேவையில்லை. உலகெங்கும் நிறைந்திருக்கும் பேராற்றல் கொண்ட மகா சக்தியின் ஒரு வடிவமே காளி. இதனைத் தெளிவாய் உணர்ந்தவரே நல்லறிவு பெற்றவராவார். வேதங்கூறும் வழிபாட்டுநெறிக்கும் இன்றைய வழிபாட்டுநெறிக்கும் எந்தவேறுபாடும் இல்லை. பாரதி தான் வாழ்ந்த காலத்தில் மக்கள் மனதில் வழிபாட்டு நடைமுறைகள் பற்றிய ஐயமிருப்பதை உணர்ந்தான். வழிபாட்டு நெறியில் நிற்பவர் யாவரும் உணர்வால் ஒன்றுபட்டவரே என்ற நிலைப்பாட்டை எடுத்துக் காட்டினான். எல்லாரும் சமமே என்ற உணர்வுதான் ஞானமென்று கூறினான். அந்த ஞானத்தை மக்கள்பெற வேண்டுமென்பதற்காகவே காளியின் புகழைக் கவிதையாக்கிப் பாடினான்.

**வெற்றி**

மனித வாழ்க்கையின் நோக்கம் எடுத்த காரியம் யாவினும் வெற்றிபெற வேண்டுமென்பதே. இந்த இயல்பைப் பாரதி பாடுகிறான். அதனைத் தானும் விரும்பிக் காளியை வழிபட்டபோது அவள் அந்த வெற்றியைத் தனக்கு அருளியதாகப் பாடியுள்ளார். இதனால் காளி வெற்றித் தெய்வமாக வழிபடப்படுகிறாள். அந்த வெற்றி எத்தகையதாக இருக்கவேண்டும் என்பதையும் பாடியுள்ளான்.

**"எண்ணு மெண்ணங்கள் யாவினும் வெற்றி**
**எங்கும் வெற்றி எதனினும் வெற்றி**
**கண்ணு மாயுயிருமென நின்றாள்**
**காளித் தாயிங் கெனக்கருள் செய்தாள்...."**

மனித மனங்களில் தோன்றும் எண்ணங்கள் யாவிலும் வெற்றி கிடைக்கவேண்டும். அதற்கு கண்ணும் உயிருமாய் அவளே இருந்து வழிகாட்டுகிறாள். எனவே இது நிச்சயம் கைகூடும் என்ற நம்பிக்கையை எல்லோருக்கும் ஊட்டுகின்றான். அந்த நம்பிக்கை அவர் அன்னையிடமே வேண்டிப் பெறுகிறான். மகாசக்தியின் விண்ணப்பமாக வேண்டுதல் செய்யும்போது வருமாறு கேட்கிறான்.

**"எண்ணிய முடிதல் வேண்டும்**
**நல்லவே எண்ணல் வேண்டும்"**

எண்ணங்கள் நல்லதாக இருப்பின் அவை நிறைவேறுவது உறுதி. பாரதி மக்களுக்கு இதையே சொல்ல விழைந்தான்.

பொது நூலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளியை வழிபடும் ஏனைய அம்சங்களையும் எடுத்துக் காட்டுகிறான்.

"மண்ணும் காற்றும் புனலும் அனலும்
வானும் வந்து வணங்கிநில் லாவோ?
விண்ணுளோர் பணிந் தேவல்செய் யாரோ?
வெல்க காளி பதங்களென் பார்க்கே"

உலகத்து நிலவும் ஐம்பூதங்களும் காளியை வணங்குகின்றன. விண்ணிலுள்ள தேவர்களும் அவளுக்குப் பணிந்து ஆவன செய்கின்றனர். காளியின் பரந்த எல்லையில்லாத ஆற்றலை இங்கே பாரதி காட்டு கிறான். இதன்மூலம் நாம் இயற்கையால் பெறும் துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கு அவளையே வணங்கவேண்டுமென வழிகாட்டுகிறான். இந்த பக்திநெறிக்கான வழிகாட்டலே இன்று இன்றியமையாதது. அதனையே எமது திருக்கோயில் வழிபாட்டு நடைமுறைகள் ஆற்றுப் படுத்துகின்றன. காளியை வணங்கிய பாரதியின் அநுபவம் எமக்கும் வழிகாட்டி நிற்கிறது. வணங்கினால் நாம் விரும்பிய அனைத்தும் அவள் தருவாள்.

"நின்னைச் சில வரங்கள் கேட்பேன் - அவை
நேரே இன்றெனக்குத் தருவாய் - என்தன்
முன்னைத் தீயவினைப் பயன்கள் - இன்னும்
மூளா தழிந்திடுதல் வேண்டும் - இனி
என்னைப் புதியவுயி ராக்கி - எனக்
கேதுங் கவலையறச் செய்து - மதி
தன்னை மிகத் தெளிவு செய்து - என்றும்
சந்தோஷங் கொண்டிருக்கச் செய்வாய்.
(யோகசித்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியும் முருகனும்

தேசிய மகாகவி எனப் புகழ்பெற்ற பாரதி ஒரு பக்திமான் என்பதை உணர்த்தப் பல பாடல்கள் உள. வழிபாட்டுச் சூழலிலே பிறந்து வாழ்ந்தவர் பாரதி. பாரதியின் தந்தை பிராமண குலத்திலே பிறந்தாலும் எட்டையபுரம் அரண்மனையில்தான் பணியாற்றியவர். பாரதிக்கு ஐந்து வயதாக இருக்கும்போதே தாய் இறைவனடி சேர்ந்துவிட்டார். 7 வயதில் பாரதி குலவழக்கப்படி உபநயனம் செய்விக்கப்படுகிறார். பாரதிக்குப் 16 வயதாகும்போது பாரதியின் தந்தையும் இறைவனடி சேர்ந்துவிடுகிறார். பெற்றோரின் இழப்புப் பாரதியை வழிபாட்டுச் சிந்தனைவழிச் செல்லவைத்தது. துன்பங்கள் தொடரும்போது வழிபாடுதான் அமைதி தரும். பாரதி பாடிய பாடல்களில் 'தெய்வப் பாடல்கள்' என ஒரு தொகுதிப் பாடல்களைக் காணலாம். ஏறக்குறைய 360 பாடல்கள் இவ்வாறு இனங்காணப்பட்டுள்ளன. இப்பாடல்களில் விநாயகர், முருகன், பராசக்தி, காளி, சரஸ்வதி, இலக்குமி, முத்துமாரி, கண்ணன் எனப் பல தெய்வங்கள் போற்றப்பட்டுள்ளன. அவற்றுள் முருகனைப் பற்றிய பாடல்களில் பாரதியின் புலமைத்துவம் வேறுபட்டதாக உள்ளது.

பாரதி பாடிய விநாயகர் மணிமாலைக்கு அடுத்து முருகனைப் பற்றிய பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. 8 பாடல்கள் அடங்கியுள்ளன. அவற்றைத் தனித்தனியாக நோக்கும்போது பாரதியின் முருகன்பற்றிய கருத்தை நன்குணரமுடிகிறது. தனக்கு முன்னே தோன்றிய முருகன் பாடல்களைவிடப் பாரதி தனது பாடல்களை வேறுபட அமைத்துள்ளார். முருகன் மயில் மீதமர்ந்து வடிவேலுடனே வருங் காட்சியைக் காண்கிறார். துன்பங்கள் தீர முருகன் மயில் மீதேறி விரைந்து வருவான். கேட்பதை உடனே தந்திடுவான். முருகன் கலியுக தெய்வம். எனவே கேட்க வேண்டியவற்றையெல்லாம் கேட்க வழிகாட்டுகிறார்.

"வருவாய் மயில் மீதினிலே
வடிவேலுடனே வருவாய்!
தருவாய் நலமும் தகவும் புகழும்
தவமும் திறமும் தனமும் கனவும்"

229113

மனித வாழ்வுக்கு வேண்டியவற்றைப் பாடலிலே வரிசைப் படுத்தியுள்ளார். நலம், தகுதிப்பாடு, புகழ், தவம், திறன், தனம், கனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் குறிப்பிட்டுள்ளவை எல்லாமே எல்லோரும் விரும்புவது. முருகனடியார்கள் பலரும் துன்பத்தை வந்துகூறி வணங்கி நிற்பர். ஆனால் பாரதியோ முருகனை வழிபட அவன் கோயில் வரமுடியாமல் அடைபட்டுக் கிடப்பவர்களுக்காக வேண்டுதல் செய்து அந்நியராட்சி யின்போது சிறையிலடைபட்டுக்கிடந்து சுதேசிகளுக்காகவும் முருகனை வழிபட்டுப் பாடியுள்ளார். அசுரர்களை அழித்த முருகன் அந்நியரிட மிருந்து தனது தேசத்து மக்களையும் விடுதலை செய்வான் என்ற நம்பிக்கை பாரதியிடமிருந்தது முருகன் தன்னை நினைந்து கவலைக் கடலில் ஆழ்ந்திருப்போரை மீட்டருள் செய்தவன். தேவர்கள் துயருற்ற போது அவர்களைக் காப்பாற்றிய அருட்செயல் பாரதியின் மனத்திற் படிந்திருந்தது. பிணிகள் யாவையும் தீர்ப்பவன் முருகன். பிணி என்பது தீராத நோயாகும். அந்நோய் ஒருவனைப் பிணித்துக் கொண்டு நீண்ட காலமாக வருத்திக் கொண்டிருக்கும். முருகனை வழிபட்டுத் தீராத பிணியிலிருந்து விடுபட்ட அடியார் பலருளர். இன்று தீராத பிணியுடை யோர் முருகனை நினைந்து வழிபட்டுப் பின்னர் நேர்த்திக்காக; காவடி, பாற்செம்பு, கரகம் என்பவற்றை எடுப்பர்.

முருகனுடைய வேலைப் பாரதி 'பொறி வேல்' எனக்குறிப்பிட்டு உள்ளார். சுடர் வேலையுடைய முருகன் சூரனை வதம் செய்த வேல் அது. எனவே அதற்குச் சிறப்புண்டு. ஈழநாட்டிலே பல முருகன் கோவில்களில் வேலாயுதமே கருவறையில் வைத்து வழிபடப்படுவது குறிப்பிடத் தக்கது.

**வேலன் பாட்டு:**

பாரதி பாடிய வேலன் பாட்டிற் சிறப்பாக வள்ளிபற்றிய செய்திகள் இணைக்கப்பட்டுள்ளன.

**"சொல்லினைத் தேனிற் குழைத்துரைப்பாள் சிறு**
**வள்ளியைக் கண்டு**
**சொக்கி மரமென நின்றனை**
**தென்மலைக் காட்டினிலே"**

என்னும் பாடற் பகுதியில் பாரதி வள்ளியின் பேச்சினிமையைப் பற்றிக் கூறும்போது 'சொல்லினைத் தேனிற் குழைத்தளிப்பாள்" எனக் குறிப்பிட்டுள்ளார். வள்ளியின் பேச்சினிமையைப் பற்றி விளக்கத் தேனின் இனிமையைச் சேர்த்துள்ளார். பாரதியுடைய கவிதையில் தேன் என்னும் சொல் சிறப்பாகப் பயன்படுத்தப்படும். "செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே" என்ற அடிகளையும் குறிப்பிடலாம். வள்ளியின் பேச்சிலே இனிமை. அதை எல்லோரும் உணரவேண்டும். தேனின் இனிமையை எல்லோரும் உணர்ந்திருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் பாரதி சொல்லவந்த கருத்தை எல்லோருமே விளங்கிக் கொள்வர். பேச்சினிமையால் முருகன் வள்ளியைக் கண்டு சொக்கி நின்றதாகப் பாரதி பாடுவது புதியதொரு உணர்வினைத் தருகிறது. வள்ளி பற்றிய இன்னொரு வர்ணனையும் உண்டு. வள்ளியுடைய பல் வெண்முத்தைப் பழித்திடும் என்று பாடியுள்ளார். பார்ப்பனக்கோலத்தில் முருகன் வள்ளியின் கரந்தொட்டான். கிள்ளைமொழிச் சிறுக்கி என மேலும் வள்ளி வர்ணிக்கப்பட்டுள்ளாள். அவள் வள்ளி என்னும் பெயர்ச் செல்வம். கேடற்ற வாழ்வு, இன்ப விளக்கு. எனப் பாரதி வகுத்துக் காட்டும் படிமங்கள் இன்றைய வாழ்வியலிற் பொருத்திப் பார்க்கக் கூடியவை. துள்ளிக் குலாவித் திரியும் சிறுவனமானைப்போலத் தினைத் தோட்டத்திலே முருகன் வள்ளியைக் கண்டு மணஞ்செய்த வரலாறு பாரதி கவிதையிற் சிறந்த சொல்லோவிய மாகக் காணப்படுகிறது. முருகனுடைய தோற்றத்தைக் கண்ட மனநிலையை வருமாறு கவிதையாக்கியுள்ளார்.

"ஆறு சுடர்முகங் கண்டு விழிக்கின்ப
மாகுதே - கையில்
அஞ்ச லெனுங்குறி கண்டு
மகிழ்ச்சியுண் டாகுதே"

முருகனின் ஆறுமுகங்களையும் கண்டு வியவாதவர் யாரு மில்லை. அருணகிரிநாதர் முருகனின் ஆறுதிருமுகங்களையும் ஆறு தொழி லாற்றும் திருமுகங்களாகக் கண்டு பாடியுள்ளார். பாரதி கண் நிறைந்த காட்சியாக ஆறு திருமுகங்களையும் காட்டியுள்ளார். முருகன் கையிலே தாங்கிய அஞ்சேல் என்னும் குறிப்பும் அவருக்கு மகிழ்வையுண்டாக் குகிறது. எம்மைக் காக்க இறைவன் காட்டும் அபயகரம் எமக்குப் பாதுகாப்பைத் தருகிறது. அவுணர்களையழித்துத் தேவர்களைக் காத்ததுபோல எம்மையும் முருகன் காப்பான் என்ற நம்பிக்கையைத் தருகிறது. 'வைரவி பெற்ற பெருங்கனலே' எனப் பாரதி முருகனை அறிமுகம் செய்வது வித்தியாசமாக உள்ளது. முருகன் சிவனின் நெற்றிக் கனலிலே ஆறு சுடராகத் தோன்றி ஆறுகுழந்தைகளாக வளர்ந்தவன். ஆனால் பார்வதிதேவி ஆறு குழந்தைகளையும் ஒன்றாகச் சேர்ந்து வாரி அணைத்தபோது ஆறுதிருமுகங்கொண்ட ஒரு திருமுருகனானான். எனவே இன்று நாம் காணும் ஆறுமுகன் வைரவி பெற்றவன் எனப் பாரதி விளக்கந்தந்துள்ளார். முருகன் வேலைத் தாங்கி நிற்பதால் வேலவன் எனப் பெயர் பெற்றான். வேலினது வடிவம் தனித்துவமாக இருப்பதால் 'வடிவேலன்' எனவும் பெயர் பெற்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலில் வேலன் வள்ளியை மருவிய செய்தி சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது. கந்தபுராணம் கூறும் முருகன் அருட்செயல்களை பாரதி எளிய கவிதை நடையிலே பக்தி உணர்வோடு கூறியுள்ளார். பாரதி பாடும் தெய்வீகம் பாமர மக்களையும் பக்தி வசப்படுத்தும் பண்புடையது. அடியவர்களை நிதமும் காவல் செய்யும் முருகனுடைய உருவத்தை வழிபடும் வழிபாட்டு மரபோடு ஈழநாட்டிலே வேலையே முருகன் திருத்தோற்றமாகக் கருதி வழிபடும் மரபு ஒன்று தோன்றி இன்றுவரை நிலைத்துள்ளமை இதற்குச் சான்றாகும்.

**கிளிவிடு தூது**

பாரதி பாடிய கிளிவிடு தூது ஆடல் மரபில் கவிதையாகப் பயன்படும் பாடலாகும். முருகனை வரும்படி கூறிக் கிளியைத் தூது விடுவதாக அமைந்த பாடல். பறவைகளைத் தூதுவிடும் மரபு வடமொழி இலக்கியங்களிலும் தமிழ்மொழி இலக்கியங்களிலும் காணப்படுகிறது. அப் பண்பைப் பாரதியும் கையாண்டு பாடியுள்ளார். பறவைகளிலே பேச்சுப் பயிற்சியால் சிறப்புப்பெற்ற பறவை கிளியாகும். ஆனால் இவ்வாறு பேச்சுத்திறன் பெற்ற கிளியால் தூதுரைக் முடியுமா என்ற எண்ணம் பாரதியிடம் தோன்றப் பாடல் உருவெடுத்துள்ளது.

சொல்ல வல்லாயோ? - கிளியே
சொல்ல நீ வல்லாயோ?

என்ற கேள்வியுடனேயே கவிதை தொடங்குகிறது. கிளியிடம் இவ்வாறு வினவுவதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். ஒன்று கிளியிடம் போதுமான பேச்சாற்றல் உள்ளதா என்ற ஐயப்பாடு. மற்றது கூறப்போகும் அந்தரங்கமான விடயத்தைப் பக்குவமாக எடுத்துச் சொல்லும் பக்குவம் உண்டா என்பது. பாரதியின் இப்பாடல் தூதுவிடும் பண்பை நவீன காலத்திற்கும் அறிமுகம் செய்யும் முயற்சியாக உள்ளது. சொல்லப்படும் விடயம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

"வல்லவேல்முரு கன்தனை - இங்கு
வந்து கலந்து மகிழ்ந்து குலாவென்று" சொல்லவல்லாயோ?

முருகனிடம் நேரிற் சென்று இதைச் சொல்லவேண்டும். முருகன் இங்கு வந்து கலந்து மகிழ்ந்திடவேண்டும் என்ற காதலுணர்வைக் கூறவேண்டும். மானிடரிடம் இதைச் சொல்லிவிட முடியாது. ஏனெனில் அவர்கள் என் உணர்வுகளைக் கொச்சைப்படுத்தி விடுவார்கள். பாரதியின் இந்தத் தெய்வீகக் காதல் முன்னைய அடியார்களிடமும் இருந்துளது. தெய்வத் தோடு நெருக்கமாக உறவாடும் ஓர் அற்புதமான பக்தியுணர்வு இது. சம்பந்தர், அப்பர், ஆண்டாள் போன்றவர்கள் பெற்றிருந்த தெய்வீக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபவம் இது. அதனையே பாரதியும் பெற்றிருந்தார். அவர் தூது யாரிடம் போய்ச்சொல்லவேண்டும் என்பதை வருமாறு விளக்குகிறார்.

தில்லை யம்பலத்தே - நடனம்
செய்யும் அமரர் பிரான் - அவன்
செல்வத் திருமகனை - இங்கு வந்து
சேர்ந்து கலந்து மகிழ்ந்திடுவாயென்று (சொல்ல)

தில்லையம்பலத்திலே திருநடனம் செய்கின்ற தேவர்களின் ஒப்பற்ற தலைவன் சிவன். அவனுடைய செல்வமகன். திருமுருகன் எனத் தெளிவாக அறிமுகம் செய்து தூது போகும்படி கேட்கிறார். அத்துடன் இரண்டு அந்தரங்கமான செய்திகளையும் நினைவுபடுத்தும்படி சேர்த்துக்கூறுவதாகக் கவிதை பாடியுள்ளார்.

அல்லிக் குளத்தருகில் ஒருநாள் அந்திப்பொழுதில் முல்லைச் செடியருகே இருவரும் தனித்திருந்த வேளையை நீ நினைவுபடுத்த வேண்டும். அதை ஏன் மறந்திருக்கிறாய் என வினவி வரவேண்டும். காதலர் இருவருடைய மிகவும் அந்தரங்கமான உரையாடலை இப்படி வெளிப்படையாகப் பேசலாமா? ஆனால் தூதுபோகும் கிளி இருவரு டைய நெருக்கமான தொடர்பையும் நன்கறியவேண்டும். அப்போது தான் தெளிவாய் எடுத்துரைக்க முடியும். இதேபோன்று இன்னொரு செய்தி. பாலைவனத்திடையே இருவரும் நடந்து செல்லும் போது வேலின்மீது ஆணையிட்டுக் கூறியதையும் நீ நினைவுபடுத்த வேண்டும். கவியுள்ளம் முற்றுமுழுதாக மானிட உணர்வின் வழிநின்று தெய்வீக உணர்வை வெளிப்படுத்தும் புலமைத்துவம் இது. முருகன் சொன்ன ஆணையைப் பாரதி ‘விந்தை மொழிகள்’ என்று குறிப்பிட்டுள்ளார். அந்த மொழிகள் அவருக்குப் புதுமையாக இருந்தது. கையைப் பற்றி நடந்து செல்லும்போது திடீரென உறுதிமொழி சொன்ன முறைமை அவரைப் பெருவியப்பிலாழ்த்திவிட்டது. பாரதி தன்னை ஒரு காதலியாகப் பாவனை செய்து பாடிய பாட்டு இது. கண்ணன் பாட்டி லும் இந்த உணர்வு பேசப்பட்டுள்ளது. ஆற்றங்கரையதனில் அழைத்துத் தனியிடத்தில் பேசியவை நினைவூட்டப்படுகின்றன. ஆனால் இங்கு ஆணையிட்டதாகப் பாவனை செய்யப்பட்டமை சிறப்பானதாகும்.

காதலுணர்வைப் பக்தியுணர்வாக்கிப் பாடுவது கத்திமுனையில் நடப்பது போன்றது. பாரதியின் கவிதை இப்பண்பு நிலையை ஆண்டாளின் பாடல்களிலிருந்தே பெற்றிருக்க வேண்டும். கண்ணன் மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட பக்தியை மானிடக் காதலில் வைத்துப்பாடும் மரபை ஆண்டாள் தோற்றுவித்தாள். அந்த மரபைப் பாரதியும் முருகன் பற்றிய பாடல்களில் கையாண்டுள்ளார். தெய்வீக அநுபவத்தை மானிடர் விளங்கிக் கொள்வதற்கு இவ்வுத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது.

**முருகன் பாட்டு**

இப்பாடலிலே முருக வழிபாடு செம்மையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பாரதியின் தெய்வீக அநுபவம் முன்னோர் மரபு வழியே தொடர்ந்திருப்பதை இப்பாடல் மிகத் தெளிவாகப் புலப்படுத்தி நிற்கிறது. 4 பாடல்களில் முருகனது அற்புதங்களும் அருட்செயல்களும் அழகாகப் பாடப்பட்டுள்ளன. முருகனின் வீரத்திருவிழிப் பார்வையும் வெற்றிவேலும் மயிலும் முதலிலே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் திருக்காட்சியை மனதில் நினைந்து வாழ்வோர் எல்லாத் துன்பத்தையும் வெல்லும் பேராற்றல் பெறுவர். கந்தன் தருகின்ற ஊக்கம் செயற் பாடுகளைச் சிறப்பாகச் செய்யத் தூண்டும்.

முருகன் உறையுமிடம் மலைப்பிரதேசம். அவன் குறிஞ்சிக் கடவுள். குன்றுதோறும் ஆடல் செய்யுங்குமரன். வேட்டுவக் கனியான வள்ளியை விரும்பி மணந்தவன். தவவேடம் புனைந்து திரியும் தெய்வம். முத்தமிழைத் தந்தவன். இந்திரன் மகளை மணந்தவன். அசுரனை மாய்த்ததற்காக அவனுக்கு வழங்கப்பட்ட பரிசுதான் தேவயானை. எனவே இருதேவியரை முருகன் பெற்ற வரலாற்றை முருகன் பாட்டிலே பாரதி விளக்கிச் சென்றுள்ளார்.

தமிழ்ப் பாவலருக்கு அருள் செய்யும் முருகன் பாரில் அறமழை பெய்யச் செய்பவன். ஆண்மையையும் வீரத்தையும் அனைவருக்கும் ஊட்டும் அருள் வள்ளல். மறையோர் தீவளர்த்து அவன் சேவகத்தின் புகழை நிலைநாட்டி வருகின்றனர். முருகனை வழிபடவேண்டிய இடத்தைக் குறிப்பாகப் பாரதி பதிவு செய்துள்ளார்.

"நீ வளருங் குரு வெற்பிலே - வந்து
நின்று நின் சேவகம் பாடுவோம் - வரம்
ஈவாள் பராசக்தி யன்னைதான் - உங்கள்
இன்னருளே என்று நாடுவோம்"

மலையிலே முருகனுடைய திருக்கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. பழனிமலை, திருபரங்குன்றம், பழமுதிர்சோலை, திருத்தணிகை, சுவாமிமலை என்னும் 5 படைவீடுகளும் மலைப்பிரதேசமாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. பராசக்தியின் இன்னருளை முருகன் மூலமாகவே பெறலாம். முருகனை வழிபாடு செய்வதே எமக்கு வேலையெனப் பாரதி பாடியுள்ளார்.

"தோகை மேல் உலவுங் கந்தன்
சுடர்க்கரத் திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை
வணங்குவது எமக்கு வேலை"

என்ற கவிதை இவ்வழிபாட்டிற்குச் சான்றாக உள்ளது. இங்கு 'தோகை' என்பது ஆண்மயிலைக் குறிக்கிறது. சூரன் உடலை முருகன் வேல் கூறுசெய்த போது அது இரண்டாகப் பிளந்து சேவலும் மயிலுமாக மாறிற்று எனக் கந்தபுராணம் கூறுகிறது. அந்த மயிலையே முருகன் தனக்கு வாகனமாக்கினான். அதனால் 'மயில் வாகனன்' எனச் சிறப்புப் பெயர் பெற்றான். அந்த வாகனம் பற்றிப் பலபுலவர்கள் பாடியுள்ளனர். தோகைமேல் ஏறி உலவுங் கந்தன் எனப் பாரதி குறிப்பாக ஆண்மயி லேறும் பெருமாள் என்பதைச் சுட்டியுள்ளார். மயில் என்பது பெண் மயிலைக் குறிப்பதால் தோகை என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். 'ஏறிய மஞ்சை வாழ்க' எனச் சிறப்பாகவும் பாடல் உண்டு. இங்கு மஞ்ஞை என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. முருகன் திருத் தோற்றத்தைப் பாடியவர்கள் தத்தம் உணர்விற்கும் கவித்துவத்திற்கும் ஏற்ப வேறுபட்ட சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர். பாரதியும் மயிலையும் தோகையை யும் பயன்படுத்தியுள்ளார். முருகனுடைய வேல் எப்போதும் வெற்றி வாகையே சூடிவருவதால் அதனை வணங்கும் வழிபாட்டு மரபும் தோற்றம் பெற்றது. எனவே எம்முடைய அனைத்துச் செயற்பாடுகளிலும் வெற்றி பெறவேண்டுமாயின் வேலை வணங்குவதையே எமது வேலையாக ஆக்கிக் கொள்ளவேண்டும். ஈழநாட்டில் கோயிற் கருவறையில் மூலமூர்த்தியாக வேலை வைத்து வழிபடுவதற்கு ஒரு விளக்கமாக இப்பாடல் அமைந்துள்ளது.

**வள்ளிப் பாட்டு**

வள்ளிப்பாட்டு என்ற தலைப்பில் இருபாடல்களைப் பாரதி பாடியுள்ளார். இவ்விருபாடல்களிலும் பாரதி வள்ளியைத் தனது காதலியைப் போலப் பாவனை செய்து பாடியுள்ளார். பாடல்களில் உலகியற்காதலுணர்வு பேசப்பட்டுள்ளது. ஒரு ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் கண்டு விருப்புற்றுச்சேரும் படிமுறைச் செயற்பாட் டைப் பாட்டாக்கியுள்ளார். பண்டைத் தமிழிலக்கியமான சங்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களிலே அகத்திணை மரபையே பாரதியும் இப்பாடல்களிலே பயன்படுத்தியுள்ளார். மலையோரம் வள்ளியும் அவரும் சந்திக்குமிடம் வீரத்தமிழால் உரையாடி இன்புற்றதையும் கூந்தற்பரப்பிலே சாய்ந்து இதழீரத்திலும் முலையோரத்திலும் அன்பு சூடி நெஞ்சாரத்தழுவி நின்றதைப் பாடல் காட்சிப்படுத்தியுள்ளது. இவ்வாறு மானிடக் காமச் செயற்பாட்டைத் தெய்வீக நிலையாகக் கூறுவது விமர்சனத்துக்குள்ளா கியது. உடல்ரீதியான தொடர்பு தெய்வத்துடன் ஏற்படுத்த முடியாது. உள்ளத்தால் மட்டுமே தொடர்புறமுடியும். இதனையே பாரதி பாடலிற் கூறியுள்ளான். 'அமரநிலை பெற்றதன் பயன்' எனத் தன் தெய்வீக உணர்வைப் பாரதி விளக்கியுள்ளார். ஆண்டாளின் மனநிலையிலேயே பாரதியும் இருந்துள்ளார்.

"கொள்ளையிலே யுனைக் கூடி முயங்கிக்
குறிப்பினிலே யொன்றுபட்டு - நின்றன்
பிள்ளைக் கிளிமென் குதலையிலே மனம்
பின்னமறச் செல்லவிட்டு - அடி
தெள்ளிய ஞானப் பெருஞ் செல்வமே நினைச்
சேர விரும்பினன் கண்டாய்!"

வள்ளியின் பேச்சிலே மனத்தைச் செல்லவிட்டு அதன் மூலம் தெளிந்த ஞானத்தைப் பெறவேண்டும். பாரதியின் பக்தி மேற்பார் வைக்குக் காமவயப்பட்டதாகத் தோன்றினாலும் ஆழநோக்கில் ஆழமான தெய்வபக்தியாகவே உள்ளது. ஞானத்தோடு சேரும் விருப் பமே அவரிடம் இருந்தது.

அடுத்த பாடலில் வள்ளியின் மேனிதனை விடமுடியாது லீலைகள் செய்ததைப் பாடியுள்ளார்.

"எட்டுத் திசையும் ஒளிர்ந்திடும் காலை
இரவியைப் போன்ற முகத்தாய் - முத்தம்
இட்டுப் பலமுத்த மிட்டுப் பலமுத்தம்
இட்டுனைச் சேர்ந்திட வந்தேன்"

என விளக்கமாக உணர்வைப்புலப்படுத்துவது அவரின் புலமைத்துவத் தின் சிறப்பையே காட்டி நிற்கிறது. வள்ளிபைப் பற்றிப் பாரதி இவ்வாறு பாவனை செய்வதற்கு வள்ளி ஒரு குறமகளாக இருந்ததும் ஒரு காரணமாகலாம். ஏனெனில் தெய்வயானை மீது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதிக்கு இப்படியொரு பக்தி ஏற்படவில்லை. அவர் அவ்வாறு பாடமுற் படாமைக்குப் பிறிதொரு காரணத்தையும் கூறலாம். வள்ளி குறவர் குலப்பெண்ணாகையால் மானிட குலத்தைச் சேர்ந்தவள். தேவை தெய்வயானையோ தேவர்குலப்பெண். ஆதலால் மானிட குலப் பெண்மீது மானிட குலத்தவரான பாரதி காதல் கொண்டதாகக் கவிதை பாடுவது எளிதாயிற்று.

வள்ளி பற்றிய இரண்டாவது பாட்டு இதற்கு நல்லதொரு சான்றாக உள்ளது.

**"எனை யாள்வாய் வள்ளீ வள்ளீ**
**இளமயிலே என் இதயமலர் வாழ்வே**
**கனியே சுவையுறுதேனே**
**கலவியிலே அமுதனையாய் - (கலவியிலே)**
**தனியே ஞான விழியாய் நிலவினில்**
**நினை மருவி வள்ளீ வள்ளீ**
**நீயாகிடவே வந்தேன்."**

இப்பாடலில் பாரதி வள்ளியுடனான உடலுறவு பற்றிக் குறிப்பிடுவது பக்தியுணர்வுக்கு மாறுபட்ட நிலையாக இருக்கிறது. ஆனால் ஒரு காதலனும் காதலியும் இணையும் உணர்வு நிலையைப் பக்தி நிலையில் இணைத்துக் காட்டும் பக்குவம் எல்லோருக்கும் ஏற்படாது. பாரதியின் இந்த வள்ளிப்பாட்டு ஒரு துணிகரமான செயற்பாடு. பாரதிக்கு முன்னர் யாருமே ஆண்கள் பெண் தெய்வத்தைக் காதலியாகப் பாவனை செய்து கவிதை பாடவில்லை. ஆழ்வார்களும் நாயன்மார்களும் கண்ணனையும் சிவனையும் தமது காதலராகப் பாவனை செய்து பாடியுள்ளனர். பாரதியின் வள்ளிப்பாட்டு ஒரு மரபு மீறிய கவிதையாக உள்ளது. வள்ளி மீது மையல் கொண்டதால் அவளுடன் மிக நெருக்கமாக இருப்பதாகக் கற்பனை செய்து பாடிய பாட்டு வள்ளிப் பாட்டு.

வள்ளியின் தெய்வீகக் குணங்களை முருகன்பாடல்களிலும் அவர் சுட்டவில்லை. வேடக்கனியென்று குறிப்பிடுகிறார். தீய அசுரனை அழித்துத் தெய்வயானையை முருகன் மணம் செய்தான். ஆனால் வள்ளியைத் தினைத் தோட்டத்துப் பெண்ணாகக் கண்டு விரும்பி அண்ணன் கணபதியின் உதவியுடன் மணந்து கொண்டான். தமிழ்த் தெய்வமான முருகன் வழிபாடும் ஆரியத் தெய்வமான ஸ்கந்தன் வழிபாடும் ஒன்றிணைந்தபோதும் வள்ளி, தெய்வயானை என இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியருடன் முருகனை வழிபடும் நடைமுறையும் தோன்றியது. குறிஞ்சிக் கடவுளான குமரனுக்கு குறிஞ்சி நிலத்திலே வாழ்ந்த வள்ளி மனைவியாக அமைவதே ஏற்பு. கொற்றவை புதல்வனான முருகன் கந்தபுராணத்தில் சூரனை அழித்த வீரனாகப் படைக்கப்பட்டுள்ளான். தேவயானை வள்ளியென இரு மனைவியருடன் காட்சி தருகிறான். எனவே பாரதி இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து வள்ளிப் பாட்டை எழுதியுள்ளார்.

பக்தி நிலையில் பாரதி கண்ணன் மீது அதிக பாடல்கள் பாடியுள்ளான். ஆனால் முருகன் பாடல்கள் தொகையில் குறைவாக இருந்தாலும் குறிப்பில் புதுமையான பாடல்களாகும். தெய்வ சிந்தனையில் ஒன்றிப் போகும்போது மானிட உருவில் தெய்வத்தைக் காண்பதும் ஒரு மனப்பக்குவமாகும். தன்னை முற்றாகவே அந்த உணர்வோடு ஒன்றுவித்துச் செயற்படும் தன்மை இதுவாகும். முருகன் கலியுக தெய்வம் எனப் போற்றப்படுகிறான். குழந்தையாக குமரனாக, விருத்தனாக மாறிவருபவன். அந்தவகையிலும் முருகன் பற்றிய தொன்மையான கதைகளும், கர்ணபரம்பரைக் கதைகளும், புராணக் கதைகளும் தமிழ்நாடெங்கும் பரவியிருந்தன. அவற்றையெல்லாம் உள்வாங்கிப் பாரதி முருகன் பாடல்களைப் பாடியுள்ளார். பாரதி முருகனைப் பற்றிப் பாடுவதற்கு இன்னொரு காரணமும் உண்டு. முருகன் தமிழ்த் தெய்வம். 'தமிழ்ப்பாவலர்க்கு இன்னருள் செய்குவான் முருகன்' எனப் பாடிய பாரதி முருகனைப் பற்றிப் பாடவேண்டும் என எண்ணிப் பாடிய பாடல்களே முருகன் பாடல்களாக அமைந்தன. வானவர் துன்பத்தை மட்டுமல்லாமல் விண்ணவரை வணங்கும் மண்ணிற் பிறந்தவரையும் துன்பத்திலிருந்து காப்பாற்றுவான். பாரதியின் தெய்வ நம்பிக்கையை முருகன் பாடல்களிலும் முழுமையாகக் காணலாம். முருகனை வழிபட விரும்புவதைப் பாடலிலே குறிப்பிட்டுள்ளார். மலையிலே உறையும் முருகுன் தமிழர் தெய்வமாகத் தனித்துவமான தெய்வமாகப் போற்றப்பட்டதை பாரதி பதிவு செய்ய முனைந்ததை இதனால் உணரமுடிகிறது.

பாரதியின் தெய்வீகப் பாடல்களில் கண்ணன் பற்றிய தெய்வீக அநுபவத்தைத் தனிப் பாட்டாக முப்பெரும் பாடல்களில் ஒற்றாகப் பாடியுள்ளார். பாரதி புதுச்சேரியிலே தலைமறைவாக இருந்த காலத்தில் கண்ணன் பாட்டை எழுதினார். பாரத நாட்டின் ஆதர்ச தெய்வமான கண்ணன் தான் அடிமைப்பட்டுக் கிடக்கும் பாரத அன்னையையும் காப்பாற்றுவான் என்ற வழிபாட்டு நம்பிக்கையை மக்கள் மனதிலே பதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்க முயன்றார். ஆனால் முருகன் பாடலில் கலியுகக் கடவுளான குமரனை எல்லோரும் நம்பிக்கையோடு வழிபட வழிகாட்டியுள்ளார்.

தேசிய மகாகவியாகத் தோன்றிய பாரதியின் பாடல்களில் தெய்வப் பாடல்கள் தனித்துவமானவை. அவை பற்றிய ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் முருகன் பாடல்களிலே நிறைந்துள்ள தெய்வீக அநுபவம் பற்றி இக்கட்டுரை சற்று விளக்க முயன்றுள்ளது. மானிடக் காதலைத் தெய்வீகக் காதலாகப் பார்க்கும் பண்பாடு ஒன்று முற்காலத்தில் நிலவியுள்ளது. அதையே பாரதி தனது கவிதையில் பதிவு செய்துள்ளார். பாரதியின் முருகன் பாடலிலே பயன்படுத்தப்பட்ட சொற்கள் மானிட உணர்வுகளை வெளிப்படுத்து வதில் சற்று விரசமாகத் தென்பட்டாலும் கவிதையுணர்வில் சிறப்பாகப் பயன்பட்டுள்ளன. பாரதி முருகனை 'குகையில் வளருங்கனலே' எனச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். எங்கள் மனக்குகையிலே பக்திக் கனலாக முருகன் வீற்றிருக்கின்றான். "யாமிருக்கப் பயமேன்" என எம்மை முருகன் எப்போதும் ஆற்றுப்படுத்துகிறான். பக்திநிலையில் மக்களை நெறிப்படுத்தும் நவயுகக் கவிஞனான பாரதியின் பாடல்கள் தமிழ்க் கவிதைகளில் தனித்துவமானவை. அவற்றை இன்றைய சந்ததியினர் படிக்கவேண்டும். முருகவழிபாட்டில் முருகன் இருதேவியரோடு இருப்பது பற்றி ஐயப்படுவோர் இதனால் தெளிவு பெற முடியும்.

தேவர்மகளை மணந்திடத் - தெற்குத்
தீவி லசுரனை மாய்த்திட்டான் - மக்கள்
யாவருக் குந்தலை யாயினான் - மறை
அர்த்த முணர்த்துநல் வாயினான் - தமிழ்ப்
பாவலர்க் கின்னருள் செய்குவான் - இந்தப்
பாரில் அறமழை பெய்குவான் - நெஞ்சின்
ஆவ லறிந்தருள் கூட்டுவான் - நித்தம்
ஆண்மையும் வீரமும் ஊட்டுவான்.

(முருகன்பாட்டு)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம். 103940
விசேட சேர்க்கைப் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியின் கண்ணன் பாட்டு - ஒரு நோக்கு

கண்ணன் வழிபாடானது மக்கள் வாழ்விலே மிக முற்பட்ட காலத்தில் இருந்தே இடம்பெற்று வந்திருக்கின்றது. அதாவது சங்ககாலமெனத் தமிழிலக்கிய வரலாற்றில் குறிக்கப்படுங் காலத்திலிருந்து இவ்வழிபாடு மரபு மரபாக நிலவிவந்தது. சங்க காலத்திலே கண்ணன் விட்டுணுவின் ஒரு அவதாரமாகவும், போர் வீரனாகவும் காட்சியளிக்கின்றான். ஆனால் அக்காலத்தில் கண்ணனை ஒரு பெருந்தெய்வமாக மக்கள் கருதவில்லை. அக்காலச் சமுதாயத்தின் நாகரிக வளர்ச்சிக்கேற்பவே அவன் நிலையும் மக்கள் சமயவாழ்விற் கணிக்கப்பட்டது. ஒரு இடையர் குலத்தெய்வமாகவே அவன் காணப்பட்டான். இதிகாசங்களிலே கூறப்படுகின்ற கண்ணன் பற்றிய செய்திகள் இடையரது வாழ்வோடு நெருங்கிய தொடர்புடையனவாகக் காணப்பட்டன. அவனது இளமைக்கால லீலைகள் பலவற்றைக் கவனிக்கும்போது இடையர் குலத்திடையே அவன் பெற்றிருந்த முக்கியத்துவம் புலனாகிறது.

இப்பண்பானது தொடர்ந்து சங்கமருவிய காலத்திலும் இருந்தது என்பதற்கு அக்காலத்துத் தோன்றியதெனக் கருதப்படும் சிலப்பதிகாரம் சான்றுபகர்கிறது. அந்நூலில் ஆய்ச்சியர் குரவைப் பகுதி கண்ணன் வழிபாடு இடையர் குலத்திலே முக்கியம் பெற்றிருந்த வாற்றைக் காட்டுகின்றது. அவர்கள் தமக்கு ஏதாவது துன்பம் நிகழ்ந்தவிடத்துக் கண்ணனை வழிபட்டுக் குரவைக் கூத்தாடினர். அவ்வாறு குரவைக்கூத்து ஆடினால் தமது துன்பங்கள் தீருமென நம்பினர். இதனால் கண்ணன் துன்பந்தீர்க்குந் தெய்வமாகக் கருதப் பட்டான். அக்காலத்தில் அவனுக்களிக்கப்பட்ட தெய்வீக நிலையு முயர்ந்ததாக இருந்தது.

பின்னர் பல்லவர் காலப்பகுதியிலே கண்ணன் வழிபாடு மிகவும் முக்கியத்துவமடையத் தொடங்கிவிட்டது. பன்னிரு ஆழ்வார்களும் கண்ணன் ஒரு ஒப்பற்ற தெய்வம் என்பதைத் தமது பிரபந்தங்களால் நிறுவி விட்டனர். இக்காலத்தில் வடநாட்டில் நிலவிய கண்ணன் வழிபாடு முக்கியத்துவம் பெறவே அவ்வழிபாட்டு முறைகளும் முக்கியத்துவம் பெறத்தொடங்கின. கண்ணனது அவதாரங்கள் பற்றியும், அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீலைகள் பற்றியும் பண்கனிந்த பல பக்திப் பாடல்களால் ஆழ்வார்கள் வழிபாடு செய்யத் தொடங்கினர். இதனால் அவனைத் தமக்கு நெருங்கிய உறவுகளிலே வைத்து அவனருளைப் பெற அவர்கள் துடித்தனர். இது கண்ணன் வழிபாட்டிலே ஒரு புது அம்சமாக அமைந்தது. அவர்களவனை அடைந்த; அநுபவிக்கத் துடித்து துடிப்பே பக்திப் பாடல்களாக வந்து அமைந்தன எனலாம். இதனாற் கண்ணனைக் காதலனாகவும், காதலியாகவும், குழந்தையாகவும் பாவனைசெய்து பாடல்களைச் செய்தனர். கண்ணனைக் காதலனாகக் கண்ட ஆண்டாள் பாடல்களும், அவனைக் குழந்தையாகக் கண்ட பெரியாழ்வார் பாடல்களும் கவிதைச் சிறப்புப் பெற்று விளங்கின.

இவ்வாறு கண்ணனைப் புது உறவுகளிலே வைத்து வழிபடும் முறை மரபுமரபாகவே மக்கட் சமுதாயத்தில் தோன்றி வளர்ந்து வந்தது. பாரதி இந்த வழிபாட்டையே தனது கண்ணன் பாட்டின் பொருளாகக் கொண்டுள்ளார். ஆனால் அது பாரதியின் பாடல்களிலே சில அம்சங்கள் புதுமைபெற்று விளங்குகிறது. மரபுமரபாக இருந்த இக்கண்ணன் வழிபாட்டிலே பாரதி தன் சுயாதீன உணர்வால் சில மாற்றங்கள் செய்ய முனைந்து வெற்றி கண்டுள்ளார் எனலாம்.

இதிகாசங்களின் காலந்தொட்டு நிலவிய கண்ணனின் தெய்வீகப் பண்பு அவர் பாடல்களுக்கு அடிப்படையாக அமையினும் நாம் விளங்கத்தக்க மனிதப்பண்புகளைக் கண்ணன் மீது ஏற்றிப் பாடல்கள் செய்வதன் மூலம் ஒரு புதுமையை அவர் செய்து விடுகிறார். இது மரபு மரபாக வந்த கண்ணன் வழிபாட்டுக்கு முரண்பட்டதாக அமைகின்றது. ஆனால் பாரதியின் பாடல்களைக் கவனிக்கும் இடத்து அவர் அந்த மரபு மரபான வழிபாட்டையும் தனது முரண்பாட்டையும் தொகுத்து ஒரு அமைதியைக் காணமுற்பட்டிருக்கிறார் என்பது தெளிவாகப் புலப்படு கின்றது. இதுவே அவர் கண்ணன் பாட்டின் சிறப்புக்குக் காரணம் ஆகின்றது.

பாரதியின் கண்ணன் பாட்டின் பகுதிகளைக் கவனிக்குமிடத்து இது தெளிவாகப் புலப்படுகின்றது. மரபுமரபாக கண்ணன் வழிபாடு பற்றிய பாடல்களாகக் கண்ணன் என் காதலன். கண்ணம்மா என் காதலி, கண்ணன் என் குழந்தை, கண்ணன் என் ஆண்டான், கண்ணன் என் விளையாட்டுப்பிள்ளை என்ற தொகுதிகளின் பாடல்கள் அமைந்திருக் கின்றன. எமக்கு விளங்கத்தக்க முறையிலமைந்துள்ள மனிதப் பண்புகளின் பாடல்களாகக் கண்ணன் என் தோழன், என்தாய், என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை, என் அரசன், என் சேவகன், என் சீடன் என்ற தொகுதிகளின் பாடல்கள் அமைந்துள்ளன.

இதனைப் பாரதியின் கண்ணன் பாட்டினைச் சுவைத்துப் பார்க்கும் இடத்து தெளிவாகப் புலப்படுகின்றது. கண்ணன் என் தோழன் என்ற பகுதியின் பாடல்களில் பாரதி கண்ணனின் பழைய மரபுக் கதைகளையும் மறக்க முடியாதவராக ஆனால் அதேசமயம் தமது சுயாதீனத்தால் அதனை மறக்கவும் செய்கிறார். சுபத்திரையைக் கவர்ந்ததும், கண்ணனைக் கொல்ல உபாயமுரைத்ததும், தேர் நடத்திக் கொடுத்ததும் மரபுமரபாகக் கண்ணன் பண்பைவிளக்கும் செய்தி களாகக் கூறப்பட்டு வந்துள்ளன. ஆனால் அவர் பின்னைய பாடல்களில் தோழனான கண்ணன் பற்றிப் பாடும்போது நாம் விளங்கத்தக்க முறையிலமைந்துள்ள மனிதப் பண்பைப் பாடுகின்றார். உற்ற நண்பன் ஒருவனின் பண்புகளைப் பாரதி தெளிவாகக் கூறி; கண்ணனை அப்படியான ஒரு தோழனாகவே காண்கிறார். மிகநெருங்கிய நண்பனுக்கே தன் நண்பனைக் கடிந்துரைக்கவும் முடியும். அவ்வாறு கடிந்துரைத்தபோது அவன் கோபப்படின் அதனைத் தீர்க்கவும் முடியும். இது பாரதி கண்ட மனிதப்பண்பு, நாமும் காண்கின்ற மனிதப்பண்பு இதனையே பாரதி தனது பாட்டிலமைத்துள்ளார்.

"உள்ளக்கருவங் கொண்ட போதினில்
ஓங்கியடித்திடுவான் - நெஞ்சில்
கள்ளத்தைக் கொண்டொரு வார்த்தை சொன்னாலங்கு
காறியுமிழ்ந்திடுவான் - சிறு
பள்ளத்திலே நாளழுகுங் கெட்ட
பாசியை யெற்றிவிடும் - பெரு
வெள்ளத்தைப் போலருள் வார்த்தைகள் சொல்லி
மெலிவு தவிர்த்திடுவான்"

"கோபத்திலே யொரு சொல்லிற் சிரித்துக்
குலுங்கிடச் செய்திடுவான் - மனஸ்
தாபத்திலே யொன்று செய்து மகிழ்ச்சி
தளித்திடச் செய்திடுவான் - பெரும்
ஆபத்தினிலே வந்து பக்கத்தில் நின்
றதனை விலக்கிடுவான்...."

இங்கே கண்ணன் மறைய மனிதப்பண்புள்ள தோழனே நிற்கிறான். கண்ணன் தெய்வீகத் தன்மை எங்கோ ஓடி மறைந்து விடுகிறது. எனினும் மனிதப்பண்பென்ற முரண்பாடான அம்சத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடவந்த பாரதி ஏன் கண்ணனுக்கு மரபுமரபாகக் கூறப்பட்டு வருகின்ற பண்புகளையும் தன்பாடலிற் கூறினார் என்பதை ஆராயுமிடத்து அவர் அவ்விரண்டை யும் தொகுத்து ஒரு அமைதியைக் காணமுற்பட்டிருக்கிறார் என்பது புலப்படுகின்றது. இதனாலேதான் பாரதி பாடல் முற்றிலும் பழமையான கருத்துக்களுடன் மட்டும் நில்லாமலும், முற்றும் புதுமையான பண்புகளோடு நின்றுவிடாமலும் இரண்டையும் தழுவிச் செல்வதாக அமைந்து பெருஞ்சிறப்புப் பெற்று விளங்குகிறது.

அடுத்துக் கண்ணன் என் தாய் என்ற பகுதியில் பாரதி தாயன்பை வெகு அழகாகச் சித்திரித்திருக்கிறார். இங்கே கண்ணன் இல்லை. அவனை அன்போடு வளர்த்த தேவகியின் பண்புகள் தான் நிற்கின்றன. அவள் தாயன்பு பாரதியின் வாக்கிலே உணர்வுபெற்று நிற்கிறது. உலகிலே தாயன்புக்கிணையான அன்பாக எதனையும் கூறமுடியாது. மணிவாசகப் பெருமானும் இறைவனைப் பாடும்போது "பால்நினைந் தூட்டும் தாயினும்" என்று பாடுகிறார்.

"உண்ண உண்ணத் தெவிட்டாத - அம்மை
உயிரெனும் முலையினில் உணர்வெனும் பால்
வண்ணமுற வைத்தெனக்கே - என்றன்
வாயினிற் கொண்டூட்டுமோர் வண்மையுடையாள்"

பாரதி இங்கே தாயன்பை வெகுநுட்பமாகக் கூறிச் செல்கிறார். கண்ணன் தெய்வமாக இங்கே நிற்கவில்லை. முழுக்க முழுக்கத் தாயாக மாறி உணர்விலே ஒன்றி நிற்கிறான். அவன் தெய்வம் என்ற உணர்வு கரைந்து தாயென்ற உணர்வே ஓங்கிநிற்கிறது.

"தின்றிடப் பண்டங்களும் - செவி
தெவிட்டறக் கேட்க நற் பாட்டுக்களும்
ஒன்றுறப் பழகுதற்கே - அறி
வுடைய மெய்த் தோழருமவள் கொடுத்தாள்"

"வேண்டிய கொடுத்திடுவாள் - அவை
விரும்புமுன் கொடுத்திட விரைந்திடுவாள்.
ஆண்டருள் புரிந்திடுவாள்"

இங்கே மனிதப் பண்பே மேலோங்கி நின்று பாடலுக்குச் சிறப்பூட்டுகின்றது.

"இறகுடைப் பறவைகளும் - நிலந்
திரிந்திடும் விலங்குகள் ஊர்வனகள்
அறைகடல் நிறைந்திடவே - எண்ணில்
அமைந்திடற் கரிய பல்வகைப்படவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறவு மீன் வகைகள் எனத்
தோழர் பலருமிங் கெனக் களித்தாள்."

இங்கே பாரதியையும் மீறிக் கொண்டு தெய்வீகப் பண்பு தலைதூக்கு கின்றது. அது அவர் இரு பண்புகளுக்கும் அமைதிகாண முற்பட்டதன் விளைவெனலாம். இது பாரதி தன்னையறியாமலே அத்தெய்வீகப் பண்பாட்டிற்கு அடிமையாகியிருந்ததைப் புலப்படுத்து கிறது.

கண்ணன் என் தந்தையில் பாரதியின் இந்தப் புதுமுயற்சி அவ்வளவு வெற்றி பெறவில்லையென்றே தோன்றுகிறது. மனிதப் பண்பாளனாகத் தந்தையே அவர் பாடப்புகுந்தாலும் கடவுட் பண்பே அங்கே பொங்கியெழுகின்றது. இது உணர்வில் மட்டுமன்றிச் சொல்லிற் கூட வெளிப்பட்டு விடுகிறது. "சாமி இவற்றுக்கெல்லாம்" என்று கூறுகிறார். அவர் இங்கு அவரையும் மீறித் தெய்வீகப் பண்பு இப்பாடல் களில் தொழிற்பட்டு நிற்கிறது. இதனால் இங்கே பாரதி விண்ணுக்கும் மண்ணுக்குமாகத் தாவி அமைதிகாண முற்படுகிறார். தந்தையென மண்ணுலகத்துப் பண்பாளனாகக் கண்ணனைக் கூறினாலும் விண்ணு லகக் கடவுட் பண்பே அதிகம் தெரிகிறது. ஒன்பதாம் பாடலில் இறைவனுக்கு வரைவிலக்கணமே கொடுக்க முற்படுகின்றார்.

"வயது முதிர்ந்து விடினும் - எந்தை
வாலிபக்களை யென்று மாறுவதில்லை
துயரில்லை நோயொன்று தொடுவதில்லை
பயமில்லைப் பரிவொன்றில்லை - எவர்
பக்கமும் நின்றெதிர் வாட்டுவதில்லை
நயமிகத் தெரிந்தவன் காண்"

இங்கே மனிதப் பண்பு கொண்ட இறைவனை விளக்குகின்றார். பிறவாயாக்கைப் பெரியோன் என்பதைப் பாரதி புலப்படுத்த முற்படுகிறார்.

கண்ணன் என் சேவகன் என்ற பகுதியிலும் பாரதியின் முயற்சி வெற்றி பெற்றிருக்கிறது. நாம் விளங்கத்தக்க சேவகனின் மனிதப்பண்பை அமைத்துக் காட்டுவதில் பாரதி சிறப்பாகவே காட்டியுள்ளார். கண்ணன் வழிபாட்டுத்தெய்வம் என்ற தெய்வீகப் பண்பு இங்கே மறைந்து விடுகிறது. தற்காலத்துச் சமுதாயத்திலே காண்கின்ற சேவகனாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணனைப் பாரதி மாற்றிவிட்டார். அவ்வாறு சேவகனாக்கிய விடத்துத் தெய்வீகப் பண்பை முற்றாக மறக்கச் செய்தமையே பாரதியின் பாடலுக்குச் சிறப்பாக விளங்குகிறது.

"கூடலிமிகக் கேட்பார் கொடுத்த தெலாந்தாம் மறப்பார்
வேலைமிக வைத்திருந்தால் வீட்டிலே தங்கிடுவார்..."

என்ற அடிகளில் தற்காலச் சேவகர்கள் குணநலன்களைப் பாரதி தெளிவாகப் புலப்படுத்திவிடுகிறார். இங்கேயும் அவர் தெய்வ வழிபாடு பெற்ற கண்ணனையும் தன் சேவகக் கண்ணனையும் தொகுத்து அமைதி காணமுற்பட்டிருக்கின்றார்.

"எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி நான் என்றான்
மாடுகன்று மேய்த்திடுவேன் மக்களை நான் காத்திடுவேன்"

இவ்வடிகளில் பாரதி கண்ணன் மரபுமரபான வழிபாட்டைக் குறிக்கின்றார். அவன் அற்புதத் தெய்வமாகக் கணிக்கப்பட்டதையும், இடைச்சாதியில் முக்கியத்துவம் பெற்றதையும், அவர்களாற் காத்திடும் தெய்வமெனப் போற்றப்பட்டதையும் எடுத்துக் காட்டுகிறார்.

கண்ணனான சேவகனைப் பாரதி எவ்வளவு என்று வினாவுகிறார். அவனோ தான் தனியாளென்றும் தனக்குக் காசு பெரிதில்லை என்றும் அன்பே பெரிதென்றும் கூறுகின்றான். இங்கே பாரதி காணமுற்பட்ட அமைதியின் விளைவாகச் சில அடிகளைப் பாடுகிறார். அவை உணர்விலே ஒன்றுவனவாக அமைகின்றன.

"ஆளாகக் கொண்டு விட்டேன் என்று முதற்கொண்டு
நாளாக நாளாக நம்மிடத்தே கண்ணனுக்கு
பற்று மிகுந்த வரல் பார்க்கின்றேன் கண்ணனால்
பெற்று வரும் நன்மை யெல்லாம் பேசிமுடியாது
கண்ணிமை யிரண்டும் காப்பதுபோல் என்குடும்பம்
வண்ணமுறக் காக்கின்றான் வாய்முணுத்தல் கண்டறியேன்"

இங்கே பாரதியாருக்குக் கண்ணனின் அருளில் இருந்த உணர்வு சொல்லின் வடிவிலமைந்து நிற்கிறது. அவரது உள்ளத்திலே கண்ணன் அன்பிலே கண்ட நன்மைகள் தோன்றியதனால் அவர் கூறவந்த மனிதப் பண்பையும் அவை மீறிக்கொண்டு பாடலில் வந்தமைந்து விடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவகனாகவந்தவனை ஆளாகிக்கொண்டு அன்றுமுதல் அவனருள் பெற்று அடைந்த நன்மைகளை அவரால் மறக்கமுடியாது. வார்த்தை களிலே வடித்து விட்டிருக்கிறார். இது அவர் காணமுற்பட்ட அமைதியின் முடிவுநிலையாகத்தான் தோன்றுகின்றது.

"வீதிபெருக்குகின்றான் வீடு சுத்தமாக்குகிறான்
தாதியர் செய்குற்ற மெல்லாந் தட்டியடக்குகிறான்
மக்களுக்கு வாத்தி வளர்ப்புத்தாய் வைத்தியனாய்
ஒக்க நயம் காட்டுகின்றான் ஒன்றுங் குறைவின்றிப்
பண்டமெல்லாஞ் சேர்த்து வைத்துப் பால்வாங்கி மோர்வாங்கி
பெண்களைத் தாய் போற்பிரிய முற ஆதரித்து"

என்ற அடிகளில் சேவகனின் செயல்களைப் பாடியவர். பின்னால் தெய்வீகப் பண்பை வியக்கிறார்.

"நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய்
பண்பிலே தெய்வமாய்..." என்பதில் பாரதியின் முடிவு காணக்கூடியதாயுள்ளது.

பாரதி கண்ணன் வழிபாட்டையும் மனிதப்பண்பையும் தொகுத்து அமைதிகாண முயன்றார் என்பதற்கு அப்பாடல்களில் பல இடங்களில் அவர் தன்மனக்குறைகளை வெளியிட்டிருப்பது சான்றா கின்றது. தன்கால முத்திரையைப் பொறித்தும் அண்ணன்னருள் நாடிய நாடுதான் அவலம் நீங்கிப் புகழில் உயர்கவே என்று தன் விருப்பங்களைக் கூறிச் சென்றிருப்பதும் புலனாகின்றன. அவர் தனது உள்ளத்துக் கருத்துக்களுக்குச் சொல்வடிவங்கொடுத்து அதன்மூலம் அமைதியைக் கண்டிக்கின்றார். கவிஞனின் பொதுப்பண்பாக இப்பண்புக்குப் பாரதிமட்டும் விலக்காகி விடமுடியுமா?

இனிக் கண்ணம்மா என் குழந்தை, என்காதலி, கண்ணன் என் காதலன் என்ற பகுதிகளின் பாடல்கள் பாரதியின் கவிதைப் பண்புக்குச் சான்றாகின்றன. அவற்றிலும் அவர் மனிதப் பண்புகளுக்கு முக்கியத் துவம் கொடுத்துள்ளார். இதற்கு முன்னர் கண்ணனைக் குழந்தையாகப் பாவனை செய்த பாடல்களைப் பாடிய குலசேகரரும் பெரியாழ்வாரும் பாரதியின் பண்பிலிருந்து வேறுபட்டவர்களாகவே காணப்படுகின்ற ார்கள். இவர்கள் புலனுணர்வு கொண்டும் தெய்வீகப் பண்பு கொண்டுமே அப்பாடல்களைப் பாடினர். ஆனால் பாரதியோ வெறும்புலனுர்வுமட்டு மல்லாமலும் தெய்வீகப் பண்பையும் வற்புறுத் தாமலும் ஒரு சாதாரண ஆனால் இலட்சிய பூர்வமான குழந்தையைப் பாடமுற்படுகின்றார். இப்படியவர் பாடமுற்பட்டதன் காரணம் மரபான கண்ணன் வழிபாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிற்கும் மனிதப்பண்புகளுக்குமிடையிலிருந்த முரண்பாடுகளைத் தொகுத்து அமைதிகாண முற்பட்டமையே ஆகும்.

பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாக்கி நீராட அழைக்கிறார். அவன் செய்யும் குறும்புகளைக் கூறி உனக்கு உண்ணக் கனிதருவேன் நீராட வாவென்றழைக்கிறார்.

"எண்ணெய்க் குடத்தையுருட்டி யிளம்பிள்ளைகிள்ளி யெழுப்பி
கண்ணைப் புரட்டி விழித்துக் கழகண்டு செய்யும் பிரானே
உண்ணக் கனிகள் தருவன் ஒலிகாடலோத நீர் போலே
வண்ணமழகிய நம்பி மஞ்சனமாட நீவாராய்"

இங்கே தெய்வீக உணர்வுதான் மேம்படுகிறது. ஆனால் பாரதியின் பாடலிலே ஒரு இலட்சியப் பூர்வமான குழந்தையின் பண்பைக் காணக்கூடியதாக உள்ளது.

"சின்னஞ் சிறுகிளியே கண்ணம்மா!
செல்வக் களஞ்சியமே.
என்னைக் கலிதீர்த்தே - உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்.

இப்பாடலில் இறைமைத் தன்மையைக் காணமுடியாது இலட்சிய பூர்வமான ஒரு குழந்தையையே காணமுடிகிறது. பாரதி குழந்தையிடம் அன்பு தருவதில் உனைநேர் ஆகுமோர் தெய்வ முண்டோ" என்பதில் அமைதி கண்டு விடுகிறார். தெய்வீகத்தைக் காட்டிலும் தன் இலட்சியக் குழந்தை மேம்பாடுடையது என்று கூறிவிடுகிறார். கண்ணன் குழந்தையாக வழிபடப்பட்ட மரபு இங்கே முற்றாக ஒழிக்கப்பட்டு விடுகிறது.

இதனைக் கண்ணன் என் விளையாட்டுப் பிள்ளையினும் காணக்கூடியதாகவுள்ளது. ஆழ்வார்கள் வருணிக்கின்ற கண்ணனின் குறும்புக்கும் பாரதி பாடுகின்ற கண்ணன் குறும்புக்கும் வேறுபாடு நிறைய உண்டு. கூடிய மனிதப்பண்பு பாரதியின் பாடலில் காணப் படுகின்றது. ஆழ்வார்கள் பாடலிலோ தெய்வீகப் பண்பு ஒளிவீசுகிறது. பாரதியின் பாடலில் உள்ள உயிர்த்துடிப்பை மற்றய பாடல்களிற் காணமுடியவில்லை. தெய்வீகக் கண்ணனைப் பாரதி காணவில்லை. மானிடக்குழந்தைக் கண்ணனையே அவர் கண்டு பாடுகிறார். இதனால் ஆழ்வார்கள் பாடல்களும் பாரதியின் பாடல்களும் அடிப்படையில் ஒன்றாக இருப்பினும் அமைப்பில் முரண்பட்டிருக்கின்றன. கண்ணனைத் தெய்வீக நிலையில் நின்று நோக்காது மனிதப் பண்புகண்டு நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலே ஒரு அமைதியைக் காணமுற்படுகிறார் பாரதி. கண்ணனைக் காதலனாகக் கொண்டு பாடிய ஆண்டாளது பாடலில் மரபுமரபான வழிபாடும் தெய்வீக உணர்வுந்தான் அடங்கிநிற்கின்றன. ஆண்டாள் கண்ட கனவு போலவே பாரதியும் கனவுகாண்கிறார். பாரதியின் கனவு ஆண்டாள் கனவிலும் ஒருபடி மேலே நிற்கிறது. மத்தளங்கள் கொட்ட, வரிசங்கம் நின்றூத, முத்துடைத்தாம நிரைதாழ்ந்த பந்தற்கீழ், மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து தன்னைக் கைத்தலம் பற்றியாகக் கனவு காண்கிறார் ஆண்டாள். இங்கே அவளுக்கு மட்டும் கனவில் உணர்ச்சி புலப்படுகிறது. ஆனால் பாரதி கண்ட கனவு மனிதப்பண்பை விளக்கி நிற்கிறது.

கனவு கண்டதிலே - ஒருநாள்
கண்ணுக்குத் தோன்றாமல்
இனம் விளங்கவில்லை - எவனோ
என்னைத் தொட்டுவிட்டான்
வினவக் கண்விழித்தேன் - சகியே
மேனிமறைத்து விட்டான்
மனதில் மட்டுமே - புதிதோர்
மகிழ்ச்சி கண்டதடி.

இங்கே பாரதி தன்னை வாத்சல்ய தத்துரூபமாகக் கூறியுள்ளார்.

இவ்வாறு வழிவழியாக வந்த கண்ணன் வழிபாட்டையும் மனிதப்பண்பாட்டையும் தொகுத்து அமைதிகாண முற்பட்ட பாரதி கண்ணனைத் தன் காதலியாகவும் பாவனை செய்து பாடுகிறார். இது அமைதிகாணப் புகுந்த அவர் செய்த புரட்சியில் ஒன்றாகிறது. ரவீந்திரர் கீதாஞ்சலியில் ஓரிடத்தில் இறைவனைக் காதலியாக வருணிக்கிறார். தமிழிலக்கியங்களில் இம்முறை இருப்பதாகத் தோன்றவில்லை. இதனால் பாரதியின் இப்பாடல் ஆழ்வார், நாயன்மார் பாடல்களை விடச் சிறப்புற்று விளங்குகின்றது.

"தூண்டிற் புழுவினைப்போல் - வெளியே
சுடர்விளக்கினைப் போல்
நீண்ட பொழுதாக - எனது
நெஞ்சந் துடிக்குதடி, என்கையில் பாரதி கூறிய காதலன் நிலைதான் காதலிக்கும்.

"வார்த்தை தவறிவிட்டாய் அடி கண்ணம்மா. மார்பு துடிக்குதடி" என்று கூறுகிறார். இவ்வாறு கண்ணனைக் காதலியாகப் பாடியதே கண்ணன் பாட்டில் பாரதி பெற்ற வெற்றியாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, பாரதி கண்ணனைத் தெய்வீக நிலையில் மட்டும் வைத்துப் பாடல் செய்வதை அந்த மரபினை மாற்றும் நோக்கத்தோடு கண்ணன் பாட்டினைப் பாடவில்லை. தனது சுயாதீனத்தால் தன் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு ஒரு வழியாகவே கண்ணன் பாட்டினை பாடியுள்ளார் பாரதி. இவ்வாறு மனிதப்பண்பைத் துணை செய்தது அவரது முரண்பட்ட கருத்துக்கள் மட்டுமன்று. அவரது அற்புதமான சொல்லாட்சித்திறனும் கவித்துவத்திறனுமேயாம். தெய்வீக உணர்வில் மட்டும்தான் கண்ணனைப் பாடமுடியும் என்பதை விட்டு மனிதப்பண்புகளையும் அவனில் ஏற்றிப் பாடமுடியும் என்பதைப் பாரதிதான் முதலிற் காட்டியுள்ளார்என அமையாவிடினும், அவ்வாறு முதலிற் பாடிய ஆழ்வார்கள் பாடலுக்குப் போட்டிப் பாடலாக அமைந்த பாரதியின் பாடல்கள் பெருஞ்சிறப்புப் பெற்று விளங்குகின் றன. மரபுமரபான கண்ணன் வழிபாடுதன் பாரதியின் கருத்துக்களைப் பொறிப்பதற்கு ஏற்ற வழிபாடாக அமைந்தது. இன்னொரு காரணமாக அமைந்திருந்ததால் பாரதி தன் கருத்துக்களை அதனோடு தொகுத்து அமைதிகாண முற்பட்டிருக்கலாம். எனினும் இந்தப் பண்புதான் அவரது கண்ணன் பாட்டிற்குப் புதுமையூட்டு வதாகவும் சிறப்புக் கொடுப்ப தாகவும் அமைந்துள்ளது.

எவர் மனத்தையும் கொள்ளைகொள்ளும் எளியநடையில் இன்னிசைக் கவிதை செய்தவர் பாரதி. சாதாரணமாகப் பேசும் வார்த்தைகளையே இவர் எடுத்தாண்டுள்ளபோதும் அவற்றில் ஒன்றிக் கிடக்கும் உணர்ச்சித்துகள்தான் அவர் பாடல்களுக்குச் சிறப்புக் கொடுக்கின்றன. கண்ணனைக் காதலன் பாவத்திற்கொண்டு பாடிய பாடலொன்றிலே கடவுளைப்பற்றி உருகிஉருகிப் பாடியிருக்கும் மணிவாசகர், சம்பந்தர், ஆண்டாள், அப்பர் அத்தனை பேரதும் கவிதையின் உச்சத்தில் கனிந்து இருக்கும் உணர்ச்சியைப் பாரதி

"கண்கள் புரிந்துவிட்ட பாவம் - உயிர்க்
கண்ணனுரு மறக்கலாச்சு"

என்ற இரண்டே அடிகளில் விளங்க வைத்து விடுகிறார். இத்தன்மைதான் அவர் கண்ணன் பாட்டுக்குச் சிறப்புக் கொடுத்து நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணன் பாட்டில் அணிநயம்

எதனையும் அலங்கரிப்பதற்கு உதவுவது அணி. பாட்டிலே கூறவந்த பொருளை அலங்காரமுடன் புலப்படுத்தப் புலவர்கள் கையாண்ட பல்வேறு உத்திகளையே அணிகள் என்றனர். அழகான குழந்தை, தூக்குவதற்கு இலேசாகப் பட்டுப்போன்ற உடலுடைய வளாகக் கைக்கடக்கமுடையவளாக இருக்கிறாள். தூக்கிவிட்டாலோ அதனால் ஏற்படும் பூரிப்பு பெருஞ் செல்வத்தினையே கையில் வைத் திருப்பதுபோலாகும். இவ்விரு உணர்வு நிலைகளையும் புலப்படுத்தப் பாரதியென்னும் புலவன் கிளி, களஞ்சியம் ஆகிய இரண்டினையும் தேர்ந்தெடுக்கிறான். கிளி பட்டுப்போன்ற உடலையுடையது; மென்மை யானது; கைக்கடக்கமானது; அழகானது; தூக்க இலேசானது. ஆகவே குழந்தையை,

"சின்னஞ் சிறுகிளியே"

என்றான் களஞ்சியம் எல்லாச் செல்வங்களையும் சேகரித்து வைக்குமிடம் குழந்தையை "செல்வக் களஞ்சியமே" என்றான். இங்கு குழந்தையைக் கிளியாகவும், களஞ்சியமாகவும் உருவகப்படுத்துகிறான். கிளி, களஞ்சியம் ஆகியவற்றின் பண்புகளை உணர்ந்துகொண்டால், அவையெல்லாம் குழந்தையிடம் காணப்படும் என்னும் நிலையினைத் தோற்றுவிக்கப் புலவன் கையாண்ட உத்தி இது. அது இலக்கண ரீதியிலே உருவக அணி எனப்பட்டது. உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம் என அணிகளுக்குப் பல பெயர்கள் கொடுத் துள்ளனர். பாரதியினுடைய கண்ணன் பாட்டிலே பெரும்பாலும் உவமை, உருவகம் ஆகிய இரு அணிகளே கையாளப்பட்டுள்ளன.

கருத்து வடிவிலேயுள்ள ஓர் உணர்வினை அல்லது எண்ணத் தினை, காட்சி வடிவிலே வெளிப்படுத்துவதற்கு உவமையணி புலவர்களுக்கு நன்கு உதவுகின்றது.

தூண்டிற் புழுவினைப்போல் - வெளியே
சுடர் விளக்கினைப்போல்
நீண்ட பொழுதாக - என்
நெஞ்சம் துடித்ததடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கண்ணன் - என் காதலன் பாட்டிலே பாடுகின்றான் பாரதி. கண்ணனை எண்ணி ஏங்கும் காதலியின் நெஞ்சம் துடிக்கின்ற தாம். நெஞ்சு துடிப்பதை நாம் கண்ணாலே காணமுடியாது. ஆனால் பாரதி அதனைக் காட்சியாக்கிக் காட்டுகின்றான். தூண்டிலிலே அகப்பட்ட புழு துடிதுடித்துக் கொண்டிருப்பதை நாம் கண்டிருக்கி றோம். கைவிளக்கு ஒன்றினை வெட்ட வெளியிலே கொண்டு சென்றால், அவ்விளக்கின் சுடர் ஆடிக்கொண்டிருப்பதை நாம் கண்டிருக்கிறோம். இவ்விரு காட்சிகளையும் எமக்கு எடுத்துக்காட்டி இவை போலத்தான் காதலனைப் பிரிந்த காதலியின் நெஞ்சமும் துடிக்கும் என்று விளக்கு கின்றான். தூண்டிற் புழுவையும் சுடர்விளக்கினையும் உவமைகளாகக் கையாண்டு நெஞ்சத் துடிப்பினை எமக்குப் புலப்படுத்துகிறான் பாரதி.

உவமையணியிலே நுணுக்கமான வேறுபாடுகள் பல உள. அவற்றுள் கூடா உவமை என்றொரு வகையினைத் தண்டியலங்கார ஆசிரியர் கூறுகிறார். ஒரு பொருட்கு கூடாததொன்றினைக் கூடுவதாகக் கொள்வதை இவ்வுவமையமைப்பிலே காணலாம்.

சந்தனத்திற் செந்தழலும் தண்மதியில் வெவ்விடமும்
வந்தனவே போலுமா லும்மாற்றம் பைந்தொடியீர்
வாவிக் கமல மதிமுகங்கண் டேக்கறுவார்
ஆவிக் கிவையோ அரண்.

என்னும் பாடலிலே சந்தனத்தொடு செந்தழலையும், தண்மதியோடு வெவ்விடத்தையும் தொடர்புறுத்திக் கூறப்படுகின்றன. இதே பாணியினை வேறொரு வகையிலே பாரதி பின்பற்றுகிறான். தேனுக்கும் வண்டுக்கும் தொடர்புண்டு; பூவுக்கும் சூரிய ஒளிக்கும் தொடர்புண்டு; பயிருக்கும் வானுக்கும் தொடர்புண்டு. ஆனால் இவையெல்லாம் தொடர்பற்றனவாகக் காட்டி அத்தகைய தொடர்பற்றதன்மை உண்மைத் தன்மை அல்ல என்பதையும் எடுத்துக்காட்டுகிறார். கண்ணன் என் காதலன் பகுதியிலே ஒரு பாடலிலே "ஆசைமுகம் மறந்து போச்சே-இதை யாரிடம் சொல்வேனடி தோழி" . என்று கண்ணனுடைய முகத்தை மறந்து விட்டதாக எடுத்த எடுப்பிலே கூறுகின்ற காதலி, அது உண்மையாக நடந்ததல்ல; அப்படி மறப்பது இயற்கையுமல்ல என்பதைப் புலப்படுத்த,

பொது நூலக சேவைகள்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனை மறந்திருக்கும் வண்டும் - ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்
வானை மறந்துவிட்ட பயிரும் - இந்த
வையமுழுதுமில்லை தோழி

என்று கூறுகின்றாள்.

உவமை வகைகளுள் இன்னொன்று ஐயவுவமை, உவமையையும், பொருளையும் ஐயுற்றுரைப்பதே இவ்வலங்காரத்தின் பண்பாகும்.

தாதளவி வண்டு தடுமாறுந் தாமரை கொல்
மாதர் விழியுலவு வான்முகங்கொல்

என்னும் தண்டியலங்காரப் பாடலடிகள் அப்பண்பினை விளக்கு கின்றன. பாரதியோ இவ்வைய உவமையிலே சிறு மாற்றஞ் செய்து விடுகிறான். அவன் பொருளை ஐயுறாமல் உவமையினையே ஐயுறுகிறான்.

சுட்டும் விழிச்சுடர்தான் - கண்ணம்மா
சூரிய சந்திரரோ?
வட்டக் கரியவிழி - கண்ணம்மா
வானக் கருமைகொல்லோ

என கண்ணம்மா - என் காதலி என்னும் பாடற் பகுதியொன்றிலே பாடுகிறான் பாரதி. "கண்ணம்மா! காதலனாகிய என்னைச் சுட்டி நீ பார்க்கின்ற விழியிரண்டும் ஒளி வீசுகின்றன. அவ்வாறு ஒளிகாலுகின்ற கண்கள் சூரிய சந்திரர்களைப் போன்றனவா? வட்டமான கருமை பொருந்தியன உன்னுடைய விழிகள். அவ்விழிகளின் கருமைநிறம் வானக்கருமை போன்றதா?" என்று பாரதி கண்ணம்மாவின் ஒளி, கண்ணம்மாவின் கருமை ஆகியனவற்றுக்கு உவமைகளாக முறையே சூரிய சந்திரரையும், வானக் கருமையினையும் காட்டி, அவ்வுவமை களை ஐயுறுவதுபோல அமைத்துள்ளான். இதனால் கண்ணம்மா வினுடைய கண்ணின் ஒளி சூரிய சந்திரருடைய ஒளியைவிடச் சிறந்தது எனவும், அவளுடைய கண்ணின் நிறம் வானக் கருமையை விடவும் சிறப்பானதெனவும் உய்த்துணரக் கூடியதாயுள்ளது.

உவமைகளைப் புதுவகையிலும் காலத்துக்கேற்ற வகையிலும் கையாண்டதாலேயே பாரதியின் கவிதைகள் பலரும் விளங்கக் கூடியனவாயின. கண்ணம்மா - என் காதலி என்னும் பகுதியிலே உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடலொன்றிலே தானும் காதலியும் பிரிக்கமுடியாதவாறு இணைந்துள்ளனர் எனக் காதலன் கூற முற்படுகிறான். அவ்வாறு பிரிக்க முடியாத பண்பினைப் புலப்படுத்த,

பாயுமொளி நீயெனக்கு பார்க்கும்விழி நானுனக்கு
தோயும் மது நீயெனக்கு தும்பியடி நானுனக்கு
வீசுகமழ் நீயெனக்கு விரியுமலர் நானுனக்கு
பேசு பொருள் நீயெனக்கு பேணுமொழி நானுனக்கு

என்று அடுக்கிக்கொண்டே போகின்றான் காதலன். பார்க்கின்ற கண்ணுக்கும் ஒளிக்கும் உள்ள தொடர்பினை நாம் அறிவோம். எம்முடைய கண்ணிலே ஒரு சிறிதளவாவது ஒளிசேர வேண்டும். அப்பொழுது தான் நாம் பார்க்கலாம். ஆகவே புலனிழக்காத விழியும் ஒளியும் சேர்ந்திருக்கும் தன்மையினைக் கூறும் காதலன் அவற்றுள் பாயும் ஒளி நீ, பார்க்கும் விழி நான் எனக்கூறி பிரிக்கமுடியாத தம் தொடர்பினைப் புலப்படுத்துகிறான். இதேபோல தேன்வண்டு, நறுமணம் - மலர், பொருள் - மொழி என்னும் இணைபிரியாத் தன்மை களை எடுத்துக்காட்டி "நானும் நீயும்" அப்படித்தான் என்று சூளுரைக்கிறான் காதலன். இங்கு பாரதியினுடைய உவமையலங்காரம் புதுமையாக அமைகின்றது.

உருவக அணியும் பாரதியினுடைய கையிலே புதுமை பெறுகின்றது. எமக்குப் புலப்படாத, காட்சியினாலே காணமுடியாத, முன்னெப்பொழுதும் காணாத நிகழ்ச்சியைப், பொருளை, உணர்வினை எமக்குப் புலப்படுத்த அல்லது காட்டுதற்குப் புலவர்கள் கையாண்ட உத்தியே உவமையணி ஆகும். ஆ என்பது வீட்டுப்பசு; ஆமா என்பது காட்டுப்பசு. காட்டுப்பசுவினைக் காணாத ஒருவனுக்கு அவன் கண்ட வீட்டுப்பசுவினைக்காட்டி "ஆ போலும் ஆமா" என்று கூறலாம். அத்தகைய உவமையணியின் ஒருவகையான வளர்ச்சி நிலையே உருவகம். தாமரை மலருக்குச் செம்மையான நிறமும். குளிர்ச்சியான தண்மையுண்டு. இப்பண்புகளுடைய பெண்ணொருத்தியின் முகத்தினைக் காட்டத் தாமரைபோன்ற முகம் என்று கூறுவது உவமையணி ஆகும். இதனையே அப்பெண்ணினுடைய முகம் தாமரை என்று கூறுவது உருவக அணியாகும். கண்ணன் பாட்டிலே பாரதி கண்ணன் என் தோழன் என்னும் பகுதியிலே எம்முடைய வாழ்வுக்குக் கண்ணன் எவ்வாறு அத்தியாவசியமானவனாகவும், இக்கட்டான வேளையிலே எவ்வாறு உதவுகின்றவனாகவும் அமைகின்றான் என்பதைப் பாரதி புலப்படுத்த நாம் எல்லோரும் அறிந்த மிகவும் அறிமுகமான பொருட்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவகப்படுத்துகிறான். மழை பெய்கின்ற வேளையிலே நனைந்து செல்லவேண்டிய இக்கட்டான நிலையிலே ஒருவர் எமக்குக் குடை தந்தால் எப்படியிருக்கும்? பசித்திருக்கின்றேன். பல நாட்கள் சாப்பிட வில்லை. ஒருவர் உணவு தந்தால் எப்படியிருக்கும்? இந்த அனுபவம் எம்மிற் பலருக்கு நிச்சயமாக ஏற்பட்டிருக்கும். அவ்வனுபவத்தைக் காட்டி,

மழைக்குக் குடை பசிநேரத் துணவென்தன்
வாழ்வினுக் கெங்கள் கண்ணன்

என்று கண்ணன் எம்மீது கொண்டிருக்கும் அன்பினையும் அருளையும் புலப்படுத்துகிறான் பாரதி.

மண்ணையும் விண்ணையும் அளந்தவன் கண்ணன். அவனைப் பற்றிப் பாடல்கள் புனையும்போது பாரதியும் மண்ணையும், விண்ணை யும் அளக்கும் அதி அற்புத தன்மையுள்ளவனாகி விடுகிறான். எம்முடைய கண்களுக்கு பிரமாண்டமானவையாகக் காட்சியளிப்பன வற்றை மண்ணிலே எம் கண்களுக்குப் முன்னாலே தெரியும் சிறிய பொருட் களாக உருவகப்படுத்தி விடுவான். கண்ணனாகிய தாய் தனக்கு விளையாடச்சில பொம்மைகள் தந்துள்ளாளாம்:

"சந்திரனென்றொரு பொம்மை - அதில்
தண்ணமுதம் போலொளி பரந்தொழுகும்
மந்தை மந்தையா மேகம் - பல
வண்ணமுறு பொம்மையது மழை பொழிய"

சந்திரன் ஒரு பொம்மை. மழைமேகம் இன்னொரு பொம்மை. சந்திரன் பொம்மை ஒளி வீசுகின்றதாம். மேகப்பொம்மை மழை பொழிகின்றதாம்.

நல்ல நல்ல நதிகளுண்டு - அவை
நாடெங்கும் ஓடிவிளையாடி வருங்காண்
மெல்ல மெல்லப் போயவைதாம் - விழும்
விரிகடற் பொம்மையது மிகப் பெரிதாம்.

மழை பொழிந்து நதியாகிறது. அந்த நதி தேடிவந்து விழும் கடல் இன்னொரு பொம்மையாம்.

சோலைகள் காவினங்கள் - அங்கு
சூழ்தரும் பலநிற மணிமலர்கள்
சாலவும் இனியனவாய் - அங்கு
தருக்களில் தூங்கிடும் கனிவகைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாலமுற்றிலும் நிறைந்தே - மிக
நயந்தரு பொம்மைகள் எனக்கெனவே
கோலமுஞ் சுறையுமுற - அவள்
கோடிபல கோடிகள் குவித்து வைத்தாள்.

மழை பெய்து நதி பாய்ந்தால் நல்ல மரங்கள் வளருந்தானே. அந்த மரங்கள் கனிகள் ஆகியனவெல்லாம் பல்வேறு வகையான பொம்மைகளாம்.

இன்பமெனச் சில கதைகள் - எனக்கு
ஏற்றமென்றும் வெற்றியென்றும் சில கதைகள்
துன்பமெனச் சில கதைகள் - எனக்கு
தோல்வியென்றும் வீழ்ச்சியென்றும் சில கதைகள்

என்று சொல்லிக் குழந்தையை வளர்க்கிறாள் அந்தக் கண்ணன் என்னும் தாய். அந்தத்தாய் பிள்ளை விளையாடுதற்குப் பல பொம்மை கள் கொடுத்தாள். அந்தப் பொம்மைகள்தாம் சந்திரன், சூரியன், விண் மீன்கள், மழைமேகம், நதிகள், கடல், மரங்கள், கனிகள் ஆகியன வாகும். விண்ணிலும் மண்ணிலும் நிறைந்துள்ள பொருட்களை யெல்லாம் சாதாரண பொம்மைகளாக உருவகப்படுத்திவிடுகிறான் பாரதி.

எதிலுமே சிற்றின அடிப்படையிலே நுண்ணாய்வு செய்கின்ற காலம் இந்தக்காலம். மாலை நேரத்திலே மேற்குத்சையினைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் காதலன். பின்னாலே ஒரு ஆள் வந்து அவன் கண்ணைப் பொத்துகின்றது. அந்த ஆளுடைய கையினைப் பிடித்ததாலும் பட்டுடையின் நறுமணத்தாலும், அது தன் காதலியே என்று உணர்கின்றான்.

"நெரித்த திரைக்கடலில் என்ன கண்டிட்டாய்
நீல விசும்பினிடை என்ன கண்டிட்டாய்
திரிந்த நுரையினிடை என்ன கண்டிட்டாய்
சின்னக் குமிழிகளில் என்ன கண்டிட்டாய்"

என்று அவள் அவனிடம் கேட்கிறாள், அவனோ,

நெரித்த திரைக்கடலில் நின்முகங் கண்டேன்
நீல விசும்பினிடை நின்முகங் கண்டேன்
திரித்த நுரையினிடை நின்முகங் கண்டேன்
சின்னக் குமிழிகளில் நின்முகங் கண்டேன்



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
103940
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்துப் பிரித்து நிதம் மேகம் அளந்தே
பெற்றதுன் முகமன்றிப் பிறிதொன்றில்லை.

என்று பதில் கூறுகிறான். நுண்ணாய்வினுடைய பயன் கண்ணம்மா என்னும் காதலியின் முகமாம். இது எந்த அணிவகையைச் சேரும்?

ஒரு கணத்தையும் இருகணத்தையும் பற்றிப் பாரதி "கண்ணன் என் தோழன்" என்னும் பாடலிலே பேசுகிறான்.

பொன்னவிர் மேனிச் சுபத்திரைமாதைப்
புறங்கொண்டு போவதற்கே - இனி
என்ன வழியென்று கேட்கில், உபாயம்
இருகணத் தேயுரைப்பான் - அந்தக்
கன்னன் வில்லாளர் தலைவனைக் கொன்றிடக்
காணும் வழியொன்றிலேன் - வந்திங்கு
உன்னையடைந்தனன் என்னிலுபாயம்
ஒருகணத் தேயுரைப்பான்.

என்பது அப்பாடற் பகுதி. கண்ணா! உன்னுடைய தங்கை; எனக்குப் பிரியமானவள் சுபத்திரையைக் கடத்திக்கொண்டு போக வேண்டும். வழி சொல்லு என்று கேட்கிறான் அருச்சுனன். அதற்கு இரண்டு கணநேரம் யோசித்துவிட்டுத்தான் வழி கூறுகிறான் கண்ணன். ஆனால் "வில்லாளர் தலைவன் கன்னனைக் கொல்ல வேண்டும் வழி கூறு" என்றவுடனே ஒரு கணத்திலே வழி சொல்லி விடுவான். முதலாவது பெண் விடயமல்லவா? அதுவும் தன்னுடைய தங்கையைக் கடத்திப் போக வழி கேட்டால் இரண்டுகணம் யோசிக்க வேண்டுமல்லவா? போர் வீரனைக் கொல்வது சத்திரிய தர்மம். ஆகவே கன்னனைக் கொல்ல வழி கேட்டால், ஒரு கணத்திலேயே வழி கூறிவிடலாம். ஒரு கணம், இருகணம் என்னுந் தொடர்களை நயமுடன் அமைக்கும் அலங் காரத் திறனை இங்கு காணக்கூடியதாயுள்ளது.

தண்டியலங்காரங் கூறும் அணிகளைப் பயன்படுத்திய எம்முடைய நற்றமிழ்ப் புலவர்களுக்குத் தொடர்களை முழுக்க முழுக்கப் பயன்படுத்தும் வாய்ப்பிருக்கவில்லை. ஆனால் பாரதிக்கோ அந்த வாய்ப்பு இருந்தது. பேச்சு வழக்குச் சொற்றொடர்களைப் பல்வேறு இடங்களிற் பயன்படுத்துவதே கவிதைக்கு இருவகை அலங்காரமாகவும் அமைந்து விடுகின்றது. உதாரணமாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலும் கசந்ததடீ - சகியே
படுக்கை நொந்ததடீ
கோலக் கிளிமொழியும் - செவியில்
குத்த லெடுத்ததடீ
நாலு வயித்தியரும் - இனிமேல்
நம்புதற் கில்லையென்றார்
பாலத்துச் சோசியனும் - கிரகம்
படுத்து மென்றுவிட்டான்.

என்ற பகுதியினையும், "கண்ணன் - என் ஆண்டான்" என்னும் பாடலிலே,

காடு கழனிகள் காத்திடுவேன் - நின்தன்
காலிகள் மேய்த்திடுவேன்
பாடுபடச் சொல்லிப் பார்த்ததன் பின்னரென்
பக்குவஞ் சொல்லாண்டே
ஆண்டே - பக்குவஞ் சொல்லாண்டே
தோட்டங்கள் மொத்திச் செடிவளர்க்கச் சொல்லி
சோதனை போடாண்டே
காட்டு மழைக்குறி தப்பிச்சொன்னாலெனைக்
கட்டியடியாண்டே.

என்னும் பகுதியினையுங் குறிப்பிடலாம்.

மரபுவழிக் கவிதையலங்காரங்களைப் பொன்னே போற் போற்றிக் கண்ணன் பாட்டினைப் புனையும் பாரதி தன் காலத்துக் கேற்றபடி அவற்றைப் புதுமையுடன் கையாண்டு தமிழ்க் கவிதைக்குப் புதுப்பொலி வும் புதுநயமும் ஊட்டினான்.

பிள்ளைக் கனியமுதே - கண்ணம்மா
பேசும் பொற்சித்திரமே
அள்ளி யணைத்திடவே - என் முன்னே
ஆடி வருந்தேனே
(கண்ணம்மா என்குழந்தை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியில் தெய்வீகமும் மானுடமும்

**1. முன்னுரை**

பாரதியின் பாடல்களில் விண்ணையும் மண்ணையும் அளக்கும் போக்கினைப் பல சந்தர்ப்பங்களிற் காணக்கூடியதாக உள்ளது. தெய்வீகத்தை மானுடமாகவும், மானுடத்தைத் தெய்வீகமாகவும் காண்பதை அவன் பாடல்கள் உறுதிசெய்கின்றன. பாரத மாதாவை அவன் தெய்வமாக நோக்குவதை,

"போர்க்களத் தேபர ஞானமெய்க் கீதை
புகன்ற தெவருடை வாய்? - பகை
தீர்க்கத் திறந்தரு பேரினள் பாரத
தேவி மலர்த்திரு வாய்."[1]

என்று "பாரத மாதா" பாடலிலே காண்கிறோம். அதேவேளை மக்கள் புரட்சி அவனுக்குப் பராசக்தியாகத் தோன்றுவதை,

"மாகாளி பராசக்தி உருசியநாட்
டினிற்கடைக்கண் வைத்தாள், அங்கே;
ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி
கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்"[2]

என்னும் பாடல் உணர்த்துகின்றது. விண்ணிலுள்ள இந்திரனுடைய உலகிலேதான் நல்லின்பம் இருக்கின்றதெனக் கூறுகின்றனர். ஆனால், இந்த மண்ணிலே மந்திரம் போன்ற சொல்லின்பமுடைய கவிதை அந்த விண்ணவருலக இன்பத்தை இங்கே கொண்டு வந்துவிடுமென்பதை,

"இந்திரனா ருலகினிலே நல்லின்பம்
இருக்கு தென்பார் அதனை யிங்கே கொண்டெய்தி,
மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம் - நல்ல
மதமுறவே அமுதநிலை கண்டெய்தி"[3]

இவ்வாறு விண்ணையும் மண்ணையும் ஒருங்கு சேர்க்கும் பாரதி விநாயகர், முருகன், பராசக்தி, கண்ணன் ஆகிய தெய்வங்களைப் பாடுகிறான். இவர்களைப் பாடும் பாடல்களிலே தெய்வீகமும் மானுட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் எவ்வாறு இணைகின்றன என்பது பற்றி ஆராய்வதாகவே இக்கட்டுரை அமைகின்றது.

**2. மக்களிடம் தெய்வங்கள் வருதல்**

பாரதி தெய்வங்களை மக்களுடன் ஒட்டியுறவாடுவனவாகப் பாடுகிறான். தேவர்களைத் துன்புறுத்திய அசுரர்களை அழித்து தேவருலகத்தினையும், தேவர்களையும் மீட்டவனாக முன்னர் பாடிய இலக்கியங்களிலே முருகன் பரந்துபட்ட முறையிலே இடம் பெறுகிறான். பாரதியும்,

"அசுரர் முடிவே கருதும் வடிவேலவனே"[4]

என்றும்,

"அமராவதி வாழ்வுறவே அருள்வாய்"[5]

என்றும்,

"கல்லினை யொத்த வலிய மனங்கொண்ட
பாதகன் - சிங்கன்
கண்ணிரண் டாயிரங் காக்கைக்
கிரையிட்ட வேலவா"[6]

என்றும்,

"மலை வாரத்திலே விளை யாடுவான் - என்றும்
வானவர் துன்பத்தைச் சாடுவான்"[7]

என்றும் பாடுகின்ற பாரதி சாதாரண மக்களைக் காக்கும் கடவுளாகவும் முருகனைப் பல இடங்களிலே பாடுவதைக் காண முடிகின்றது.

"அடியார் பலரிங் குளரே
அவரை விடுவித் தருள்வாய்"[8]

என்றும்,

"நீறுபடக் கொடும் பாவம் பிணிபசி
யாவையும் - இங்கு
நீக்கி அடியரை நித்தமுங்
காத்திடும் வேலவா."[9]

என்றும்,

"மக்கள் யாவருக்குந் தலையா யினான்"[10]

என்று பாடுவதைக் காணுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரரை வென்ற பராசக்தியை மக்களிடையேயுள்ள அசுரரை அழித்துக் காக்கவேண்டுமெனப் பாரதி வேண்டுகிறான்.

"அச்சமும் துயரும் என்றே - இரண்டு
அசுரர்வந் தெமையிங்கு சூழ்ந்துநின்றார்
..............................................................
நாடிநின் றிடர்புரிவார் - உயிர்
நதியினைத் தடுத்தெமை நலித்திடுவார்
சாடுபல் குண்டுகளால் - ஒளி
சார்மதிக் கூடங்கள் தகர்த்திடுவார்
பாடிநின் றுனைப்புகழ்வோம் - எங்கள்
பகைவரை அழித்தெமைக் காத்திடுவாய்."[11]

இவ்வாறு தெய்வங்கள் மக்களாக வர, மக்கள் தெய்வங்களாக ஆகும் நிலையினையும் பாரதி தன் பாடல்களிலே கூறுகிறான். தெய்வங் களையே மக்கள் உருவாக்கமுடியும் என்பதை,

"வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோ மென்று கும்மியடி
சாதம் படைக்கவும் செய்திடுவோம் தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடுவோம்"[12]

என்னும் பாடலூடாகப் புலப்படுத்துகிறான். விண்ணிலிருந்து தேவர்கள் எமைக் காக்கின்றார்கள். மண்ணிலே தொழிலாளர் எமைக் காப்பதையும் அவர்கள் மண்ணிலேயுள்ள தெய்வங்கள் என்பதையும்,

"விண்ணி னின்றெமை வானவர் காப்பார்
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே
..............................................................
பாட்டும் செய்யுளும் கோத்திடு வீரே
பாரத நாட்டியக் கூத்திடு வீரே
காட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே
நாட்டி யேயறம் கூட்டிவைப் பீரே
நாடும் இன்பங்களை ஊட்டிவைப் பீரே
தேட்ட மின்றி விழியெதிர் காணும்
தெய்வ மாக விளங்குவிர் நீரே."[13]

சாதாரண மனிதருடைய தெய்வங்களாக விநாயகர், முருகன், பராசக்தி ஆகியோர் பாரதியாலே பாடப்படுகின்றனர். விநாயகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளிடம் நேரே நின்று வரங்கள் கேட்பதாக,

"எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி
மனத்திற் சலன மில்லாமல்
மதியில் இருளே தோன்றாமல்
நினைக்கும் பொழுது நின்மவுன
நிலைவந் திடநீ செயல்வேண்டும்
கனக்குஞ் செல்வம் நூறுவயது
இவையும் தரநீ கடவாயே"[14]

"வருவாய் மயில்மீ தினிலே
வடிவே லுடனே வருவாய்
தருவாய்நலமும் தகவும் புகழும்
தவமம் திறமும் தனமும் கனமும்"[15]

என்று கணபதியிடம் கேட்கப்படுகின்றது. இதுபோல் பராசக்தியிடமும்,

"நின்னைச் சிலவரங்கள் கேட்பேன் - அவை
நேரே இன்றெனக்குத் தருவாய் - என்றன்
முன்னைத் தீயவினைப் பயன்கள் - இன்னும்
மூளா தழிந்திடுதல் வேண்டும் - இனி
என்னைப் புதியவுயி ராக்கி - எனக்
கேதுங் கவலையறச் செய்து - மதி
தன்னை மிகத்தெளிவு செய்து - என்றும்
சந்தோஷங் கொண்டிருக்கச் செய்வாய்"[16]

என்று வரங்கள் பல கேட்கப்படுகின்றன. மனிதச் செயற்பாடுகளுடன் தெய்வங்களை இணைத்துப் புதுமையாகப் பாடுவதிலே பாரதிக்கு மிகுந்த விருப்புண்டு. எடுத்துக்காட்டாக

"நாட்டு மக்கள் பிணியும் வறுமையும்
நையப் பாடென் றொரு தெய்வங் கூறுமே
கூட்டி மானுடச் சாதியை ஒன்றெனக்
கொண்டு வையம் முழுதும் பயனுறப்
பாட்டி லேயறங் காட்டெனு மோர்தெய்வம்
பண்ணில் இன்பமுங் கற்பனை விந்தையும்
ஊட்டி எங்கும் உவகை பெருகிட
ஓங்கும் இன்கவி ஓதெனும் வேறொன்றே"[17]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஒவ்வொரு தெய்வமும் மானுடச் செயற்பாட்டை வேண்டி நிற்பதாகப் பாரதி காட்டுகிறான். ஆனால் பராசக்தியோ பாரதியின் கவிதை களைத் தனக்குத் தரும்படி கேட்பதாக அவன் பாடியுள்ளான். தெய்வம் மானுடரின் பாட்டை விரும்பிக் கேட்பதாகப் பெரியபுராணம் கூறும். ஆனால் பாரதியோ தன்னுடைய கவிதைகளை யெல்லாம் பராசக்தி தன்னிடம் தரும்படி கேட்கிறாள் என்று கூறுகின் றான். முற்காலப் புலவர்கள் மிக உயர்வாகப் பாடிய தெய்வத்தினைப் பாரதி மிக எளிமையாக, படித்தறியா மக்களும் விளங்கிக் கொள்ளக் கூடியதாகப் பாடுகிறான். இதனை, உலகத்து நாயகியாகிய முத்துமாரி யைப் பற்றிப் பாடும் பாடல்களைப் படிக்குமிடத்து உணரலாம். துணி வெளுப்பதற்கு மண்ணிருக்கிறது. தோல் வெளுக்கச் சாம்பலிருக்கிறது. மணியை வெளுக்கச் செய்வதற்குச் சாணையுண்டு. ஆனால் மனம் வெளுக்க வைக்க ஒன்றுமில்லையே என முத்துமாரியிடம் கவிஞர் கேட்கிறார். ஒரு சாதாரண மனிதன் தெய்வத்திடம் பேசுவதுபோல பாடல்களை அமைத் துள்ளார். இது பாரதிக்குத் தெய்வத்திலும் சாதாரண மானுடத்திலும் உள்ள ஈடுபாட்டினைப் புலப்படுத்துகிறது.

**3. மானிடத் தேவைகளை நிறைவுசெய்யும் தெய்வம்**

தெய்வங்கள் மனங்குளிரும்படியாக மனிதன் பூசனை, படையல், வழிபாடு ஆகியனவற்றைச் செய்துவருகிறான். அவன் தெய்வத்திடம் வேண்டுவது உயர் பொருளாகவே அமைந்தது. பரிபாடலில் "யாஅம் இரப்பவை பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்றும்" (5 : 78-80) இது உயர்நிலையிலே நின்று வேண்டுவதாகும். ஆனால் பாரதி சாதாரண மானுட வேண்டுகை களையே தன்னுடைய பாடல்களிலே குறிப்பிடுகிறான். புதுமைக் கவிஞனாகவும் மஹாகவியாகவும் அவன் அமைவதற்கு இதுவும் காரண மாகின்றது. செய்யும் வினைகள் எல்லாவற்றிலும் வெற்றி பெறவேண்டும். அதற்கு வையம் முழுவதையும் படைத்துக் காக்கும் மஹாசக்தியின் புகழை வாழ்த்துகிறோம் என்று கூறும் பாரதி, அச்சக்திக்கு உணவு படையலிடுகிறோம். எதற்காகவென்றால், "பயிரினைக் காக்கும் மழையென எங்களைப் பாலித்து நித்தம் வளர்க்கவென்றே" என்று குறிப் பிடுகிறான். விநாயகர் நான்மணிமாலையில் (24:13-16)

"தின்னப் பொருளும் சேர்ந்திடப் பெண்டும்
கேட்கப் பாட்டும் காணநல் லுலகமும்
களித்துரை செய்யக் கணபதி பெயரும்
என்றுமிங் குளவாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறுமிடத்து இயல்புநிலை மானுடத் தேவைகள் குறிப்பிடப்படு கின்றன. விநாயகர் அவற்றையெல்லாம் அருளுவார் என்பதை உணர்கிறோம்.

தெய்வீகமும் மானுடமும் ஒட்டியுறவாடுதலை பாரதியி னுடைய கண்ணன் பாட்டு மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றது. ஆழ்வார்கள் பாடிய கண்ணனைப் பல்வேறு மானுட வடிவங்களிலே பாரதி கண்ணன் பாட்டிலே சித்திரிக்கிறான். இப்பாடல்களிலே மானு டத்துக்கும் தெய்வத்துக்கும் உள்ள உறவு மின உன்னதமாகப் புலப் படுத்தப்படுகின்றது. கே. மீனாஷிசுந்தரம் (1965 : 61) இதுபற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

"Our Alvars and Nayanmars who are deeply read in the Sangam classics adopt the same literaty traditions. They are pressed into service for the delineation of a new pattern of a splendid spiritual experience. Bharathi who has been cradled in the lap of the same traditions gives immortal expression to man's various relationships with God:"

மனித உறவுகள் எல்லாவற்றையும் தெய்வங்களிடையேயும் காணுவது மனித வழிபாட்டு மரபிலே காணப்படுவதொன்றாகும். ஆனால், மனித னுக்கும் தெய்வத்துக்குமுள்ள உறவு மானுடத்துக்கும் தெய்வீகத்துக்குமிடையேயுள்ள தொடர்பு பற்றி நோக்கும்போதுதான் பாரதியினுடைய தனித்துவம் தெளிவாகின்றது. தெய்வம் ஆண்டானா கவும் மனிதன் பணியாளாகவும் இருக்கும் பாவனையே எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதாகும். ஆனால் பாரதி அதனை மாற்றி யமைத்துப் புரட்சி செய்கிறான். "கண்ணன் - என் சேவகன்" என்னும் பாடலில் தெய்வம் மானுடச் சேவகனாக வந்துநின்று மானுடத் தேவை களையெல்லாவற்றையும் நிறைவுசெய்கின்றது. தான் எங்கிருந்தோ வந்தவன் என்றும் இடைச்சாதி என்றும் சொல்லிவந்த கண்ணன், வீட்டுப் பணி களெல்லாம் நன்றாகச் செய்வதுடன்,

"நண்பனாய் மந்திரியாய் நல்லா சிரியனுமாய்
பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய்
எங்கிருந்தோ வந்தான். இடைச்சாதி யென்றுசொன்னான்
இங்கிவனை யான்பெறவே என்னதவஞ் செய்துவிட்டேன்"[18]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் தன்மையுடையவனாக அமைகிறான். சேவகனாக வந்த தெய்வத்திடம் தெய்வப் பண்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. "என்ன தவஞ் செய்துவிட்டேன்" என்று கூறுவதனாலே தெய்வம் தன் வீடு தேடி வந்துள்ளமையைப் புலப்படுத்துகிறார்.

"கண்ணன் - என் தோழன்" பாட்டிலே இயல்புநிலை மக்களுடைய தேவைகளையெல்லாம் நிறைவுசெய்யும் தெய்வமாகக் கண்ணனைப் பாரதி சித்திரிக்கிறான். நோய்க்கு மருந்தாகவும், கவலைக்கு இதமாகவும், பிழைப்புக்கு வழியாகவும், உழைக்க வழியாகவும், அழைப்புக்கு வருகையாகவும் மழைக்குக் குடையாகவும், பசி நேரத்துக்கு உணவாகவும், கண்ணன் விளங்குவதாகப் பாரதி காட்டுகிறான். நாம் இடர்ப்பட்டிருக்கும்போது அல்லது ஓர் உதவியினை எதிர்பார்த் திருக்கும்போது ஒருவர் தானாக வந்து உதவும் வேளையில் நாம் அவரைக் "கடவுள் போல வந்தீர்கள்" என்று கூறுவது வழக்கம். இதுபோல மழை பெய்துகொண்டிருக்கும்வேளை ஒருவர் குடை தந்தால், பசித்திருக் கும்போது ஒருவர் உணவு தந்தால் அவரைக் கடவுளாக எண்ணுவோ மல்லவா? பாரதி கண்ணக் கடவுளை

"அழைக்கும் பொழுதினிற் போக்குச் சொல்லாமல்
அரைநொடிக் குள்வரு வான்
மழைக்குக் குடைபசி நேரத்துண வென்றன்
வாழ்வினுக் கெங்கள் கண்ணன்"[19]

என்று பாடுவதைக் காணலாம்.

கண்ணன் பாட்டு முழுவதும் தெய்வீகத்தையும் மானுடத்தை யும் இணைக்கும் பண்புடையது. திருமால் என்னும் தெய்வம் ஸ்ரீகிருஷ்ணன் என்னும் மானுட அவதாரம் பெற்றமை பற்றிப் புராணங்கள் கூறுகின்றன. ஆழ்வார்கள் அந்த அவதாரத்தை நன்கு பாடியுள்ளனர். பாரதி தான் விரும்பும் மக்களுள் ஒருவனாகத் தெய்வமும் இருக்கவேண்டுமென எண்ணினான். இவ்வெண்ணம் ஈடேறக் கண்ணன் அவதாரத்தை அடிப் படையாகக் கொண்டு பாடல்கள் பாடினான். வ.வே. சு. ஐயர் இதனை இன்னொரு வகையாகக் கூறுகிறார்.

"பாரதநாட்டின் குலதெய்வமாகிவிட்ட கண்ணனுக்குப் பாமாலை சூட்டாத கவிகள் அருமை. தன்னை நெடுநாட்களாக மறந்திருந்த பாரத நாடு திடீரென விழித்துக்கொண்டதும், அதன் எதிரே முதலில் தோன்றிய ஒளி கீதா சாஸ்திரத்தைக் கூறிப் பார்த்தனுடைய ரதத்தை வெற்றிபெற ஓட்டிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணபிரானுடைய உருவமே. அந்த உருவமானது நமது கவியின் இருதயத்திலும் எழுந்து அவருடைய கவிதைக்கு ஒரு சோபையைக் கொடுத்தது."[20]

ஐயருடைய கூற்று மானுடமும் தெய்வீகமும் என்றநிலைக்கு மேலாக நாடும் தெய்வீகமும் என்னும் நிலைக்கு இட்டுச் செல்கின்றது.

**4. பக்திக் காதல் வரம்பு மீறியதாக அமைதல்**

தெய்வீகக் காதலைப் பாடவந்த பாரதி அதனைச் சாதாரண மானுடக் காதலாக, அதுவும் வரம்பு மீறிய காதலாகப் பாடுவதைப் பல பாடல்களிலே காண்கிறோம்.

"சாத்திரம் பேசுகிறாய் - கண்ணம்மா
சாத்திர மேதுக்கடீ
ஆத்திரம் கொண்டவர்க்கே - கண்ணம்மா
சாத்திர முண்டோடீ
மூத்தவர் சம்மதியில் - வதுவை
முறைகள் பின்பு செய்வோம்
காத்திருப் பேனோடீ - இதுபார்
கன்னத்து முத்தமொன்று!"[21]

என்றும்,

"கூடிப் பிரியாமலே - ஓரிராவெலாம்
கொஞ்சிக் குலாவி யங்கே
ஆடி விளை யாடியே - உன்றன் மேனியை
ஆயிரங் கோடி முறை
நாடித் தழுவி மனக் - குறை தீர்ந்து நான்
நல்ல களி யெய்தியே
பாடிப் பரவசமாய் - நிற்கவே தவம்
பண்ணிய தில்லை யடி!"[22]

என்றும் பாரதி பாடுகின்ற சந்தர்ப்பங்களிலே வரம்பு மீறிய மானுடக் காதல் உணர்வு மேற்கிளம்புவதை உணரக்கூடியதாயுள்ளது. கண்ணம்மாவைப் பாடும் இடங்களில் மட்டுமன்றிப் பிற இடங்களிலும் இத்தகைய பாடல்களைக் காண்கிறோம். வள்ளிப்பாட்டு-1 இலிருந்து பின்வரும் பாடலைப் பார்க்கலாம்:

"வட்டங்க ளிட்டுங் குளமக லாத
மணிப்பெருந் தெப்பத்தைப் போலே - நினை
விட்டு விட்டுப்பல லீலைகள் செய்துநின்
மேனி தனைவிட லின்றி - அடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டத் திசையும் ஒளிர்ந்திடுங் காலை
இரவியைப் போன்ற முகத்தாய் - முத்தம்
இட்டுப் பலமுத்த மிட்டுப் பலமுத்தம்
இட்டுனைச் சேர்ந்திட வந்தேன்"[23]

இவ்வாறு தெய்வீகக் காதற் பாடலாக அமைய வேண்டிய வற்றை எல்லை மீறிய மானுடக் காதற் பாடலாகப் பாரதி பாடியமை பற்றி "கண்ணன் பாட்டு" க்கு முன்னுரை எழுதிய வ. வே. சு. ஐயர் விரிவாக எடுத்துக் கூறுகிறார். அதில் ஆண்டாள் முதலிய ஆழ்வார்கள் மதுர பாவத்திலே பாடிய பாசுரங்கள் பற்றிக் கூறிவிட்டு,

"ஆனால் இந்த பாவத்தை ஆளுவது கத்தியின் கூர்ப்பக்கத்தின்மீது நடப்பதைப் போன்ற கஷ்டமான காரியம். ஒரு வரம்பு இருக்கிறது; அதற்கு இப்புறம் அப்புறம் போய்விட்டால், அசந்தர்ப்பமாகிவிடும். ஸ்ரீபாகவதத்திலுங்கூட கோபிகா உபாக்கியானங்களில் சுக பகவான் இவ்வரம்பை அங்கங்கே கடந்துவிட்டிருக்கிறார் என்பது எனது தாழ்ந்த அபிப்பிராயம். நமது கவியும் அப்பாவத்தை விரிக்கையில் பரபக்தியை விடச் சாரீரமான காதலையே அதிகமாக வர்ணித்திருக்கிறார். ஆனால் சுகப் பிரம்மமே நிறுத்த முடியாததான தராசு முனையை நம் ஆசிரியர் நிறுத்தவில்லை என்று நாம் குறைகூறலாமா?"

என்று குறிப்பிட்டுள்ளார். பாரதியின் எல்லை மீறிய காதல் பாடல் களை வ. வே. சு. ஐயர் இனங்காணுகிறார். ஆனால் அதனை நியாயப் படுத்தியும் உள்ளார்.

**5. முடிவுரை**

பாரதிக்கு தெய்வமும் மானுடமும் ஒன்றாகவே தெரிகின்றன. தெய்வங்களிலே அவனுக்கு நம்பிக்கையுண்டு. ஆனால் மக்கள் சக்தியிலே அவனுக்கு உயர்ந்த நம்பிக்கையுண்டு. மக்கள் சக்தியினைத் தெய்வமாக நோக்குவதிலே அவனுக்கு மிகுந்த பிரியமுண்டு.

மக்கட்புரட்சி ருஷிய நாட்டிலே ஏற்பட்டபோதிலும் அது மாகாளி பராசக்தியின் கடைக்கண் பார்வையாலே ஏற்பட்டதென்றே கூறுகிறான். மன்னராட்சி வீழ்ந்து மக்களாட்சி ஏற்பட்டும், சனநாயகக் கருத்துக்கள் வேகமாகப் பரவியும் வரும் காலத்திலே வாழ்ந்தவன் பாரதி. எனினும். பாரத நாட்டின் தெய்வீகப் பண்பாட்டிலே ஊறித் திளைத்தவ னாகவும் இருந்தான். இதனாலே அவன் தெய்வத்தை மக்களாகவும், மக்களைத் தெய்வமாகவும் நோக்கியது வியப்பில்லை.

"அழைக்கும் பொழுது போக்குச் சொல்லாமல் அரை நொடிக்குள் வருவான்" எனத் தெய்வீகம் என்பது மக்களுக்கு மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையிலுள்ளதாகப் பாரதி காட்டுகிறான். சாதாரண மானிடரிலும், பறவைகளிலும் தெய்வீகம் இருப்பதாகப் பல பாடல்கள் பாடியுள்ளான்.

மானுட ஆண்-பெண் சமநிலையினைப் பாரதி தெய்வங்களிலும் வேண்டுகிறான். "ஆறு துணை" என்னும் பாடலில் கணபதி, பராசக்தி, முருகன், கலைமகள், கண்ணன், திருமகள் ஆகியோர் பாடப்படுகின்றனர். இங்கு ஆண் தெய்வம் பெண் தெய்வம் என்ற ஒழுங்கில் சமமான முறையிலே பாடியிருப்பது பாரதியின் மானுட ஆண்-பெண் சமநிலையினைப் புலப்படுத்துவதாக அமைகின்றதென கே. மீனாஷிசுந்தரம் (1965 : 42) கூறுவது பொருத்தமாக அமைகின்றது.

**அடிக்குறிப்புகள்**

இக்கட்டுரைக்கு ஸ்ரீ இந்து பப்ளிகேஷனஸ் 1990இல் வெளியிட்ட மகாகவி பாரதியார் கவிதைகள் (மலிவுப் பதிப்பு) என்னும் நூலே பயன்படுத்தப்பட்டது.

01. தேசிய கீதங்கள், பாரத நாடு, "பாரத மாதா" - 8, பக். 8.
02. தேசிய கீதங்கள், பிற நாடுகள், 'புதிய ருஷியா - 3, பக். 82.
03. தெய்வப் பாடல்கள், தோத்திரப் பாடல்கள், சக்திக் கூத்து - 20, பக். 108.
04. தெய்வப் பாடல்கள், தோத்திரப் பாடல்கள், "முருகா முருகா" - 2, பக். 95.
05. தெய்வப் பாடல்கள், தோத்திரப் பாடல்கள், "முருகா முருகா" - 2, பக். 96.
06. தெய்வப் பாடல்கள், தோத்திரப் பாடல்கள், "வேலன் பாட்டு" - 3, பக். 96.
07. தெய்வப் பாடல்கள், தோத்திரப் பாடல்கள், "முருகன் பாட்டு" - 5, பக். 98.
08. தெய்வப் பாடல்கள், தோத்திரப் பாடல்கள், "முருகா முருகா 2, பக்.95.
09. தெய்வப் பாடல்கள், தோத்திரப் பாடல்கள், "வேலன் பாட்டு" - 3, பக். 97.
10. தெய்வப் பாடல்கள், தோத்திரப் பாடல்கள், "சிவசக்தி" - 11, பக். 102.
11. பல்வகைப் பாடல்கள், சமூகம், "பெண்கள் விடுதலைக்கும்மி" - 3, பக். 187.
12. பல்வகைப் பாடல்கள், சமூகம், "தொழில்" - 5, பக். 189.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. தெய்வப் பாடல்கள், தோத்திரப் பாடல்கள், "விநாயகர் நான்மணி மாலை" - 1, பக். 85.
14. தெய்வப் பாடல்கள், தோத்திரப் பாடல்கள், "முருகா முருகா" - 2, பக். 95.
15. தெய்வப் பாடல்கள், தோத்திரப் பாடல்கள், "யோக சித்தி" - 32, பக்.119.
16. தெய்வப் பாடல்கள், தோத்திரப் பாடல்கள், "பராசக்தி" - 19, பக்.107.
17. முப்பெரும் பாடல்கள், கண்ணன் பாட்டு, "கண்ணன்-என் சேவகன்" - 4, பக். 282.
18. முப்பெரும் பாடல்கள், கண்ணன் பாட்டு, "கண்ணன்-என் தோழன்" - 1, பக். 275.
19. வ.வே.சு. ஐயர், கண்ணன் பாட்டு இரண்டாம் பதிப்பின் முன்னுரை, மகாகவி பாரதியார் கவிதைகள் (மலிவுப் பதிப்பு), ஸ்ரீ இந்து பப்ளிக்கேஷனஸ், சென்னை, 1990.
20. முப்பெரும் பாடல்கள், கண்ணன் பாட்டு, "கண்ணம்மா - என் காதலி" - 16, பக். 300.
21. முப்பெரும் பாடல்கள், கண்ணன் பாட்டு, "கண்ணம்மா - என் காதலி " - 20, பக். 304.
22. தெய்வப் பாடல்கள், தோத்திரப் பாடல்கள், "வள்ளிப் பாட்டு" - 7, பக். 99.

**உசாத்துணைகள்**

பரிபாடல், ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1956.

Meenakshisundaram, K., **A Study on the Poetical Works of Subramaniya Bharathi,** Paari Nilayam, Madras, 1965.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமெனும் பெண்ணே!

பாரதி இன்றைய புதுக்கவிஞர்களுக்கெல்லாம் ஒரு வழிகாட்டி. தான் வாழ்ந்த காலத்தில் தமிழ்மொழி பற்றிய விருப்பை எல்லோரிடமும் ஏற்படுத்தியவன். பாரதி பாடிய பாடல்கள் பாமர மக்களும் படித்து விளங்கக்கூடிய எளிமையான இனிய கவிதைகள். வீட்டுக்குள்ளே அடை பட்டுக் கிடந்த பெண்களை நாட்டுப்பணி செய்யும் நங்கையராக மாற்றப் பல்வேறு பாடல்களைப் பாடினான். பெண்மையை வாழ்த்திப் புதுமைப் பெண்ணாக உயர வைத்தான். பெண்கள் விடுதலை பெறவேண்டுமென்று விடுதலைக் கும்மியைப் பாடினான். எனினும் கவிஞன் பாரதியின் இலக்கு நிறைவேற இன்னொரு முயற்சியும் வேண்டப்பட்டது. மக்கள் மனம் செம்மையுற்றால் தான் புதிய இந்தியாவை உருவாக்க முடியுமென எண்ணினான். அதற்கென்ன வழி எனச் சிந்தித்தான். மக்கள் மனம் சீர்மை பெற்றால்தான் செயற்பாட் டிலும் சுறுசுறுப்பும் நேர்மையும் ஏற்படும் என எண்ணினான். பாரதியின் சொந்த வாழ்வியல் அநுபவமும் இதற்குக் காரணமாக அமைந்த தெனலாம். வாழ்வில் துன்பங்களையும், துயரங்களையும் எதிர் கொள்ளும்போது அவற்றிலிருந்து விடுபடுவதற்கு மனத்தையே முதலில் பண்படுத்த வேண்டுமென்பதே பாரதியின் முடிவாகும். எனவே மனம் பற்றிய தன் எண்ணங்களைக் கவிதையாக்கி னான். அக்கவிதைகளை ஆழமாகப் பார்க்கும் முயற்சி இன்றும் தேவை யாக உள்ளது. இக்கட்டுரை பாரதி பாடிய மனம் பற்றிய பாடல்கள் தரும் சீர்மியத்தை வெளிக்கொணரும் ஒரு முயற்சியாக அமைய உள்ளது.

நான்கு பாடல் சிறப்பாக மனம் தொடர்பாகத் தெய்வப் பாடல் களின் தொகுப்பில் அடக்கப்பட்டுள்ளன. கண்ணன் பாட்டிலும் சிறப்பாக "மனப்பீடம்" என ஒரு கவிதை அமைந்துள்ளது. முத்துமாரி பற்றிய பாடலில் மனம் பற்றிய கருத்தை வருமாறு அமைத்துள்ளான்.

"மணிவெளுக்கச் சாணையுண்டு - எங்கள்
மாரியம்மா எங்கள் முத்துமாரி
மனம்வெளுக்க வழியில்லை - எங்கள்
மாரியம்மா எங்கள் முத்துமாரி!"

மனத்தைத் தூய்மையாக்க வழியில்லை என மாரியிடம் பாரதி வேண்டுதல் செய்கிறான். துணியைத் தூய்மை செய்வதுபோல மனத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் தூய்மை செய்யவேண்டும். மனிதனின் செயற்பாடுகள் சீர்பெற இது இன்றியமையாதது. தெய்வத்திடம் வழிகேட்கும் பாரதி தானும் மனம் பற்றிய தேடல்களைச் சுயமாக மேற்கொள்கிறான். மனத்தைப் பற்றி நாவுக்கரசரது எண்ணம் தேவாரத்தில் பதிவாகியுள்ளது. வாழ்வியலில் மனத்தின் செயற்பாட்டை அவர் வருமாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

"மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கை ஏற்றிச் செறிகடலோடும் போது
மதனெனும் பாறைதாங்கி மறியும் போதறி வொண்ணா
துணையுனுமுணர்வை நல்காயொற்றியூடைய கோவே"

மனத்தைத் தோணியாக நாவுக்கரசர் காட்டுகிறார். இத்தோணியில் ஏற்றிச் செல்லும் சினமெனும் சரக்கை நாம் கைவிடவேண்டும். மனத்தோணி மதனெனும் பாறையில் தாக்கப்பட்டு அவலப்படும் வாழ்வை நீக்கப் பக்தியே உதவும் என்பது நாவுக்கரசரது நம்பிக்கை.

பாரதியின் மனம் பற்றிய பாடல்களில் நான்கு நிலையில் கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பக்தி இலக்கியங்களில் பயிற்சியுள்ள பாரதிக்கும் மனத்தை அடக்கிவாழ ஒரு பயிற்சி தேவைப்பட்டது. என்பது தெரிகிறது. எனினும் மனத்தைத் தன்முயற்சியால் அடக்கிவிட முடியுமென நினைக்கிறான். அதையே கவிதையாக்கியுள்ளான்.

"பேயா யுழலுஞ் சிறு மனமே
பேணாயென் சொல் இன்றுமுதல்
நீயா யொன்றும் நாடாதே
நினது தலைவன் யானேகாண்
தாயாம் சக்தி தாளினிலும்
தரும மெனயான் குறிப்பதிலும்
ஓயாதே நின் றுழைத்திடுவாய்
உரைத்தேன் அடங்கி உய்தியால்."

இக்கவிதையில் மனத்தின் அளவையும் குணத்தையும் பாரதி வரையறை செய்து கூறியுள்ளார். மனம் மிகவும் சிறியது. இதன் உருவத்தை நாம் காண பாரதி புலப்படுத்தும் படிமம் இது. சின்னக் குழந்தையைச் "சின்னஞ் சிறுகிளியே" எனக் காட்சிப்படுத்திய பாரதிக்கு மனத்தை அவ்வாறு சுட்டிக்காட்ட முடியவில்லை. அதன் உருவம் மிகவும் சிறியதாக இருக்கும் என்ற எண்ணத்தை எல்லோருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தியுள்ளான். ஆனால் மனத்தின் குணவியல்பைத் தெளிவாகக் கூறியுள் ளான். அது பேயாய் உழலும் தன்மையுள்ளது என்கிறான். மக்களி டையே பேய் பற்றியிருந்த ஒரு கருத்தை மனத்தின் குணவியல்பாகக் காட்டுவதன் மூலம் கண்ணால் நேரிலே காணமுடியாத பேயின் குண மாக மக்கள் பதிவுசெய்து வைத்துள்ள குணவியல்பையே பொருத்திக் காட்டி யுள்ளான். ஆனால் பேய் எம்மோடு இருக்காது. மனமோ எம்முடனே இருப்பது. எனவே அதனை எம்மால் கட்டுப்படுத்த முடியும் என்பதே பாரதியின் முடிபாகும்.

அதனால் மனத்தை அழைத்து அதனை நெறிப்படுத்துகிறான். "நீ இன்றுமுதல் என் சொல்லையே பேணவேண்டும். நீயாக எதையும் நாடிச் செல்லக்கூடாது. ஏனென்றால் நான் உன்னுடைய தலைவன். நான் உனக்கு உரைப்பதை நீ கேட்க வேண்டும். நாம் வணங்கும் எமது தாயான சக்தியின் தாளிலே பணிந்து என்றும் வழிபாடு செய்யவேண்டும். தருமச் செயல் என நான் குறிப்பவற்றை நிறைவேற்ற நீ உழைக்க வேண்டும். நீ அடக்கமாக இருப்பின் உய்தி பெறுவாய் எனப் பாரதி கூறும் நெறிமுறை கள் மனிதரை நெறிப்படுத்தக் கூறிய கருத்துகளே. ஐம்புலன்களையும் அடக்கிச் செயற்பட்டால் வாழ்வு செம்மையாக அமையும் என்பதையே பாரதியும் வேறொரு வடிவில் காட்சிப்படுத்திக் காட்டியுள்ளான். மனத்தை அடக்கி வாழப் பல பயிற்சிகள் இப்போது தோன்றியுள்ளன. ஆனால் அவரவர் மனத்தை அவரவரே கட்டுப்படுத்தும் தலைமைப் பொறுப்பையேற்றுச் செயற்பட வேண்டும் என்பதே பாரதியின் அறிவுரையாகும். "உரைத்தேன் அடங்கி உய்தியால்" என்ற தொடர் வெறுமனே மனத்திற்குச் சொல்லப்பட்டதாக மட்டுமன்றி மக்கள் அனைவரும் மனங்கொள்ளச் சொல்லப்பட்ட கூற்றாக உள்ளமை குறிப் பிடத்தக்கது.

அடுத்து மனம் பற்றிப் பாடும் பாரதி ஓர் உருவகத்தைப் பயன் படுத்தியுள்ளான். நம் கண்ணுக்குப் புலப்படாத மனத்தைக் காண்பதற்கு அதனை ஒரு பெண்ணாக உருவகித்து "மனப்பெண்" என்ற பாடலைப் பாடியுள்ளான். இப்பாடல் 38 அடிகள் கொண்ட நீண்ட பாடலாக உள்ளது. மனத்தின் இயல்புகளை விரிவாகக் கவிதையிலே எடுத்துரைத் துள்ளான். பெண்ணின் குணவியல்புகளோடு பாரதி அதைப் பொருத்திக் காட்ட முயன்றுள்ளான்.

"மனமெனும் பெண்ணே! வாழி! நீ கேளாய்!
ஒன்றையே பற்றி யூச லாடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததை நோக்கி யடுத்தடுத் துலவுவாய்
நன்றையே கொள்ளெனிற் சோர்ந்துகை நழுவுவாய்
விட்டுவி டென்றதை விடாதுபோய் விழுவாய்"

மனமெனும் பெண்ணின் இயல்பு இப்பாடலடிகளில் விளக்கப் பட்டுள்ளது. ஒன்றையே பற்றி அதுவே வேண்டும் என நினைத்திருப்ப தால் பயனில்லை. "ஊசலாடுதல்" என்ற செயற்பாடு இங்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் அடுத்து வருவதை எதிர்பார்த்திருக்கும் பண்பு நிலையும் மனதிற்குண்டு. நல்லதையே பற்றிக்கொள்ள வேண்டும் என்பதில் அக்கறை இல்லாமல் அதை நழுவவிடுவதே மனத்தின் இயல்பாக இருப்பதாகப் பாரதி கூறியுள்ளான். விட்டுவிடு என்றதையே தொடர்ந்து அதுவே வேண்டும் எனப் பிடிவாதம் பிடிப்பது மனத்தியல்பு. இத்தகைய குணமும் பெண்ணிடம் இருப்பதாகப் பாரதி கூறுவது ஆராயவேண்டியதொன்றாகும். ஏனெனில் அடுத்துவரும் பாடல் வேறுபட்டமைந்துள்ளது.

"தொட்டதை மீளமீளவுந் தொடுவாய்
புதியது காணிற் புலனழிந்திடுவாய்
புதியது விரும்புவாய் புதியதை அஞ்சுவாய்
அடிக்கடி மதுவினை அணுகிடும் வண்டுபோல்
பழமையாம் பொருளிற் பரிந்துபோய் வீழ்வாய்."

தொட்டதை மீண்டும் தொடுதல், புதியது காணிற் புலனழிதல், புதியதை விரும்பல் என்பன ஆண்களிடமே காணப்படும் குணவியல்பு களாம். ஆனால் புதியதைக் கண்டு அஞ்சுதல் பெண்மையின் இயல்பாக வுளது. அதுபோலப் பழமையான விடயங்களிற் பரிவுடன் செயற்படு வதும் பெண்ணின் குணமாகும்.

ஆனால் அடுத்த பாடல் வேறுபட்டமைந்துள்ளது.

பழமையே யன்றிப் பார்மிசை யேதும்
புதுமை காணோமெனப் பொருமுவாய் சீச்சீ
பிணத்தினை விரும்பும் காக்கைபோல
அழுகுதல், சாதல், அஞ்சுதல் முதலிய
இழிபொருள் காணில் விரைந்ததில் இசைவாய்"

இவ்வரிகளில் மனித மனத்தின் இழிந்ததொரு இயல்பினைப் பாரதி வெளிப்படுத்திக் காட்டியுள்ளான். புதுமை ஒன்றையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணோமே யென்று அடிக்கடி பொருமும் குணம் மனத்திடமுண்டு. அது மட்டுமல்ல இழிந்தவற்றைக் கண்டால் அவற்றோடு விரைந்து இசைவுறும் அற்புத குணமும் அதற்குண்டு. இப்பண்பை விளக்கப் பாரதி பொருத்தமான உவமையைக் கையாண்டுள்ளான். "பிணத்தை விரும்பும் காக்கைபோல" மனம் இழிந்த பொருள்மீது அவாவுறும் இயல்புடையது. அவற்றில் குறிப்பாக மூன்றினைப் பாடலில் பாரதி பதிவு செய்துள்ளான். அழுகுதல், சாதல், அஞ்சுதல் என்ற மூன்றும் மனித மனத்தில் குடியேறியிட்ட குணநலன்கள். அவற்றை வெளியேற்ற வேண்டியது அவசியம். மனத்தின் இக்குணவியல்புகளால் மனிதனின் செயற்பாடுகள் சீர்மை யற்றுப் போகின்றன. எனவே மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் இக்குணங்களை உடனடியாகக் களையவேண்டும்.

இக்குணங்களைக் கொண்டிருக்கும் மனப் பெண்ணின் செயற்பாட்டில் ஒரு வேறுபட்ட தன்மையிருப்பதைப் பாரதி எடுத்துக் காட்டுகிறான்.

"என்னிடத் தென்றும் மாறுத லில்லா
அன்பு கொண் டிருப்பாய் ஆவிகாத்திடுவாய்
கண்ணினோர் கண்ணாய் காதின் காதாய்ப்
புலன்புலப்படுத்தும் புலனா யென்னை
உலக வுருளையில் ஒட்டுற வகுப்பாய்"

எமது மனம் என்றும் மாறுதலில்லாத அன்பை எம்மிடத்திலே செலுத்தும் தன்மையது. அதுமட்டுமல்ல எமது உயிரையும் காத்து நிற்கும். கண். காது என்னும் புலன்கள் புலப்படுத்தும் வழியில் உலக வாழ்க்கையை நாம் நடத்தவும் உதவும். எமது புலன்களில் கட்புலனும் செவிப்புலனும் மிகவும் முக்கியமானவை. கண்ணால் பார்த்து இன்புறும் நிலையும் கேட்டு அனுபவிக்கக் காதும் இருப்பதால்தான் இரண்டு புலன்களும் சிறப்பாகப் பேசப்படுகின்றன. இவ்விரண்டு புலன்களாலும் இன்பத்தை யும், துன்பத்தையும் அநுபவிக்கலாம்.

மேலும் மனித மனம் இன்பத்தையும், துன்பத்தையும் எவ்வாறு அநுபவிக்கிறதென்பதையும் பாரதி தெளிவாகக் காட்டியுள்ளான்.

"இன்பமெலாந் தருவாய் இன்பத்து மயங்குவாய்
இன்பமே நாடி யெண்ணிலாப் பிழை செய்வாய்
இன்பமே காத்துத் துன்பமே யழிப்பாய்
இன்பமென் றெண்ணித் துன்பத்து வீழ்வாய்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA-
TPL

இன்பத்தை அடைய வேண்டுமென்பதற்காகப் பல பிழைகளை மனம் செய்வதையும் எடுத்துக் காட்டியுள்ளார். துன்பங்களையெல்லாம் அழிப்பதற்கு முயற்சி செய்வதையும் முடிவில் துன்பத்தையே அநுபவிப் பதையும் விளக்கியுள்ளார். மனமெனும் பெண்ணைப் பாரதி வாழ்த்து கிறார். மனம் எப்பொழுதும் தனக்குப் பின்னேயிருக்கும் பரம் பொருளைக் காண்பதற்காகத் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் அதற்கென அமைந்த விதிமுறைகளையறியாமல் செயற்படும்.

மனமெனும் பெண்ணே! வாழி நீ கேளாய்!
நின்னொடு வாழும் நெறியு நான் கறிந்திடேன்
இத்தனை நாட்போல் இனியு நின் னின்பமே
விரும்புவேன் நின்னை மேம்படுத்திடவே
முயற்சிகள் புரிவேன் முத்தியும் தேடுவேன்.

மனத்தின் வாழும் வாழ்வு கடினமானது. இவ்வளவுநாளும் இன்பத்தை விரும்பியது போலவே இனிமேலும் உன்னுடைய இன்பத்தையே நானும் விரும்புவேன். மனத்தை மேம்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடு வேன் எனப் பாரதி கூறுவது சிந்தனைக்குரியது. மனத்தை மேம்படுத்த வேண்டிய தேவை மானிடர் எல்லோருக்கும் உண்டு. மனத்தைப் பண்படுத்த வேண்டுமாயின் வழிபாட்டில் மனதை ஈடுபடச்செய்ய வேண்டும். அதனையே பாரதி "முத்தியும் தேடுவேன்" எனக் குறிப்பிட் டுள்ளான். இப்பாடலடிகளில் மனம் எனும் பெண்ணை முதலில் வாழ்த்துகிறான்.

பெண்ணை நல்வழிப்படுத்த வேண்டும். அப்போதுதான் வீடும் நாடும் நலம்பெறும். மனமெனும் பெண்ணின் விழியிலேபடாமல் என் விழியிலேபட்ட சிவமெனும் பொருளைத் தினமும் போற்றி உன்தனக் கின்பம் ஓங்கிடச் செய்வேன் என்கிறான். மனம் உண்டானால் இடமுண்டு என்ற பழமொழியும் வழக்கில்உளது. எனவே, எமது மனதை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டுமாயின் சிவமெனும் பொருளைத் தினமும் போற்றும் செயற்பாட்டில் ஈடுபடவேண்டும். பாரதியின் பக்தி நெறியை ஆராய்வோர் மனம் பற்றிப் பாரதி பாடிய பாடல்களையும் ஆழமாக நோக்கவேண்டும்.

மனம், நெஞ்சு என இரு சொற்கள் பாரதியின் பாடல்களிலே பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டு சொற்களும் பொருள் நிலையில் ஒன்றையே குறிப்பவை. ஆனால் மனத்தைப் பார்க்கமுடியாது. நெஞ்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலுறுப்பாக இருப்பதால் பார்க்கக்கூடியதாக உள்ளது. பகைவனுக் கருள்வாய் என்ற பாடலில் பாரதி நெஞ்சையே விளித்துப் பாடியுள்ளான். உருவமற்ற மனத்தைப் பெண்ணாக உருவாகித்தவன் நெஞ்சை நேரடியா கவே தொடர்பு கொள்கிறான். இப்பாடலில் உள்ளடக்கப்பட்டுள்ள கருத்துகள் நெஞ்சை நெறிப்படுத்துவனவாயுள்ளன பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே என்று நெஞ்சைவழிப்படுத்துகிறான். புகை நடுவே தீயிருப்பதுபோல பகைநடுவே அன்புருவான பரமன் இருப்பதை எடுத்துரைக்கின்றான். சிப்பியிலே நல்ல முத்து விளைவது போல குப்பையிலே குருக்கத்தி வளர்வதுபோல நல்ல நெஞ்சமே பகைவனுக் கும் நாம் அருள் செய்ய வேண்டும்.

**உள்ளத்திலே கள்ளம் புகுந்தால் உள்ளம் நிறைவு**
**காணாது அதற்கு ஓர் உவமை கூறி விளக்கியுள்ளான்**

**உள்ள நிறைவிலோர் கள்ளம் புகுந்திடில்**
**உள்ளம் நிறைவாமோ - நன்னெஞ்சே**
**தெள்ளிய தேனிலோர் சிறிது நஞ்சையும்**
**சேர்த்தபின் தேனாமோ? நன்னெஞ்சே**

தெளிந்த தேனிலே ஒரு துளி நஞ்சைக் கலந்து விட்டால் பின்னர் அது தெளிந்த தேனாக இருக்கமாட்டாது. அதே நமது தெளிந்த உள்ளத்திலும் கள்ளம் புகுந்துவிட்டால் பின்னர் உள்ளம் நிறைவான உள்ளமாக இருக்காது.

இதேபோன்று வாழ்வைப்பற்றி நினைத்த பின்னர் தாழ்வை நினைக்கக்கூடாது. மேலும் பிறருக்குத் தாழ்வு வரவேண்டும் என்று ஒருவன் எண்ணினால் அவனே அழிந்து விடுவான் எனச் சாத்திரங்கள் கூறுவதையும் சுட்டிக் காட்டியுள்ளான். பாரதியின் பாடல்களில் கீதையின் கருத்துகள் விரவியுள்ளன. கவுரவரோடு போர் செய்யும் போது தளர்ச்சியுற்ற அருச்சுனனைக் கண்ணன் கீதையை உபதேசித்து ஆற்றலுடையவனாக்கியதைப் பாரதி அடிக்கடி நினைவிற் கொண் டுள்ளான். அதனையே நெஞ்சிற்கும் எடுத்துரைக்கின்றார். மனதை ஒருப்படுத்த வழிபாட்டை மேற்கொள்வதுபோல நெஞ்சை நெறிப் படுத்துவதற்குக் கண்ணனை வழிபடத் தூண்டுகிறான். திருநாவுக் கரசரும் நெஞ்சத்தை நெறிப்படுத்தக் கோயில் வழிபாடு செய்யும்படி கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலை புனல்சேர் செஞ்சடையெம் மாதீ யென்றும்
ஆரூரா வென்றேன்றே யலறா நில்லே.

கோயில் வழிபாட்டை ஒரு முறைப்படி தொடர்ந்து செய்தால் மனம் பக்குவப்படும். நெஞ்சம் அமைதியடையும். பாரதி நாவுக்கரசரை விட மேலும் ஒரு படிமேலேபோய் நெஞ்சத்தை வழிநடத்துகிறான். வழிபாட்டு நடைமுறைகளின் பயிற்சி பண்டுதொட்டே எம்மிடையே நிலவிவரும் பண்பாடாகும். ஆனால் பாரதியின் பாடல் பிறிதொரு நிலையில் நெஞ்சத்தை நெறிப்படுத்துகிறது.

"தின்னவரும்புலி தன்னையும் அன்பொடு
சிந்தையிற் போற்றிடுவாய் - நன்னெஞ்சே
அன்னை பராசக்தி யவ்வுரு வாயினாள்
அவளைக் கும்பிடுவாய் - நன்னெஞ்சே"

கொடிய மிருகமாகிய புலியைக் கண்டவுடன் எல்லோருமே அஞ்சுவர். தன்னைக் கொல்ல வருகின்ற புலியை மனதில் அன்போடு நோக்க வேண்டும். எனப் பாரதி கூறுவது எளிதான செயற்பாடல்ல. ஆனால் அப்புலியை அன்னை பராசக்தியென நெஞ்சில் நினைந்தால் கரங்கூப்பி வழிபடலாம். நமது வழிபாட்டு மரபில் யானையைக் கண்டால் பிள்ளையாராகவும், மயிலைக் கண்டால் முருகனாகவும், விடையைக் கண்டால் சிவனாகவும், நாயைக் கண்டால் வயிரவராகவும், பாம்பைக் கண்டால் அம்மனாகவும் கருதி வழிபடும் மரபு உண்டு. அதனையே பாரதியும் பாடலிற் பதிவாக்கியுள்ளான். மனப்பயத்தை நீக்க இறைபற்றிய சிந்தனையே உதவும் என்றவலுவான நம்பிக்கை பாரதி யிடம் நிறையவே இருந்தது. அவருடைய வாழ்நாளின் இறுதிப் பகுதி யிலும் கோயில் யானையை நம்பிக்கையோடு எதிர்கொண்டமையை இங்கு நினைவு கூரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவு என்ற பாடலில் பாரதி மனத்தை நேரடியாக நிறுத்தி வைத்து நெறிப்படுத்துகிறான். புத்தியில் மயக்கம் ஏற்படும்நிலை வேதனைப்படும் நிலை ஏற்படும்போது என்ன செய்ய வேண்டுமெனப் பாடலிலே கூறியுள்ளான்.

"எல்லாமாகக் கலந்து நிறைந்த பின்
ஏழமை யுண்டோடா மனமே
பொல்லாப் புழுவினைக் கொல்ல நினைத்தபின்
புத்தி மயக்கமுண்டோ?"

இங்கே மனத்தை ஆணாக உருவகித்து உண்டோடா! என விளித்திருப்பது நோக்குதற்குரியது. இறைவனே எல்லாம் எனக் கருதி வழிபடும்போது ஏழ்மைக்கிடமில்லை. எல்லாமே நிறைவாக இருக்கும். ஒரு பொல்லாத புழுவைக் கண்ட பின்னர் அதனைக் கொல்ல நினைத்த பின்னர் மனம் குழம்பக்கூடாது. தீமையை அழிப்பதில் திடமாக இருக்கவேண்டும். மனதில் உறுதிவேண்டும் என்பதே பாரதியின் கோட்பாடாகும்.

உயிர் ஒன்று என்று உணர்ந்த பின்னே உள்ளங்குலையக்கூடாது. வாழ்க்கையில் வேதனையில்லை. சித்தினுடைய இயல்பையும் அதன் பெருஞ்சக்தியின் செயற்பாட்டையும் நன்குணர்ந்து கொண்டால் எத்தனை கோடி இடர்வந்தாலும் வென்றுவிடலாம். செயல்களெல்லாம் சிவன் செயலென்ற எண்ணம் வேண்டும். இறையைப் பொய் என்று கருதாமல் நம்பி வழிபடுபவர் இந்த உலக வாழ்வைக் கண்டு சிறிதும் அச்சம் கொள்ளமாட்டார்கள்.

ஆன்ம வொளிக் கடலில் மூழ்கித் திளைப்பவர்க்
கச்ச முண்டோ - மனமே
தேன்மடை யிங்கு திறந்ததுகண்டு
தேக்கித் திரிவமடா!

இப்பாடலில் பாரதி ஓர் உயர்ந்த வழிபாட்டுச் சிந்தனையைக் காட்டி யுள்ளான். ஆன்மா ஒளிக் கடலிலே மூழ்கித் திளைக்கும் அநுபவம் தியானத்தால் வருவது. அவ்வாறு ஆன்ம ஒளிக் கடலிலே மூழ்கித் திளைப்பவருக்கு மனதில் அச்சம் கிடையாது. தேன் மடையைத் திறந்து விட்டது போன்ற இன்பத்தை இதனால் நாம் அடையலாம். வெள்ளம் போலத் தேன் பாய்ந்துவரின் அதில் எல்லோருமே திளைத்து இன்பங் காணலாம். பாரதி காட்டும் இந்த மனப்பக்குவம் பாரதியின்



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்; 10394 CC
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையநுபவத்திற்கும் அப்பாற்பட்ட ஓர் அற்புத அநுபவமாகும். தான் பெற்ற இந்த அநுபவத்தைப் பிறருமறியும் வண்ணம் பாடலிலே அமைத்துள்ளான். விநாயகர் நான்மணிமாலையிலும் பாரதி மனம் பற்றிய பதிவைச் செய்துள்ளார்.

"மேன்மைப் படுவாய் மனமே! கேள்
விண்ணின் இடிமுன் விழுந்தாலும்
பான்மை தவறி நடுங்காதே
பயத்தால் ஏதும் பயனில்லை
யான்முன் உரைத்தேன் கோடிமுறை
இன்னுங் கோடி முறை சொல்வேன்
ஆன்மா வான கணபதியின்
அருளுண்டு அச்சம் இல்லையே"

இப்பாடல் மனம் மேன்மையுற வழி கூறுகிறது. இடிவிழுந்தாலும் மனம் கலங்காமல் நடுக்கமுறாமல் இருக்க வேண்டும். நிலை தவறாமல் நிற்பதே நன்று. எல்லாவற்றையும் கண்டு பயப்படுவதால் ஒருபயனும் இல்லை. நாள் முன்னரும் பல கோடி முறை உரைத்ததையே மனம் கடைப்பிடிக்க வேண்டும் எனப் பாரதி கூறுவது எல்லோருக்கும் சுயமாக மனத்தை வழிபடுத்துவதற்கு வழிகாட்டுகிறது. ஆன்மாவான கணபதியின் அருளால் அனைத்துமே நன்மையாக நடக்கும் எனப் பாரதி நம்பினான். இன்றுவரையும் இந்த நம்பிக்கையானது எம்மிடையே நிலை பெற்றுள்ளது. எந்தச் செயற்பாட்டையும் தொடங்க முன்பாகக் கணபதியைத் தொழுது தொடங்குவது மரபாக உள்ளது.

நெஞ்சு நேர்மையுடன் செயற்படவேண்டும். வஞ்சமான கவலைகளுக்கு இடம் கொடாமல் இறைவனே தஞ்சமென நினைந்துவாழும் முறைமையைப் பாரதி பலபாடல்களிலே பாடியுள்ளான். பாரதியின் வழிபாடு பற்றிய சிந்தனை காலத்திற்கேற்ப மாற்றமுற்றதையும் காணமுடிகிறது. நெஞ்சை விழித்துப்பாடும் பிறிதொரு பாடல் இதற்கு நல்லதொரு சான்றாகவுள்ளது.

பாவி நெஞ்சே பார்மிசை நின்னை
இன்புறச் செய்வேன் எதற்குமினி அஞ்சேல்
ஐயன் பிள்ளை (யார்) அருளால் உனக்கு நான்
அபயமிங்களித்தேன்.... நெஞ்சே
நினக்கு நான் உரைத்தேன் நிலைநிறுத்திடவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயிடைக் குதிப்பேன் கடலுள் வீழ்வேன்
வெவ்விடமுண்பேன் மேதினியழிப்பேன்
ஏதுஞ் செய்துனை இடரின்றிக் காப்பேன்
மூட நெஞ்சே முப்பது கோடி
முறையுனக் குரைத்தேன் இன்னும் மொழிவேன்
தலையிலிடி விழுந்தால் சஞ்சலப்படாதே
ஏது நிகழினும் நமக்கென் றிரு
பராசக்தி யுளத்தின் படியுலகம் நிகழும்
நமக்கேன் பொறுப்பு நான் என்றோர் தனிப்பொருள்
இல்லை நானெனும் எண்ணமே பொய்
என்றான் புத்தன் இறைஞ்சுவோம் அவன்பதம்
இனியெப்பொழுதும் உரைத்திடேன் இதை நீ
மறவாதிருப்பாய் மடமை நெஞ்சே
கவலைப்படுதலே கருநரகு அம்மா
கவலையற்றிருத்தலே முக்தி
சிவனொரு மகனிதை நினக்கருள் செய்கவே.

இப்பாடலிலே பலமுறை நெஞ்சிற்கு உரைத்ததைப் பற்றிக் குறிப்பிடு வதன் மூலம் நெஞ்சை வழிப்படுத்தல் எளிதன்று என்பதைப் பாரதி நயமாக உரைத்துள்ளான். பராசக்தியின் ஆணைப்படியே இவ்வுலகம் இயங்குகிறது. இது பாரதிக்கு முன்னோர் பயிற்றிய வழிபாட்டு முறைமையாகும். ஆனால் நாட்டில் பரவிய புத்தபெருமான் கருத்தையும் இணைத்துப் பார்க்கிறான். "நான் என்ற எண்ணமே பொய்" என்ற கருத்து பாரதி எப்போதோகற்ற வழிபாட்டுத் தத்துவம். அதையே புத்தர் பேசியதால் அவரையும் இறைஞ்சும் படி கூறுகிறான். பாரதியிடம் மதக்காழ்ப்பு இருக்கவில்லை. அன்பை வலியுறுத்தும் எல்லாமதக் கருத்துகளுக்கும் மதிப்புக்கொடுத்தான். ஆனால் தன்னுடைய அடிப்படையான வழிபாட்டு நம்பிகையை அவர் கைவிடவே இல்லை. கவலைப்படுவது நரக வாழ்வு. கவலையற்றிருப்பது முக்திவாழ்வு என வாழ்வியலை எல்லோரும் விளங்கிக்கொள்ளும் வகையில் விளக்கி யுள்ளான். ஆனால் சிவனருள் செய்ய வழிபடுவேன் எனக் கூறுவதன் மூலம் பிறரின் நலத்திற்காக வழிபாடு செய்யும் கொடை மனத்தை எமக்கு இனங்காட்டுகிறான். இந்த மாநிலம் பயனுற வாழவேண்டுமென விரும்பிய பாரதி மனத்தைச் சீர்மியம் செய்ய வழிகாட்டியுள்ளார். பராசத்தியிடம் நசையறு மனத்தையே வேண்டிநின்றான். மனித வாழ்வின் நிலையை நெஞ்சுக்குக் கூறுவது போல எம்மையே சீர்மியம் செய்துள்ளான்.

பொது நூலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்னுமொரு முறை சொல்வேன் பேதை நெஞ்சே
எதற்குமினி உளைவதில் பயனொன்றில்லை
முன்னர் நமதிச்சையினாற் பிறந்தோமில்லை
முதலிறுதி இடை நமது வசத்தில் இல்லை"

உள்ள தெலாமோர் உயிரென்று தேர்ந்தபின்
உள்ளங் குலைவ துண்டோ - மனமே
வெள்ள மெனப்பொழி தண்ணரு வாழ்ந்தபின்
வேதனை யுண்டோடா!
சித்தி னியல்பு மதன் பெருஞ் சக்தியின்
செய்கையுநீ தேர்ந்துவிட்டால் - மனமே
எத்தனை கோடி இடர் வந்து சூழினும்
எண்ணஞ் சிறிதுமுண்டோ!
செய்க செயல்கள் சிவத்திடை நின்றெனத்
தேவ னுரைத்தனனே - மனமே!
பொய் கருதாமல் அதன்வழி நிற்பவர்
பூதல மஞ்சுவரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியார் கவிதைகளில் பெண்மை மரபு நிலையும், புரட்சி நிலையும்

**முன்னுரை**

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ்க்கவிஞர் பாரதி. தமிழ்க்கவிதையின் செல்நெறியைத் திசை திருப்பிய புதுமைக்கவிஞர். சமுதாயத்திலே புரட்சியான மாற்றங்களை ஏற்படுத்தக் கவிதையைக் கருவியாகக் கையாண்டவர். பாட்டுத்திறத்தாலே இவ்வையகத்தை மாற்றியமைக்க முனைந்தவர். இதுவரையும் தோன்றிய உலக மகா கவிகளுள் பாரதியாரைப்போலப் பாமர மக்களை, அடிமைத்தளையில் அகப்பட்டவர்களைக் கவர்ந்திட்ட கவிஞர் எவருமே இல்லை. விடுதலை விரும்பியாய் வீரகாவியம் பாடியவர். மாபெரும் கவிஞர்கள், எழுத் தாளர்கள், சிந்தனையாளர்கள் உலகின் எல்லாப் பகுதிகளிலும் பேசப்படு பவர்கள். அவர்களது படைப்புக்கள் காலத்தை வென்று நிற்கும் தன்மையன. பாரதி உலகம் அறிந்த ஒரு மக்கள் கவிஞர். அவரது பாடுபொருளும் பரந்ததாகவுள்ளது.

பல்வேறு மொழிகளையும், இனங்களையும், பழக்கவழக்கங் களையும், சமயங்களையும் தன்னகத்தே கொண்ட பல்தேசிய இந்தியா முழுவதையும் தாயகமாகக் கொள்ளும் எண்ணத்தைப் பாரதியின் தேசபக்திக் கவிதைகள் ஊட்டின. பாரதியின் கவிதை உள்ளம் இயற்கை அழகையும் மானிட உறவுகளையும் பெரிதும் நேசித்தது. பாரதிக்குமுன் தமிழ்க்கவிதை மன்னர் அவையில் மட்டுமே நடமாடியது. வங்கக் கவிஞர் தாகூரைப்போல பாரதி, கவிதையை மக்கள் அவையிலே அரங் கேற்றினார். பாரதி கடந்த காலத்திற்கும் வருங்காலத்திற்கும் ஒரு இணைப்பை ஏற்படுத்தியவர்.

பாரதி பல்வேறு மொழிகளைப் பயின்றவர். இந்தி, ஆங்கிலம், வடமொழி, பிரஞ்சு, வங்காளம் முதலிய மொழிகளைக்கற்று; அந்த அந்த மொழிகளிலுள்ள காவியங்களையும், கவிதைகளையும் ஆராய்ந்த பின்னரே "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடியுள்ளார். அதனால் தமிழ்மொழியின் பெருமையை உலகம் அறியவைக்க வேண்டும் என விரும்பினார். "தேம துரத்தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுகோள் விடுத்தார். அதற்கும் மேலாகத் தனது இலக்கை வருமாறு பாடியுள்ளார்.

"மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்."

பாரதியின் இலக்கு இன்று நிறைவேறி வருகிறது. இக்கட்டுரை பாரதியின் பெண்மை பற்றிய கருத்துக்களை முன்வைப்பதாக அமைகிறது.

**1. புரட்சிக்கவிஞர் பாரதியின் வாழ்வுச்சூழல்**

பாரதியார் 1882ஆம் ஆண்டு பிறந்தவர். ஐந்து வயது நிறைவதன் முன்னர் அன்னையை இழந்தவர். தந்தை மறுமணம் செய்ததால் சிற்றன்னையின் அரவணைப்பில் வளர்ந்தவர். தந்தையின் கண்டிப்பாக வளர்ப்புநிலை பிள்ளைப்பராயத்தில் பாரதியை மனம்வருந்த வைத்தது. அதனை அவருடைய சுயசரிதைப் பாடல் காட்டுகிறது.

"வேண்டு தந்தை விதிப்பினுக் கஞ்சியான்
வீதியாட்டங்க ளேதினும் கூடிடேன்
தூண்டு நூற் கணத்தோடு தனியவனாய்
தோழமை பிறிதின்றி வருந்தினேன்."

சிறுவயதிலேயே காவடிச் சிந்துப் பாடல்களில் விருப்பமுடைய வராயிருந்தார். இயற்கைச் சூழலைப் பெரிதும் ரசித்தார். தந்தையின் பணிப்பின்பேரில் ஆங்கிலக்கல்வி கற்கச் செல்வதை வெறுத்தார். அதனாற் பொருட்செலவே ஏற்பட்டதெனக் கவிதை பாடினார்.

"செலவு தந்தைக்கோ ராயிரஞ் சென்றது
தீதெனக்குப் பல்லாயிரஞ் சேர்த்தன
நலமோ ரெட்டுணை யுங்கண்டி லேனிதை
நாற்ப தாயிரம் கோயிலிற் சொல்லுவேன்."(சுயசரிதை)

கவிதையால் தன் வாழ்வியல் அனுபவங்களைப் பாடியவர் பாரதி. இளமையில் தமிழ்மொழியில் அவருக்கிருந்த ஈடுபாட்டை இது உணர்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14 வயதில் செல்லம்மாளைத் திருமணம் செய்து இல்லற வாழ்விற் பாரதி ஈடுபட்டபோது அதை ஒரு விளையாட்டாகவே எண்ணி யுள்ளார். அக்கால குல வழக்கப்படி ஒருவரோடொருவர் ஏற்ற பருவம் வரும்வரை பழகும்நிலை விலக்கப்பட்டிருந்தது. அவ்வேளையில் பாரதி தன் உணர்வுகளை செல்லம்மாளிடம் தெரிவிக்க அழகிய பாடல் களைப் பாடியுள்ளார். அண்ணாமலை ரெட்டியாரின் ஆறுமுகன் வேலன் பாடலைப் பாரதி நன்கு சுவைத்துத் தனது பாடல்களையும் பாடினார் போலும்.

பாரதி திருமணம் முடித்த மறு ஆண்டே தந்தை நோய்வாய்ப் பட்டு இறந்தார். அதனால் வறுமை ஏற்பட பாரதி இல்வாழ்வுக்காகப் பொருளீட்டம் செய்யநேர்ந்தது. அப்போது தான் நிலையை வெளிப் படையாகப் பாடியுள்ளார்.

மடமைக் கல்வியில் மண்ணும் பயனில்லை
எந்த மார்க்கமும் தோன்றில தென் செய்கேன்?
ஏன் பிறந்தன னித்துயர் நாட்டிலே?

பின்னர் காசி வாழ்க்கையில் பாரதி பெற்ற கல்வியறிவு பரந்த உள்ளத்தையும் விரிந்த நோக்கையும் கொடுத்தது. அங்கு தன் தோற்றத்தையும் மாற்றிக்கொண்டார். தலைப்பாகை, சட்டை, காலிற் சப்பாத்து என்பன அணிந்து குடுமியையும் திருத்தி அமைத்துக் கொண்டார். 1902இல் எட்டயபுரம் வந்து மன்னர் மாளிகையில் ஆசிரியத்தொண்டு செய்தார். ஆங்கிலப்புலமை வல்லுனர்களான ஷெல்லி, ஷேக்ஸ்பியர், பைரன், கீட்ஸ் போன்றவர்களின் நூல்களை நன்று கற்றுத்தேறி ஷெல்லிதாசன் என்றபெயரில் பத்திரிகைகளில் கட்டுரைகளும் எழுதினார்.

புதுவையில் பாரதியாருடைய வாழ்க்கை வேறுபட்டது. "இந்தியா" பத்திரிகைப் பணியைத் தொடர முடிந்தது. இங்குதான் அவருக்கு சகுந்தலா பிறந்தாள். அரவிந்தர், ரிஸார் போன்றோருடைய நட்பும் கிடைத்தது. வேதங்கள், வேதாகமங்கள், நீதிநூல்கள், இலக்கியங்கள் முதலியவற்றில் அதிக ஈடுபாடு கொள்ள வாய்ப்பேற் பட்டது. பிரெஞ்சு மொழியையும் கற்கமுடிந்தது. அங்குள்ள வாழ்வுச் சூழல் முப்பெரும் பாடல்களை இயற்ற உறுதுணையாகவும் இருந்தது.

திருவல்லிக்கேணி பாரதியார் தெய்வ வழிபாட்டுச்சூழலாக இருந்தது. தினமும் வழிபாடு செய்யும் பார்த்தசாரதி கோவில் யானையால் தாக்கப்பட்ட சம்பவம் அவர் வாழ்வு முடியக் காரணமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிற்று. வறுமை பாரதியார் உடலை வருத்தினாலும் உள்ளம் உறுதியோடிருந்தது. பக்தி உணர்வோடு கவிதைகளை இயற்றிவந்த பாரதி 1921 செப்டெம்பர் 11ஆம் நாள் இறைவனடியை எய்தினார்.

செல்லம்மாள் பாரதியின் நூலும்; பாரதி பாடிய சுயசரிதைப் பாடலும் அவரது வாழ்வுச் சூழலை அறிய ஓரளவு உதவுகின்றன. பாரதியின் வாழ்வுச்சூழல் அவரது கவிதையாக்கத்தில் பெரும்பங்கு கொண்டிருந்தது. இரினா. என். ஸ்மிர்னோவா என்னும் சோவியத் அறிஞர் பாரதியின் வாழ்க்கைச் சூழல்; அவருடைய படைப்புக்களில் ஏற்படுத்திய தாக்கத்தை வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> "பாரதி கீழ்-மத்தியதர வர்க்கத்திலிருந்து அதாவது ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தில் பொதுவான தேசிய நலன்களை வெளியிடும் வர்க்கத்திலிருந்து வந்தவர். பிரதானமாக இதுவே அவரது படைப்பாற்றலின் பலமான அம்சங்களையும் பலவீனமான அம்சங்களையும் தீர்மானித்தது. இது ஒரு புறத்தில் ஆக்கபூர்வமான முற்போக்கான அம்சங்களைக் கொண்டுள்ளது. தமிழ் நாட்டினரின் வளர்ந்தோங்கி வரும் தேசிய விழிப்புணர்வைப் பிரதிபலிக்கிறது. மறுபுறத்திலோ இந்திய முதலாளித்துவ வர்க்கத்தின் திட்டமற்ற உறுதியற்ற அரசியல் திட்டத்திற்கும் சான்று பகர்கின்றது."

**2. பெண்மை பற்றிய எண்ணக்கருக்கள்**

பாரதியின் பெண்மை பற்றிய எண்ணக்கருக்களை இனங் காண்பதற்கு அவருடைய கவிதைகளே சான்றாக உள்ளன. இன்று தொகுப்பு நிலையில் கிடைக்கும் பாரதியின் கவிதைகளைத் தேசிய கீதங்கள், தெய்வீகப் பாடல்கள், பல்வகைப்பாடல்கள், முப்பெரும் பாடல்கள் எனப் பகுத்துநோக்கலாம். இவற்றுள் பெண்மை பற்றிய எண்ணக் கருக்கள் விரவிக்கிடக்கின்றன. பாடலின் தலைப்பாக வெளிப்பாட்டு நிலையிலும், பாடலின் உட்கிடையாக மறைமுக நிலையிலும் அவை அமைந்துள்ளன. தெய்வப்பாடல்களில் பெண்மையை வழிபாட்டுக் குரிய பேராற்றலாகப் பாரதி பாடியுள்ளார். சக்தி, சிவசக்தி, மகாசக்தி, பராசக்தி, அன்னை, பூலோககுமாரி என வெவ்வேறு வடிவங்களாகக் கவிதையில் பாரதிகாட்டுகிறார்.

பெண்மையின் தனிக்கூறுகளைப் பாரதி எடுத்துக்காட்டுவது தனித்துவமானது. தெய்வீக நிலையாக அன்றி மானிட நிலையில் பெண்மையின் இயல்பைப் பாரதி எடுத்துப் பாடுகிறார்.

வாழ்வு பெருக்கும் மதியே சக்தி
மாநிலங் காக்கும் மதியே சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்வு தடுக்கும் சதிரே சக்தி
சஞ்சலம் நீக்கும் தவமே சக்தி
வீழ்வு தடுக்கும் விறலே சக்தி
விண்ணையளக்கும் விரிவே சக்தி
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி
உள்ளத்தொளிரும் விளக்கே சக்தி. (சக்தி : 3)

சிவசக்தியாகப் பாடும்போது தெய்வமாக எண்ணுகிறார்.

"அம்மை சிவசக்தி - எமை
அமரர் தம் நிலையினில் ஆக்கிடுவாய்"
(சிவசக்தி : 8)

மகாசக்தி, பராசக்தி, பூலோககுமாரி என்னும் பாடல்கள் பெண்மையின் தெய்வீக நிலையை வெளிப்படுத்துகின்றன. மகாசக்தி வெண்பா வழிபாட்டு நிலையில் பெண்மையின் ஆற்றலைப் புலப்படுத்து கின்றன.

"தன்னை மறந்து சகல உலகினையும்
மன்ன நிதம் காக்கும் மகாசக்தி - அன்னை
அவளே துணையென்று அனவரதம் நெஞ்சம்
துவளாதிருத்தல் சுகம்"
(மகாசக்தி வெண்பா : 1)

இங்கு அன்னை மடியில் கண்ட அத்தனை சுகங்களையும் எண்ணிப் பாரதி பெண்மையைப் போற்றுகிறார்.

பல்வகைப்பாடல்களில் சமூகம், தனிப்பாடல்கள், சான்றோர், சுயசரிதை என்னும் பகுதிகளில் மானுட நிலையில் பெண்மை பற்றிய கருத்துக்களைப்பாடும் பாடல்கள் உள்ளன. புதுமைப்பெண், பெண்மை வாழ்க, பெண்கள் விடுதலைக்கும்மி, பெண்விடுதலை, கவிதைத் தலைவி, கவிதைக்காதலி, சந்திரமதி, நிவேதிதா, பிள்ளைக்காதல் என்னும் பாடல்களில் மானுடப்பெண்களின் இயல்பைப் பாடியுள்ளார். தான் வாழும் காலத்துப் பெண்களைக்கண்டு அவர்களின் பேராற்றலை வெளிப்படுத்தப் பாடுகிறார்.

பெண்மையைப் பாடும்போது ஒரு சமத்துவநிலை பேண எண்ணுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆணும்பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்"
(புதுமைப்பெண் : 4)

பெண்ணறத்தினை ஆண்மக்கள் வீரந்தான்
பேணு மாயின் பிறகொரு தாழ்வில்லை"
(பெண்மை வாழ்க : 4)

கற்பு நிலையென்று சொல்லவந்தார் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"
(பெண்கள் விடுதலைக்கும்மி)

"அறவிழுந்தது பண்டை வழக்கம்
ஆணுக்குப் பெண் விலங்கெனும் அஃதே"
(பெண்விடுதலை : 2)

"பேச்சுக்கிடமேதடி - நீ
பெண்குலத்தின் வெற்றியடி!"
(சந்திரமதி : 2)

முப்பெரும் பாடல்களில் பெண்ணைக் காதலியாகவும், மனைவியாகவும், பிள்ளையாகவும், தாயாகவும் எண்ணிப்பார்க்கிறார். மனித வாழ்வியலில் பெண்மையின் உன்னதமான பங்களிப்பை விளக்கு கிறார். கண்ணன் பாட்டில் கண்ணன் என்தாய், கண்ணம்மா என்குழந்தை, கண்ணம்மா என்காதலி, கண்ணம்மா என்குல தெய்வம் என்னும் பாடல்கள் இதற்குச் சான்றாக உள்ளன. பாஞ்சாலி சபதத்தில் பாஞ்சாலியின் சபதத்தின் மூலம் பெண்மை வீரத்தை விளக்குகிறார். குயிற்பாட்டில் பேடைக்குயிலாக வந்து மானுடப்பெண்ணாக மாறும் நிலையைப் பாடிப் பெண்மையின் அற்புத ஆற்றலை வெளிப் படுத்துகிறார்.

தின்றிடப் பண்டங்களும் - செவி
தெவிட்டறக் கேட்க நற் பாட்டுக்களும்
ஒன்றுறப் பழகுதற்கே - அறி
வுடைமெய்த் தோழரும் அவள் கொடுத்தாள்."
(கண்ணன் என் தாய் : 7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு தாய்மையின் குணத்தில் பெண்மையின் பண்பு நலன்களைக் காட்டுகிறார்.

"சின்னஞ் சிறு கிளியே கண்ணம்மா!
செல்வக் களஞ்சியமே
என்னைக் கலி தீர்த்தே - உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்!"

(கண்ணம்மா என் குழந்தை : 1)

இங்கு பெண்குழந்தைப் பேற்றைச் சிறப்பித்துள்ளார்.

"பாயு மொளி நீ யெனக்குப் பார்க்கும் விழி நானுனக்கு
தோயும் மது நீ யெனக்கு தும்பியடி நானுனக்கு
வாயுரைக்க வருகுதில்லை வாழி நின்றன் மேன்மையெல்லாம்."

(கண்ணம்மா என் காதலி : 1)

இங்கு காதலியின் உணர்வுநிலையைக் காட்டுகிறார்.

குயிற் பாட்டில் பாரதியின் பெண்மை பற்றிய எண்ணக்கரு வேறுபட்ட வடிவிலே வெளிப்பட்டுள்ளது. காதல் பற்றிய கற்பனைக் கனவைப் பாடுவதன் மூலம் பெண்மையின் காதல் நிலையை விளக்கு கிறார். மானுடக் காதல் நிலைநின்று கன்னிக்குயிலொன்றின் காதலைப் பாடுகிறார்.

"கன்னிக்குயிலொன்று காவிடத்தே பாடியதோர்
இன்னிசைப்பாட்டினிலே யானும் பரவசமாய்
மனிதவுரு நீங்கிக் குயிலுருவம் வாராதோ
இனிதிக் குயிற்பேட்டை என்றும் பிரியாமல்
காதலித்துக் கூடிக் களியுடனே வாழோமோ
நாதக் கனவிலே நம்முயிரைப் போக்கோமோ?"

(குயிற்பாட்டு : குயில் 25-30)

காதல் உணர்வு மேலோங்க மானுட உருவை விடுத்துக் குயிலுருவம் பெற விரும்பும் பாரதியின் பாட்டில் மறை பொருளாகப் பெண்மையின் பண்பு நலன் பேசப்படுகிறது. பொருந்தாக் காதல் நிலையில் பேதுறும் ஆண்மகனாக நின்று கவிஞர் பாடும்போது பெண்மையின் அவலநிலையையும் ஒருகால் எண்ணிப் பார்த்தமையை உணரமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி பெண்மை பற்றி ஆழமாகவும் அகலமாகவும் எண்ணிப் பாடியுள்ளார். தான் வாழ்ந்த காலச்சூழலிலும் வளர்ந்த சூழலிலும் பெண்மையை மீட்டுருவாக்கம் செய்ய முற்பட்டார். அது அவருடைய கவிதையில் புதுமையான மரபினைத் தொடக்குவதற்கு முக்கிய காரண மாக அமைந்ததெனலாம். மக்கள் மனதில் பெண்மை பற்றிய மரபான எண்ணங்களை நீக்கிப் புதுநெறியில் காலத்தின் தேவைக்கேற்ப வழிப்படுத்த முயன்றார்.

**3. மரபு பற்றிய கண்ணோட்டம்**

பெண்மை பற்றிய மரபான கண்ணோட்டம் பாரதிக்கு இருந் துள்ளது. "முன்னோர் நூலின் முடிபொருங்கொத்து பின்னோன் வேண்டும் விகற்பங்கூறல்" என்னும் இலக்கணத்திற்கமைய பாரதியின் கவிதைகளிலும் பண்டைய மரபு பேணப்பட்டுள்ளது.

பண்டைய இலக்கணமான தொல்காப்பியம் பெண்மையின் நிலையை ஆண்மைக்கு ஒத்ததாகவே விளக்கி நிற்கிறது.

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொரு
உருவ நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளர்ந்த ஒப்பினது வகையே"
(தொல்.மெய்ப்பாட்டியல்)

இல்வாழ்க்கையில் ஆணும் பெண்ணும் செயற்படுத்த வேண்டிய பண்புகளையும் தொல்காப்பியம் வருமாறு சுட்டியுள்ளது.

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே."

சங்க இலக்கியங்களிலும் பெண்மை தாழ்த்தப்படவில்லை. ஐங்குறுநூற் றின் காப்புச் செய்யுளில் வரும் நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன் என்னும் அடியும்.

"பெண்ணுரு ஒரு திறனாகி நின்று அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினுங் கரக்கும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என, புறநானூற்றுக் கடவுள் வாழ்த்தில் வரும் அடிகளும் இதனை உணர்த்தி நிற்கின்றன. பின்வந்த ஆழ்வார்களும் இறைவனைப் பெண்மை கலந்த ஆண்மையாகப் பாவனைசெய்து பாடியுள்ளனர். நாயன்மார் பாடல்களிலும் "வேயுறு தோளி பங்கன்" "பண்ணினேர் மொழி யாளுமை பங்கரோ" "அம்மையே அப்பா" "காதன் மடப்பிடி யோடும் களிறு வருவன கண்டேன்" போன்ற அடிகள் இப்பண்புக்குச் சான்றாக உள்ளன.

பிற்காலத்தில் இச்சமநிலைப் பண்பு பேணப்படாது பெண்மை தாழ்த்தப்பட்டது. பெண் கல்வியும் கலைத்திறனும் மங்கின. இதனை மீண்டும் கொணரவேண்டுமென்பதே பாரதியின் நோக்கமாயிற்று. பொய்யான காரணங்களைக்கொண்டு பெண்மை பேணப்படாமை கண்டு கொதித்தெழுந்து கவிதை பாடுகிறார்.

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்
மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டுவந்தே
வீட்டினி லெம்மிடங் காட்ட வந்தாரதை
வெட்டி விட்டோமென்று கும்மியடி"

(விடுதலைக் கும்மி)

'புதுமைப்பெண்" என்னும் கவிதையில் பெண்களுக்கு சுதந்திரம் வழங்குதல் பாரத நாட்டின் கடமையென்று குறிப்பிட்டுள்ளார். மாதர் சமத்துவம் பற்றிய கருத்து பல பாடல்களிலே காணப்படுகிறது. சுதந்திர நாட்டில் பெண்களும் சுதந்திரமாக இருக்கவேண்டும் எனப் பாரதி கருதினார். நாடு அடிமைப்பட்டதற்குப் பெண் அடிமைப்பட்டதே காரணம் என எண்ணினார். பெண் விடுதலை, பெண் விடுதலைக்கும்மி, புதுமைப்பெண் முதலிய பாடல்களில் இக்கருத்து அழுத்தமாகக் காணப்படுகிறது.

பெண் சமத்துவமின்மை உலகமெங்கும் இருப்பதையும் பாரதி கண்டித்தார். இதனை வருமாறு தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்று தமிழ்நாட்டில் மாத்திரமேயல்லாது பூமண்டல முழுதிலும் பெண்ணைத் தாழ்வாகவும் ஆணை மேலாகவும் கருதி நடத்தும் முறைமை ஏற்பட்டிருப்பது முற்றிலும் தவறு. அது துன்பங்களுக்கெல்லாம் அஸ்திவாரம் அநீதிகளுக்கெல்லாம் கோட்டை. கலியுகத்திற்குப் பிறப்பிடம்."

(இந்தியா 2.5.1908)

இந்நிலையை மாற்ற மரபான பெண்மை நிலையில் மாற்றம் ஏற்படவேண்டும் என்பதே பாரதியின் முடிவு. பாரதியின் சமகாலத்தவர்களான திரு. வி. கல்யாணசுந்தரமுதலியார், வ. வே. சு. ஐயர் போன்றோர் பண்டைய மரபான பெண்மையை முற்றாக மாற்ற விரும்பவில்லை. வ.வே. சு. ஐயர் பெண்களின் மரபான கடமைகளைப் பேணவிரும்புகிறார். ஆனால் பாரதியின் மரபு பற்றிய கண்ணோட்டம் வேறுபட்டதாயுள்ளது. பெண்மைக்குப் பொருத்தமற்ற வரையறைகள் செய்வதை வெறுத்தார். பெண்ணின் தெய்வீக ஆற்றல் பற்றிய மரபான கோட்பாட்டை அவர் புறந்தள்ளவில்லை. அவளை உயர்ந்த இடத்தில் வைப்பதற்கு அது தேவை. பாரததேசத்தின் விடுதலைக்குப் பெண்மையின் உழைப்பும் தேவை என்பதை உணர்த்தினார். இதனால் பாரதியின் கவிதைகளில் ஒரு புதிய புரட்சிநிலையின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் காணமுடிகிறது.

**4. புரட்சி நிலையின் தோற்றமும் வளர்ச்சியும்**

பாரதியின் "புதுமைப்பெண்" என்னும் கவிதை அவரது புரட்சிப் போக்கினை விளக்குகிறது. புதுமைப் பெண்ணின் சொற்களும் செய்கைகளும் கலியுகத்திற்கு மட்டுமே புதிதாக உள்ளன. ஆனாலவை யாவும் வேத காலத்திலிருந்தே வழக்கிலிருந்தவைதான். வேத முறைப்படி செயற்படாமையால் கேடு விளைந்தது என்ற பாரதியின் கூற்று அவருடைய புரட்சி நிலையின் ஊற்றை நன்குணரவைத்துள்ளது.

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச்செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்"

எனப் புதுமைப்பெண்ணின் தோற்றத்தைப் புரட்சிகரமாகக் காட்டியுள்ளார். வீட்டு வாழ்வை விட்டு வீரப்பெண்களாய் நாற்றிசை நாடுகளுக்கும் புதுமைப்பெண் செல்வாள். தேசமோங்க உழைப்பாள்.

229119



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் மூத்த பொய்மைகளை அழித்து முட்டுக்கட்டைகளைத் தகர்ப்பாள். மானுடருடைய செய்கைகள் யாவற்றையும் கடவுளர்க் கினியதாய்ச் சமைப்பாள் எனப் பாரதி கூறுவது அவரது அடிமனதில் உறைந்து கிடக்கும் வழிபாட்டு மரபைக் காட்டுகிறது. அதனால் அப்பெண்ணை பராசக்தியென்றே பாடுகின்றார்.

"போற்றி போற்றி ஜயஜய போற்றி இப்
புதுமைப் பெண்ணொளி வாழிபல் லாண்டிங்கே
மாற்றி வையம் புதுமையுறச் செய்து
மனிதர் தம்மை அமரர்க ளாக்கவே
ஆற்றல் கொண்ட பராசக்தி அன்னை நல்
அருளினாலொரு கன்னிகையாகியே
தேற்றி உண்மைகள் கூறிட வந்திட்டாள்
செல்வம் யாவினும் மேற்செல்வம் எய்தினோம்."
(புதுமைப்பெண்)

"பெண்கள் விடுதலைக்கும்மி" என்னும் பாடலில்

"காதலொருவனைக் கைப்பிடித்தே அவன்
காரியம் யாவினுங் கைகொடுத்து
மாதரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சிபெறச்செய்து வாழ்வமடி"

எனப் பாடுவதும் பாரதியின் புரட்சி நிலையின் வளர்ச்சியைக் காட்டுவதாக உள்ளது. பழமையான வாழ்வியல் அறங்களை முற்றாக நீக்கிவிடாமல் அவற்றையும் இணைத்தே புதுமையான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென்பதே பாரதியின் விருப்பம். "பாஞ்சாலி சபதம்" இதனை நன்கு உணர்த்துகிறது. பெண் உரிமையை மக்களிடையே வலியுறுத்தவே பாரதி இதனைப் பாடினார். ஒரு புதுமை யான ஆக்கமாகக் காப்பிய மரபுநிலையில் ஒரு புதிய வளர்ச்சி நிலையாக இதனை ஆக்கியுள்ளார். தேசபக்தியின் சின்னமாகப் பாஞ்சாலியைப் படைத்துள்ளார். பாரதத்தாயின் அடிமை நிலையைத் தெளிவுபடுத்தப் பெண்மையை இழிவுசெய்த இதிகாசக் கதையை எடுத்தாண்டுள்ளார். பாரத நாடு விடுதலையடைந்த பின்னரும் பாரதியின் பாஞ்சாலிசபதம் பெண்மையின் சிறப்பைப் புரட்சி மனப்பான்மையின் வளர்ச்சி நிலையை உணர்த்தும் புதிய காவியமாக நிலைபெற்றுவிட்டது. வியாசரின் பாஞ் சாலி பாரதியின் கவிதையில் புதுமெருகு பெற்றுள்ளாள். பாரதியாரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய முழுக்கவிதைகளிலும் இணைந்து நிற்கும் பெண்மை பாஞ்சாலி சபதத்தில் தனிச்சிறப்புப் பெற்றுள்ளது. இதிகாச நிகழ்ச்சியொன்றைத் தமது சமகால அரசியல் நிலையை விளக்கப் பயன்படுத்தி வெற்றி கண்டுள்ளார்.

மண்விடுதலைக்குப் பெண் விடுதலைபெறவேண்டும் என்பதே பாரதியின் நோக்கமாகும். பாரதநாட்டுப் பெண்குலத்தின் பிரதிநிதியான பாஞ்சாலி பாரதகாலத்தில் கூறிய சபதம் பாரதி காலத்திலும் நிறை வேறியிருந்தது. பாரதநாட்டுப் பெண்களின் அடிமைத்தளையை அறுக்கவேண்டும் என்ற பாரதியின் விருப்பமே பாஞ்சாலி சபதத்தைப் பாடவைத்தது.

"ஆடை குலைவுற்று நிற்கிறாள் - அவள்
ஆவென்றழுது துடிக்கிறாள் - வெறும்
மாடுநிகர்த்த துச்சாதனன் - அவள்
மைக்குழல் பற்றி யிழுக்கின்றான் - இந்தப்
பீடையை நோக்கினான் வீமனும் - கரை
மீறி எழுந்து வெஞ்சினம் - துயர்
கூடித்தருமனை நோக்கியே - அவன்
கூறிய வார்த்தைகள் கேட்டீரோ?

என்ற பாரதி காட்டும் காட்சி மக்கள் மனத்தை வீறுகொள்ள வைத்தது. ஒரு சபதம் பூணத் தூண்டியது. அவமானப்படுத்தப்பட்ட பாஞ்சாலியின் சபதம் இந்தியாவின் நிலையை உருவகப்படுத்திக் காட்டியுள்ளது. சபதத்தை நிறைவேற்றி முடிப்பது வரப்போகும் பாரதநாட்டின் விடுதலையை உருவகப்படுத்துகிறது. எனவே பாரதியின் புரட்சியும் அதன் வளர்ச்சியும் நாட்டின் விடுதலையை நோக்கியே சுழன்றன. பெண்மையின் பெயரால் சுதந்திரத்தையும் பாரதி தொழுகின் றார். பாரதப் போரின் அடிப்படைத்தத்துவம் பெண்மையின் நலனை வெளிப்படுத்துவதே. பாஞ்சாலியின் சபதமே பாரதப்போருக்குத் தகுந்த காரணமாயிற்று. அதேபோலப் பாரதநாட்டின் விடுதலைக்கும் பெண்மையின் விடுதலை வேண்டும் எனப் பாரதி எண்ணினார்.

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும் எனு மியற்கை
மருமத்தை நம்மாலே யுலகங் கற்கும்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் அடிகள் பாரதியின் நம்பிக்கையை உணர்த்தி நிற்கின்றன. வழிபாட்டுநிலையில் பாரதி பெற்றிருந்த ஓர் அமைதி அவருடைய கவிதைகளின் ஊற்றாக இருந்துள்ளது. பெண்மையின் பேராற்றலை வெளிப்படுத்தும் பாரதி இடைக் காலத்தில் பெண்மை மதிப்பிழந்து போனதையும் பாடியுள்ளார்.

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல
மாதரறிவைக் கெடுத்தார்"

"கண்கள் இரண்டினில் ஒன்றைக் -குத்திக்
காட்சி கெடுத்திடலாமோ?
பெண்களறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடுங் காணீர்."

(முரசு. 9-10)

பெண்களின் அறிவாற்றலை வெளிக்கொணரத் தடையாயிருப்பவர் களையும் பாரதி எண்ணிக் கவிதையிலே இனங்காட்டியுள்ளார். பெண் சமத்துவம் வீட்டு விடுதலைக்கும் நாட்டு விடுதலைக்கும் இன்றியமையா தது. பாரதி பாடிய பெண்மை உலகம் முழுவதும் உணரப்பட வேண்டிய ஓர் உயர்ந்த கருத்தாகும். பாரதிக்கு முன்னர் தோன்றிய தமிழ்க் கவிதை மரபான ஒரு பெண்மையோடு புதுமைப்பெண்ணையும் அறிமுகம் செய்தது. ஆனால், பாரதியோ மரபான பெண்மையோடு புதுமைப் பெண்ணையும் அறிமுகம் செய்தமை சிறப்புடையது. இது பின்வந்த கவிஞர்களுக்கு ஒரு புதிய மரபைத் தொடர வழிவகுத்தது. பாரதிதாசன், தேசியவிநாயகம்பிள்ளை போன்றவர்களுடன் இப்பண்புநிலையை ஒப்பிட்டு நோக்கும் ஆய்வு நிலையையும் தோற்றுவித்தது.

பெண்மையின் முழுமையான தோற்றத்தையும் ஆற்றலின் படிமுறை வளர்ச்சிநிலைகளையும் பாரதியின் கவிதைகள் காட்டுகின்றன. குழந்தை, குமரி, மனைவி, தாய், முதியோள், தெய்வம் எனப் பல்வேறு வடிவங்களில் பெண்மையைப் பாரதி பாடியமையே இதற்குச் சான்றா கும். பெண்மையால் உலகம் அடையும் நன்மையைப் பாரதியின் கவிதைகள் நன்கு விளக்கியுள்ளன. பாரத தேசத்தையே பெண்ணாக நோக்கிய பாரதியின் கவிதைத்தொண்டு காலத்தை வென்று நிற்கும் தன்மையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை நூல்கள்:**

1. மகாகவி பாரதியார் கவிதைகள். தொகுப்பு சென்னை, 1990
2. சுந்தரம், ப. மீ. பாரதியார் வரலாறும் கவிதையும், சென்னை 1954.
3. மகாகவி பாரதி பற்றி சோவியத் அறிஞர்கள் - கட்டுரைத் தொகுப்பு, சோவியத் பிரசுரங்கள், 1982.
4. சரளா இராசகோபாலன், பாரதியின் பாஞ்சாலிசபதம், சென்னை, 2000.
5. பத்மநாதன் ரா. அ. சித்திரபாரதி, சென்னை 1957.
6. பாஞ்சாலிசபதம், பாரதி பிரசுராலயம், 1924.
7. சோமசுந்தரபாரதி, ச. பாரதியார் சரித்திரம், சென்னை, 1928.
8. பாரதி பிறந்தார், கல்கி பாரதி பதிப்பகம், சென்னை 1954.
9. யதுகிரி அம்மாள், பாரதி நினைவுகள், சென்னை, 1954.
10. தூரன். பெ. பாரதி தமிழ், சென்னை, 1954.
11. அருணாசலம், க. பாரதியார் சிந்தனைகள், கொழும்பு, 2003.

"உல வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்
ஓதுபற்பல நூல்வகை கற்கவும்
இலகுசீருடை நூற்றிசை நாடுகள்
யாவுஞ்சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுத லார்நாங்கள் பாரத
தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம்
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீசப்பெண்கள் விரைவில் ஒழிப்பாராம்"
(புதுமைப்பெண்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியின் பெண்கள் விடுதலைக்கும்மி ஒரு நோக்கு.

**பாரதி ஓர் அறிமுகம்.**

உலக மகாகவிகளில் பாரதியாரும் ஒருவராகப் போற்றப்படுகிறார். அவருடைய கவிதைநெறி ஒரு காலத்தின் வெளிப்பாடு. தமிழ்க் கவிதையின் செல்நெறியைப் புதியதொரு போக்கிலே ஆற்றுப்படுத்திய புரட்சிக் கவிஞர் பாரதியார். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞன் எனத் தமிழ் இலக்கிய வரலாற்றில் தனியிடம் பெற்றவர் பாரதி. பாரதியின் வாழ்க்கை குறுகியதாக இருந்தாலும் படைப்புகள் நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்கும் ஆற்றல் கொண்டவை.

1882ஆம் ஆண்டு மார்கழி 11ஆம் நாள் எட்டயபுரத்தில் சின்னச்சாமிக்கும் லட்சுமி அம்மாளுக்கும் செல்லப்பிள்ளையாகப் பிறந்த பாரதியார் 11 வயதிலேயே கவிதை பாடியவர். எட்டயபுர சமஸ்தானப் புலவர்களால் பாரதி 'கலைமகள்' எனப் பட்டம் அளிக்கப்பட்டுப் பாராட்டுப் பெற்றவர். தமிழ்ப் பண்டிதர்களுடன் சிறுவயதிலேயே சொற்போர் புரியும் துணி கொண்டவர். 15 வயதில் 7 வயதான செல்லம்மாவை மணந்து கொண்டவர். தந்தையின் இறப்பால் காசியிலே கல்வியைப் பெற்றவர். சமஸ்கிருதம், ஹிந்தி மொழிகளை அங்கு பயின்றார். பஞ்சகச்சம், வால்விட்ட தலைப்பாகை, மீசை போன்ற அலங்காரங்களை அங்கு பெற்றார். காசி இந்து கலாசாலையில் அவர் பெற்ற கல்வியும் அவருக்குச் சிறப்பானதொரு அணிகலமாயிற்று.

பாரதி சுதேசமித்திரன், சக்கரவர்த்தினி, இந்தியா போன்ற பத்திரிகைகளில் பணியாற்றியவர். அதனால் சமூக சீர்திருத்த வாதியாகவும் அரசியல் தீவிரவாதியாகவும் உருவாக்கம் பெற்றார். தேசிய கீதங்கள் பாடத் தொடங்கினார். அரசியல் எதிரியும் பழுத்த மிதவாதியுமான வி. கிருஷ்ணசாமி அய்யர் பாரதியின் தேசிய கீதங்களைச் 'சுதேச கீதங்கள்' என்ற தலைப்பிலே பிரசுரம் செய்து முதலில் வெளியிட்டு இலவசமாக விநியோகம் செய்தார். 1908ஆம் ஆண்டு பாரதியின் முதல் கவிதைத் தொகுதியாக 'சுதேசகீதங்கள்' என்ற நூல் வெளியிடப்பெற்றது. இந்தியா பத்திரிகை அரசால் தடைசெய்யப்பட, பாரதி கைது செய்யப்படும் நிலையிலிருந்து தப்பிப் புதுச்சேரியில் தஞ்சம் அடைகிறார். அங்கு மகான் அரவிந்தருடன் தொடர்பு ஏற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுச்சேரியில் பாரதியின் முப்பெரும் பாடல்களான கண்ணன்பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலிசபதம் என்பன உருவாக்கம் பெற்றன. 1918இல் சென்னை திரும்பிய பாரதி நிறையக் கட்டுரைகளையும் எழுதுகிறார். சுதேசமித்திரன் உதவியாசிரியர் பணி இதற்கு வாய்ப்பளிக்கிறது. 1921ஆம் ஆண்டு கோயில் யானையால் தாக்குண்டு புரட்டாதி மாதம் 11ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். 39வயது நிறையாத பாரதியின் வாழ்வு முடிந்தாலும் அவர் பாடிய கவிதைகள் காலம் கடந்து நிலைத்துநிற்கும் தன்மையன. 'பாட்டுக்கொருபுலவன் பாரதியடா' எனப் பொதுமக்களால் பாரதி பாராட்டும் பெற்றார்.

**பெண்கள் விடுதலைக்கும்மி**

பாரதி பாடிய பல்வகைப் பாடல்களில் இதுவும் ஒன்றாகும். சமூகம் பற்றிப் பாரதியார் பாட முற்பட்டபோது பெண்மைக்குத் தனியிடம் கொடுத்துள்ளார். புதுமைப்பெண், பெண்மைவாழ்க, பெண்கள் விடுதலைக்கும்மி, பெண்விடுதலை என்னும் பாடல்கள் இதற்குச் சான்றாகும். பாரதியின் காலத்தில் பெண்கள் சமூகத்தில் அடக்கப்பட்ட வர்களாக இருந்தனர். பாரதி பாடிய பெண்கள் 'விடுதலைக் கும்மி' என்ற பாடல் இந்த அடக்குமுறையை நீக்கிப் பெண்கள் விடுதலையை வற்புறுத்துகிறது. பாடலை விரிவாகப் பார்க்கும்போது இதனை நன்குணர முடிகிறது. பாடலின் அமைப்பில் முதலில் காப்புச் செய்யுள் அமைந்துள்ளது.

> **"பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்**
> **பேசிக் களிப்பொடு நாம் பாடக்**
> **கண்களிலே யொளி போல வுயிரில்**
> **கலந்தொளிர் தெய்வநற் காப்பாமே"**

காப்புப் பாடலிலே பாரதியார் தனது பாடலின் இலக்கை வெகு தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். பெண் விடுதலை பெற்றால் எல்லோரும் பெருமகிழ்ச்சியடைவர் என்பது பாரதியின் நம்பிக்கையாக இருந்தது. அந்த நம்பிக்கையை இறையருளால் பெறலாம் என்பதை இச் செய்யுளிலே உணர்த்துகிறார். அதனை ஓர் உவமை மூலமும் நன்கு தெளிவுபடுத்தியுள்ளார். கண்களிலே உள்ள ஒளியைப்போல எமது உயிரிலே கலந்து ஒளிர்கின்ற தெய்வம் என விளக்கியுள்ளார். ஒளியைத் தரும் பண்பினை இரு விடயங்களிலும் பொதுத்தன்மையாக எடுத்துக் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து எட்டுப்பாடல்கள் பெண்களின் நிலைபற்றியும் அவர்கள் முன்னேற்றம் காணவேண்டிய நிலைபற்றியும் பாடியுள்ளார். பெண்கள் இருந்த நிலையை வருமாறு காட்டுகிறார்.

1. பிசாசுகளால் பீடிக்கப்பட்டிருந்த நிலை.
2. ஏட்டைப் பெண்கள் தொடுவது தீமை என்ற நிலை.
3. வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்திருக்கும் நிலை.
4. பெண்ணை மாடு போல நடத்தும் நிலை.
5. நாய் போல நினைத்திருக்கும் நிலை.
6. கற்புத் தேவையென்ற நிலை.
7. வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக்கொடுக்கும் நிலை.

பாரதியார் வாழ்ந்த காலத்துப் பெண்கள் நிலையைக் கண்டு பாரதி மனம் வருந்தியுள்ளமை இப்பாகுபாடு மூலம் நன்கு தெரியவருகின்றது. பெண்களுக்குச் சமூகத்திலே விதிக்கப்பட்டிருந்த தேவையற்ற கட்டுப்பாடுகளைப் பாடல்களிலே பாரதி சுட்டிக் காட்டுகிறார். முக்கியமாகக் கல்விப் பேற்றில் அவர்கள் பெற்ற தடையை முதலில் எடுத்துக்கூறியுள்ளார். படித்த பெண்ணால் தீமையே உண்டாகும் என்ற நிலையை மாற்ற விரும்புகிறார். மேலும் வெளியுலகத்தைப் பாராமல் வீட்டுக்குளே மட்டும் பெண் உலாவ வேண்டும் என்ற மூடத்தனத்தை எதிர்க்கிறார். பெண்ணை மனிதப் பிறவியாக மதியாமல் மாடுபோல நடத்துவதையும் சுட்டிக்காட்டுகிறார். நாய் போலப்பெண்ணை நடத்தும் நிலையையும் கண்டிக்கிறார். பெண்ணுக்கு மட்டுமே கற்பு உரியது என்ற மரபுநிலையையும் பாரதி வெறுக்கின்றார். கற்பு இருவருக்கும் பொதுவான கட்டுப்பாடாகும் என்று வாதாடுகின்றார். எல்லாவற்றுக்கும் மேலாக வற்புறுத்திக் கட்டிக்கொடுக்கும் நிலையை யும் அகற்ற வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய தவறான நிலைகளைப் பேணும் மனிதரைப் 'பிசாசுகள்' என்று பட்டம் சூட்டியுள்ளார். "விந்தை மனிதர்" என்ற ஒரு பட்டத்தையும் அவர் களுக்கு வழங்கியுள்ளார்.

சமூகத்தில் பெண்கள் வாழ்வியல் நலிவுற்றிருந்தமை கண்டு பாரதி தன் கவிதைத் திறத்தாலே அதனை மாற்றியமைக்க முயல்கிறார். பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும் என்ற பாரதியின் விருப்பமும் இப்பாடலின் மூலம் வெளிப்பட்டு நிற்கிறது. இதனால் பெண்ணுக்குத் தீமை செய்யும் வழக்கங்களைத் தள்ளி மிதித்திடுவோம் என்று பாடியுள்ளார். சமூகத்தில் நிலவிய வழக்கங்களில் பொருந்தாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றை உடனடியாகக் களைய வேண்டுமென்பதே பாரதியின் முயற்சியாகும்.

'கும்மியடித்தல்' என்னும் பெண்களின் நடனநிலையை இங்கே சமூகச் சீர்திருத்தம் காண்பதற்குப் பயன்படுத்துகிறார். பலர் சேர்ந்து கை கொட்டி ஒரு குதூகலமான ஆட்டத்தின்போது பெண்கள் தமது நிலைபற்றிச் சிந்திக்க ஒரு வாய்ப்பளிக்கிறார்.

"கும்மியடி தமிழ்நாடு முழுவதும்
குலுங்கிடக் கொட்டிக் கும்மியடி"!

என்ற பாடலின் தொடக்க வரிகள் பெண்வீட்டை மட்டும் சிந்தித்துச் செயல் ஆற்றாமல் நாடு முழுவதையும் பற்றிச் சிந்திக்க வேண்டுமென வழிகாட்டுகிறார். தமிழ் நாட்டிலே பெண்கள் பற்றிய வழக்கங்களையும் நடைமுறைகளையும் அவர்களே நீக்க வேண்டு மென்பதே பாரதியாரின் விருப்பமாகும். பெண்களின் கும்மி நடனத்தை அவர் தெரிந்தெடுத் தமைக்கு இதுவே காரணமாகும். பாரதி பெண்மை யைத் தெய்மவாக மதிக்க வேண்டும் என்ற கோட்பாடுடையவர் பெண்ணுக்கு ஏற்பட்ட இழிநிலையை மாற்ற வேண்டும் என நினைத் தார். அதனால் பாடலின் பிற்பகுதியில் அதற்கான வழிவகைகளைக் கூறிப்போந்துள்ளார். அவற்றை வருமாறு வகுத்துக் கூறியுள்ளார்.

1. பட்டங்கள் ஆள்வது
2. சட்டங்கள் செய்வது
3. வேதம் படைத்தல்
4. நீதி செய்தல்
5. தெய்வச் சாதி படைத்தல்
6. மாதரறங்கள் செய்தல்

பாரதி காட்டிய வழிகள் பெண்ணின் ஆற்றல் கொண்டு செயற்படுத்த முடிந்தவையே. பெண்கள் சமூகமதிப்புப் பெறவேண்டு மாயின் அவர்கள் கல்வியறிவு மேம்பாடு பெறவேண்டும். வெறுமனே பள்ளிப் படிப்புடன் நின்றுவிடாது பட்டப்படிப்பையும் பெண்கள் பெறவேண்டும். அதன்மூலம் பெண்கள் பெறும் பரந்த அறிவு சட்டங்கள் பல செய்யும் ஆற்றலைக் கொண்டுவரும். இயல்பாகவே 'இல்லாள்' என்ற நிலையில் இல்லத்தை ஆளும் ஆற்றல் பெண்ணிடமிருந்தது. அதுமட்டுமல்ல 'மனைவி' என்ற நிலையில் வீட்டை நிர்வகிக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றலும் அவளிடமே இருந்தது. இந்த இரு அநுபவங்கள் சட்டங்களை ஆக்கும் ஆற்றலையும் அவளுக்குக் கொடுக்கும் எனப் பாரதியார் எண்ணுகிறார். கல்வி வாழ்க்கைக்குப் பயன்பட வேண்டுமானால் பெண்கல்வி மேம்பாடு அடையவேண்டும் என்பதே பாரதி கூறும் செய்தியாகும். அறிவு நிலையில் பெண் ஆணுக்கு இளைத்தவள் அல்ல எனப் பாரதி கூறுகிறார்.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி"

பெண் சுதந்தரமாகச் செயற்படவேண்டும். தன்னுடைய முழுமையான ஆற்றலை எல்லோரும் அறியச் செய்யவேண்டும். சுதந்தர வேட்கை பெண்ணுக்கிருக்க வேண்டும். அந்த வேட்கையே அவளைச் சுதந்தரமாகச் செயற்பட வைக்கும் ஆணுக்கும் பெண்ணுக்கும் அறிவில் எந்தவிதமான வேறுபாடும். இல்லையெனப் பாரதி வற்புறுத்துகிறார். வீட்டு நிர்வாகத்தால் பெறும் அநுபவம் ஆணுக்கு மிகக் குறைவாகவே கிடைக்கிறது. பெண்ணுக்கு அந்த நிர்வாக அநுபவம், குடும்பநிலையில் அவள் பெறும் ஒரு குறுகிய அநுபவம் அல்ல. தன்னைப் பற்றி மட்டுமல்லப் பிறர் பற்றியும் சிந்தித்துக் கடமையாற்றும் பெண் பரந்த அநுபவம் ஆணைவிட அறிவிற்கூடிய நிலையை நிச்சயமாகத் தருமென் பதே பாரதியின் முடிவாகும். சாதம் படைக்கும் பெண், வேதம் படைக்கவும் தெய்வீகமான மனிதர்களை உருவாக்கவும் பெண் ஆற்றல் பெற்றவள். அதனால் ஆணைவிடவும் ஆற்றல் பெற்றவளாகிறாள். இதனை நிறைவுப் பாடலில் மிகத் தெளிவாகவே விளக்கியுள்ளார்.

"காதல் ஒருவனைக் கைப்பிடித்தே அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து
மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி"

இல்லற வாழ்க்கையை இனிமையாக நடத்த வல்லவள் பெண்ணேயாகும். ஆண் ஒருவனைத் திருமணம் செய்து அவனுடைய காரியம் யாவினும் கைகொடுத்து நிற்கும் பெண், பெண்கள் செய்யும் அத்தனை அறங்களையும் செய்து குடும்பத்தையும் ஆன்றோர் பழைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் வகுத்த வாழ்வியலையும் பேணி நிற்பாள். இல்லறம் நடத்தும் பெண்ணுக்கு நாடு பற்றிய உணர்வும் வேண்டுமெனப் பாரதியார் விரும்புகிறார். பெண் தன் ஆற்றலுக்கேற்ற செயற்பாட்டைச் செய்யும் சுதந்தரத்தைப் பெறவேண்டும். அதற்கு அவள் சிறந்த கல்வியைப் பெறவேண்டும். தனக்கெனச் சட்டதிட்டங்களை வகுத்துக் கொள்ள வேண்டும். சுதந்தர வேட்கை கொண்டவளாக இருக்கவேண்டும்.

புதுமைக் கவிஞர் பெண்ணின் நிலையைச் சமூகத்திலே உயர்வு பெறச் செய்யவேண்டும் என விரும்புகிறார். பாரதியின் புதுமைப் பெண்ணை உருவாக்குவதற்குச் சாதாரண கிராமத்துப் பெண்ணை ஆற்றல் படைத்தவளாக மாற்ற முயற்சி செய்கிறார். கும்மியடித்து மகிழும் நாட்டுப்புறப் பெண்களிடையே நாட்டு நடப்புகளைப் பற்றிய தெளிவை முதலில் ஏற்படுத்த எண்ணுகிறார். வெறுமனே பொழுது போக்கு நிலையில் கும்மியடிப்பதை விட்டு அவ்வாறு பொழுது போக்கும்போது சிந்திக்கவும் வைக்கிறார். பாரதியார் வாழ்ந்த காலத்தில் அந்நியர் ஆதிக்கம் இந்தியாவில் நிலவியது. அதிலிருந்து நாட்டை மீட்டெடுக்கச் சுதந்தரக் கனவை எல்லோரிடமும் எழுப்பவேண்டும். ஆண்களிடம் மட்டுமல்லப் பெண்ணிடமும் அதைப் பரப்ப எண்ணு கிறார். பெண்களின் இருப்புநிலையிலே புதிய உணர்வைத் தூண்டுவதற்காகக் கும்மியடிக்கும் செயற்பாட்டிலேயே சிந்திக்கவும் தூண்டுகிறார். பாரதியின் மனதில் இருவகையான எண்ணங்கள் இருந்தமையைக் கும்மிப் பாடல்கள் உணர்த்துகின்றன. ஒன்று தான் வாழ்ந்த காலத்தில் பெண்களின் கீழ்நிலை எவ்வாறு இருந்தது என்பதை எடுத்துக் கூறுவது. மற்றது பெண்கள் சமூகத்தில் எத்தகைய நிலையை அடையவேண்டும் என்பதை எடுத்துக் கூறுவது. எனவே இவ்விரு நிலைகளையும் கும்மிப்பாடல்கள் மூலம் உணர்த்துகிறார்.

பாரதியார் பெண் மனவுரத்தைப் பெருக்கும் வகையில் தனது பாடல்களிலே பல தொடர்களை அமைத்துள்ளார். அவற்றை வருமாறு காணலாம்.

"குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி"
"நன்மை கண்டோமென்று கும்மியடி"
"வெட்டி விட் டோமென்று கும்மியடி"
"இளைப்பில்லைக் காணென்று கும்மியடி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்மியடிக்கும் செயற்பாட்டுடன் தம்மைப் பற்றிய விழிப் புணர்வையும் பெண்கள் பெறவேண்டும் எனப் பாரதி விரும்பினார். பெருமையான வாழ்வைப் பெண்கள் பெறுவதற்கு அவர்களே முயற்சி செய்யவேண்டும் என்பதே பாரதி அவர்களுக்குச் சொல்லும் செய்தி யாகும். அடிமைத் தளை யிலிருந்து நாடு விடுதலை பெறுவதற்குப் பெண்கள் பங்களிப்புச் செய்ய முன் வரவேண்டும். இது இன்னொரு செய்தியாகும்.

இவ்வாறு பெண்கள் நாட்டுணர்வுடன் வாழ வேண்டும் என்பதை உணர்த்தக் கும்மிப்பாடலை ஈழத்துக் கவிஞர் பாவலர் துரையப்பா பிள்ளையும் பயன்படுத்தியுள்ளார். அவர் பாரதிக்குக் காலத்தாற் சற்றுமுற்பட்டவர் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். எனினும் பெண்கள் நாட்டுணர்வு பெற்றிருக்க வேண்டும் என்ற உணர்வு சங்கப்புலவர்கள் காலத்திலேயே தோன்றிவிட்டது. அப்பழைய மரபையே பாரதி புதுமைப்படுத்திப் பாடியுள்ளார்.

பாரதி இப்பாடலில் செய்துள்ள இன்னொரு புதுமை "கற்பு" என்னும் கட்டுப்பாட்டை ஆண் பெண் இருவருக்கும் பொதுவாக்க வேண்டும் என்ற சிந்தனையாகும். "கற்பெனப்படுவது சொற்றிறம் பாமை" என்ற ஆன்றோர் கருத்தை நன்கு உள்வாங்கியே பாரதி இத்தகைய சிந்தனையின் வயப்பட்டிருக்க வேண்டும். பெண்ணுக்கும் ஆணுக்குமிடையில் அறிவாற்றல் நிலையில் எதுவித வேறுபாடும் இல்லையென்பதே பாரதியாரின் கருத்தாகும். பெண் ஆணைப்போலக் கல்வியில் மேம்பாடு பெற்றால் மாட்சிமைப்பட்ட வாழ்வியலை அமைத்துக் கொள்வாள் என்பதே பாரதியின் புதிய சிந்தனையாகும். பாரதியார் பாடிய 'பெண்விடுதலை' என்னும் பாடலில் இச்சிந்தனையின் தெளிவு மேலும் புலப்படுகிறது.

"விடுதலைக்கு மகளிரெல்லோரும்
வேட்கை கொண்டனம் வெல்லுவம் என்றே
திட மனத்தின் மதுக்கிண்ண மீது
சேர்ந்து நாம் பிரதிக்கினை செய்வோம்
உடையவள் சக்தி ஆகூண் பெண் ணிரண்டும்
ஒரு நிகர் செய்துரிமை சமைத்தாள்
இடையிலே பட்ட கீழ்நிலை கண்டீர்
இதற்கு நாம் ஒருப்பட்டிருப்போமா"

(கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியின் பாப்பாப்பாட்டு

தமிழ்க் கவிஞர்கள் வரிசையில் பாரதிக்கு ஒரு சிறப்பிடம் உண்டு. பாரதி வாழ்ந்தகாலம் அந்நியராட்சிக் காலம். மக்கள் வாழ்வியலில் ஒரு புதிய பண்பாடும் மொழியும் வந்து இணைந்த காலம். மரபான வாழ்வியலில் இருந்து மக்கள் வழுவி நின்றனர். தமிழ்க் கவிஞன் பாரதிக்கு இந்நிலையைக் கண்டு நெஞ்சம் பொறுக்கவில்லை. அவனுடைய கவிதையுள்ளம் மிக ஆழமாகச் சிந்தித்தது. சமூகத்தைக் கவிதைக்கண் களால் உற்றுநோக்கியபோது அவன் கண்ட காட்சி மிகுந்த வேதனையை ஏற்படுத்தியது. மக்களின் போக்கை மாற்றுவதற்கு என்ன வழியென்று எண்ணிப் பார்த்தான்.

பெரியவர்களுக்கு அறிவுரை கூறுவதைவிடச் சிறுவர்களுக்கு ஏற்ற கருத்துகளைச் சொல்வது நல்லதென்ற முடிவுக்குப் பாரதி வந்தான். இதனைப் பாரதிபாடிய பாப்பாப்பாட்டு நன்கு விளக்கியுள்ளது. பாரதி பாடிய புதிய ஆத்திசூடியும் இக்கருத்தை வலியுறுத்தி நிற்கிறது. முன்னே பாடப்பட்ட ஆத்திசூடியைவிட வித்தியாசமாகப் பாரதியின் ஆத்திசூடி அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேபோன்று பாப்பாப் பாட்டிலும் ஒரு தனித்துவமான அமைப்புக் காணப்படுகிறது.

**பாப்பாப் பாடலின் அமைப்பு**

இப்பாடலில் 16 பாடல்கள் உள்ளன. பாடலின் உட்பொருள் சிறுவர் மனத்தைக் கவரும் வகையில் அமைந்துள்ளது. முதல் 5 பாடல்களும் வருமாறு உட்பொருள் கொண்டுள்ளன.

1. சிறுவர் விளையாட்டு - பாடல் 1
2. பறவைகளுடான தொடர்புநிலை - பாடல் 2-3
3. விலங்குகளுடான தொடர்புநிலை - பாடல் 4-5

**1. சிறுவர் விளையாட்டு**

பாரதியின் உள்ளம் சிறுவர் மனநிலையை நன்குணர்ந்தது அதனால் தொடக்கப்பாடல் விளையாட்டுப் பற்றிய பாடலாக உள்ளது.

"ஓடிவிளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே - பாப்பா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் சோம்பியிருப்பது அவர்கள் உடல் நலத்தைப் பெரிதும் பாதிக்கும். எனவே அவர்கள் ஓய்வில்லாமல் ஓடி விளையாட வேண்டும் எனப் பாரதி கவிதையில் பாடியுள்ளான். அவ்வாறு ஓடி விளையாடும் போது ஒரு குழந்தையையும் புறந்தள்ளக்கூடாது. குழந்தையின் உள்ளம் தோழமையால் மகிழ்வடையும். தனியாக ஓடி விளையாடுவதைவிடக் கூட்டாகச் சென்று விளையாட வேண்டும். கூட்டுறவுநிலை உள்ளத்தில் ஆழமாகப் பதியவேண்டும். எதிர்காலச் சமூகத்தில், ஒற்றுமை பற்றிய சிந்தனையைப் பாரதி சிறுபராயத்திலேயே சிறுவர் பெற்றுவிட வேண்டும் என எண்ணினான். இந்த ஒரு பாடலில் 'பாப்பா' என்ற சொல் நான்கு தடவை பயன்படுத்தப்பட்டுள்ளது. பாப்பா, குழந்தை என்ற இரு சொற்களும் இணைந்து பாடலில் வந்திருப்பது இன்னொரு செய்தி யையும் சொல்கிறது. பாப்பா என்பது கூடி ஓடி விளையாடும் பருவத்தையும் குழந்தையின் சற்று வயது குறைந்த பருவத்தையும் உணர்த்தி நிற்கிறது. 'வையாதே' என்ற சொல் இதனை நுட்பமாக உணர்த்துகிறது. தங்கள் வயதோடு ஒத்த குழந்தைகளோடு கூடி விளை யாடும்போது வயது குறைந்த ஒரு குழந்தையும் விளையாட்டில் பங்கு பெறவரக்கூடும். அவ்வாறு அந்தக் குழந்தை வரும்போது அந்தக் குழந்தையை வைது மனதைப் புண்படுத்தக்கூடாது. இதுவே பாரதி குழந்தைக்கு முதலில் கூறும் அறிவுரை. எல்லாக் குழந்தைகளையும் இணைத்து விளையாடவேண்டும் என்ற எண்ணத்தை முளையிலேயே பதியவைக்கும் முயற்சியாக இக்கவிதை அமைந்துள்ளது.

**2. பறவைகளுடான தொடர்புநிலை**

அடுத்த இரு பாடல்களும் பாப்பாவோடு தொடர்பு கொள்ளக் கூடிய பறவைகளைச் சுட்டிக் காட்டுகிறது.

"சின்னஞ் சிறுகுருவி போல - நீ
திரிந்து பறந்து வா பாப்பா
வண்ணப் பறவைகளைக் கண்டு - நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா"

இப்பாடலில் சிறுகுருவியின் செயற்பாட்டை எடுத்துக் காட்டும் பாரதி குழந்தையின் கவனம் பறவைகள் மீது செல்லும் இயற்கையான குணத்தைப் பாடலில் பதிவு செய்துள்ளான். சிட்டுக் குருவி பார்ப்பதற்குச் சிறிய உருவந்தான். ஆனால் மிகவும் சுறுசுறுப் பானது. வேகமாகப் பறந்து திரியும். குழந்தையும் சிட்டுக்குருவியைப் போல ஓடியாடித்திரிந்து விளையாடவேண்டும். இதுவே பாரதியின் ஆசை. இன்னும் அந்தக் குழந்தைகள் வண்ணப் பறவைகளைப் பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழவேண்டும். பறவைகளைப் பார்த்து ரசிக்கும் மேலைத்தேயத்தவரது செயற்பாட்டைப் பாரதி கண்டிருக்கவேண்டும். ஆனால் குழந்தைகளது மனதிலே பறவைகளைப் பார்க்கும்போது இயற்கையின் வண்ணக் கோலங்களையும் உள்வாங்கும் இயல்பு ஏற்படவேண்டும். விளையாடும் போது சுறுசுறுப்பாக இருக்கும் குழந்தை அழகுணர்வோடும் வளரவேண்டும். பாரதியின் பாப்பாப்பாட்டு மறைமுகமாகப் பெற்றோரது குழந்தை வளர்ப்புப் பற்றியும் பதிவுசெய்துள்ளது.

வீட்டு வாழ்வியலில் தொடர்புடைய இரண்டு பறவைகளை அடுத்த பாடல் காட்டி நிற்கிறது.

"கொத்தித் திரியுமந்தக்கோழி - அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எத்தித் திருடு மந்தக் காக்காய் - அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா"

கோழி வீட்டில் வளர்க்கப்படும் பறவை. கூரைமேல் படுத்திருந்து வைகறை வரவைக் கூவியுணர்த்தும். உணவைக் கொத்தியுண்ணும் அதன் குணத்தை வெறுக்காமல் கூட்டி விளையாட வேண்டும். கோழியில் பேடு, சேவல் என்ற இரண்டையும் குழந்தை இனங்கண்டு கொள்ளவேண்டும். பேடு முட்டையிடும். முட்டை குழந்தையின் சத்துணவாகும். ஆனால் சேவல் காலத்தை உணர்த்தும் கடிகாரமாகத் தொழிற்படும் குணமுடையது. ஆனால் காக்கை வேறுபட்ட குணமுடையது. அது எத்தித் திருடும் குணமுடையது. காகம் கரையும்போது பொழுது விடிந்துவிட்டதை உணரமுடியும். எனவே அதனுடைய திருட்டுக் குணத்திற்காக அதன்மீது இரக்கப்பட வேண்டும். தீமை செய்யும் அந்தப் பறவைக்கு இரக்கம் காட்டும் பயிற்சி குழந்தை வளர்ந்து பெரியவனாகும்போது நிலைபெற்றுவிடும் என்பதே பாரதி நுட்பமாகச் சொல்லும் செய்தியாகும்.

**3. விலங்குகளூடான தொடர்புநிலை**

அடுத்து மனித வாழ்வியலில் விலங்குகளூடான தொடர்பை இரு பாடல்கள் காட்டி நிற்கின்றன.

"பாலைப் பொழிந்து தரும் பாப்பா - அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்துவரும் நாய்தான் - அது
மனிதருக்குத் தோழனடி பாப்பா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுவும் நாயும் வீட்டு மிருகங்கள். மனிதர்களோடு நெருக்கமான உறவுடையவை. பசு பாலைப் பொழிந்துதரும். மிகவும் சாதுவானது. அதனால் குழந்தைக்கு நன்மை உண்டு. அதேபோல வீட்டைக் காவல் செய்யும் நாய் வீட்டவர்களைக் கண்டால் உடனடியாக வாலைக் குழைத்துக் கொண்டுவரும். மனிதருக்குத் தோழனாகவும் இருக்கிறது. இப்பாடலில் குழந்தைக்கு விளையாட்டுத் தோழர்களைவிட உற்ற நண்பனாக நாயும் இருக்கிறதென்பது உணர்த்தப்பட்டுள்ளது. வீட்டு மிருகங்களையும் காட்டு விலங்குகளையும் வேறுபடுத்திக் காட்டும் கற்பித்தல் இப்பாடலில் பொதியப்பட்டுள்ளது. இயற்கை நிலையில் விலங்குகள் வாழுமிடம் வேறுபட்டிருப்பதையும் பாரதியின் இப்பாடல் பதிவுசெய்துள்ளது. பால் ஒரு நிறை உணவு. குழந்தைகள் கட்டாயம் சாப்பிட வேண்டியது. எனவே வீட்டில் பசுவை வளர்ப்பது இன்றியமை யாதது. அடுத்து வாழ்வியலோடு தொடர்பு கொண்டுள்ள குதிரை, மாடு, ஆடு என்பன பற்றிய கருத்துப் பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"வண்டி இழுக்கும் நல்ல குதிரை - நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா"

குதிரை வண்டியிலே மனிதரை இருக்கவைத்து இழுத்துச் செல்லும். அதேபோல மாடு நெல்வயலிலே உழுது மனிதருக்கு உணவு கிடைக்க உதவுகிறது. ஆனால் ஆடுமட்டும் மனிதரை அண்டிப் பிழைக்க வேண்டியுள்ளது. இந்த மூன்று விலங்குகளையும் நாம் ஆதரித்துக் காக்க வேண்டும். குழந்தைப் பருவத்திலிருந்து வளர்ந்து மனிதனாகியவுடன் ஒரு தொழில் தேட்டம் தேவை. அதற்கு மாட்டின் உதவி தேவை. ஆனால் ஆடோ நம்மை அண்டிப் பிழைக்கும் ஒரு விலங்கு. எனவே நாம் அதை ஆதரிக்கவேண்டும். எமது போக்குவரத்துக்கு உதவும் குதிரை எனப் பாரதி பாடும்போது அக்காலத்தில் பயன்பாட்டில் இருந்த குதிரை வண்டியின் நிலையையும் பதிவுசெய்துள்ளான். குழந்தையின் வளர்ச்சி நிலையில் புறஉலகத் தொடர்பாடல் தொடங்கும்போது போக்கு வரத்துச் சாதனமும் இன்றியமையாதது. குதிரை என்னும் விலங்கு முற்காலங்களில் படையரவத்திற்கும் பயன்பட்டது. ஆனால் பாரதியின் காலத்திலே குதிரை வண்டிதான் பயணம் செய்வதற்குப் பெரிதும் பயன்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாப்பாப் பாட்டின் அடுத்த 5 பாடல்களும் சிறுவர் வாழ்வியலை நெறிப்படுத்தும் பாடல்களாக அமைந்துள்ளன. ஒரு நாளை எவ்வாறு பயன்படுத்தவேண்டும் என்பதைப் பின்வரும் பாடல் எடுத்துரைக்கிறது.

"காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்லபாட்டு
மாலை முழுவதும் விளையாட்டு - என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா"

ஒரு நாளின் இரு பகுதிகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. காலை, மாலை என்ற நாளின் பகல்வேளைகளில் காலையில் எழுந்தவுடனேயே படிக்கவேண்டும். சிறுவர் மனதில் இச்செயற்பாடு ஆழமாகப் பதியவேண்டும். இரவில் நன்றாகத் தூங்கிக் காலையில் எழுந்தவுடன் மனமும் உடலும் சுறுசுறுப்பாக இயங்கும். எனவே அப்போது பாடங்களைப் படித்தால் மனப்பதிவு உறுதியாய் இருக்கும். படிப்பு முடிந்த பின்னர் கனிவான பாடல்களைப் பாடவேண்டும். பின்னர் மாலை முழுவதும் ஓடியாடி விளையாடவேண்டும். பாப்பாப் பாட்டின் தொடக்கத்திலே ஓடி விளையாட வேண்டும் என்று பாடிய பாரதி எப்போது விளையாடவேண்டும் என்று காலத்தையும் வரையறை செய்திருப்பது சிறப்பாக உள்ளது.

மேலும் நான்கு பாடல்களில் சிறுவரை வழிநடத்தப் பாரதி சில அறிவுரைகளைத் தந்துள்ளான். அவை வருமாறு வகுக்கப்பட்டுள்ளன.

1. பொய் சொல்லக்கூடாது.
2. புறஞ் சொல்லக்கூடாது.
3. தெய்வம் நமக்குத்துணையாகும்.
4. பாதகம் செய்பவரைக் கண்டு பயங்கொள்ளக்கூடாது.
5. அத்தகையவர்களைக் கண்டால் மோதி மிதிக்கவேண்டும். அவர்கள் முகத்தில் காறி உமிழவேண்டும்.
6. துன்பம் வரும்போது சோர்ந்துவிடலாகாது.
7. சோம்பல் மிகக் கெடுதியானது.
8. தாய் சொன்ன சொல்லைத் தட்டக்கூடாது.
9. தேம்பியழுகின்ற குழந்தை நொண்டிக் குழந்தையாகும்.
10. திடங்கொண்டு எல்லாவற்றுக்கும் போராட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

இவ்வறிவுரைகளைப் பாரதி ஒரு தாயின் வளர்ப்புநிலைக்கு உதவியாக வகுத்துக் கூறியுள்ளான். மூன்று வயதுவரை குழந்தை வளர்ப்புக்கு முழுமையாகப் பங்களிப்புச் செய்பவள் தாயே. புறநானூற் றுப் பாடல் ஒன்று முன்னரேயே 'ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே' என இக்கருத்தைப் பதிவுசெய்துள்ளது. சிறுவர் மனதில் தாய் பற்றிய நல்லெண்ணமும் தெய்வம் பற்றிய நம்பிக்கை யும் இருக்கவேண்டும். குழந்தையின் வளர்ச்சி நிலையிலே இணைக்க வேண்டிய குணவியல்பு கள் இப்பாடல்களிலே கூறப்பட்டுள்ளன. துன்பம் வரும்போது அத்துன்பத்திலிருந்து விடுபடும் வழியையும் பாரதி காட்டியுள்ளான். தெய்வம் எம்மீது மிகுந்த அன்பு கொண்டது. தெய்வவழிபாடு எல்லாத்துன்பத்தையும் போக்கிவிடும். சோம்பல், சோர்வு என்னும் இரண்டும் சிறுபிராயத்தில் பேணக்கூடாத குணஇயல்புகள். குழந்தை யுள்ளத்தை வீரமுள்ளதாக்கப் பாடல் வருமாறு அமைக்கப்பட்டுள்ளது.

"சோம்பல் மிகக் கெடுதி பாப்பா - தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா
தேம்பியழுங் குழந்தை நொண்டி - நீ
திடங்கொண்டு போராடு பாப்பா"

இப்பாடலில் குழந்தை மனத்திலே போராட்ட உணர்வை ஏற்படுத்துவது தவறு எனக் கருதும் நிலையும் உண்டு. ஆனால் சிறுவயதிலேயே வீரமாக வளரவேண்டும் என்பதே பாரதியின் எண்ண மாக இருந்துள்ளது. பாரதி வாழ்ந்த காலத்திய நாட்டு நடப்புகள் தான் இதற்குக் காரணம். அந்நியனிடம் அடிமைப் பட்டுக்கிடந்த பாரத நாட்டை மீட்க வீரர் பல்லாயிரம் தேவை. எனவே சிறுபராயத்திலேயே இவ்வுணர்வை ஊட்டிவிட வேண்டும். பாரதியின் திட்டம் இதுவே. தனக்கு வேண்டியதைப் பெறுவதற்காகத் தேம்பியழும் குழந்தை 'நொண்டி' எனக் குறிப்பிடுகிறான். கால் ஊனமுற்று நடக்க முடியாமல் இருப்பவனைப்போல குழந்தை இருக்கக்கூடாது. எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கவேண்டும். திடங்கொண்டு வேண்டியவற்றைப்பெறப் போராடவேண்டிய தேவை எல்லோருக்கும் உண்டு. எனவே அதைச் சிறுவயதிலேயே வளர்த்துக் கொள்ளவேண்டும் என்பதே பாரதி கூறும் செய்தியாகும்.

**நாடு, மொழி, மக்கள் நிலை**

அடுத்துவரும் ஆறுபாடல்களில் நாடு, மொழி, மக்கள்நிலை என்பனபற்றி கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. நாடு பற்றிய பாடல் வருமாறு அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தமிழ்த்திரு நாடுதனைப் பெற்ற - எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா
அமிழ்தில் இனியதடி பாப்பா - நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா!

பாரதி இங்கே நாட்டைத் 'தமிழ்த்திருநாடு' எனச் சிறப்பித்துள்ளான். நாம் வாழும் நாடு எமது பெற்ற தாயைப்போன்றது. நாம் தாயின் கருவறையில் எவ்வாறு மகிழ்வாக இருந்தோமோ அதேபோல் நம் நாட்டிலும் மகிழ்வாக வாழலாம். தாயின் கருவறையில் பத்து மாதம் மட்டுமே வாழலாம். ஆனால் நாட்டில் இறக்கும்வரை வாழலாம். அதனால் நாடும் எமது தாய்போலத் தாங்கிநிற்கும். சொந்த நாட்டில் வாழும் வாழ்வு மிகவும் மகிழ்ச்சிதரும். இன்று புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் அனைவரும் இதனை நன்கு உணர்ந்துள்ளனர். தாயின் மடியில் படுத்துறங்குவது போலச் சொந்தநாட்டில் வந்து படுத்துறங்க வேண்டும் என்ற ஆவல் எல்லோரிடமும் உண்டு. உயிர்நீட்டம் தரும் அமிழ்தைவிட இனியது இது. நம்முடைய ஆன்றோர்கள் வாழ்ந்த தேசத்தில் நாமும் வாழ்கிறோம் என்பதே எமக்குப் பெருமை தருவது. எல்லாக் குழந்தைகளும் இதனை நன்குணர வேண்டும். நாட்டைப் பேணும் கடமையை ஏற்றுப் பணிசெய்ய வேண்டும். இப்பாடலில் நாடு, தேசம் என இரண்டு சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நாடு என்பது தமிழ்ச் சொல்லாகும். தேசம் என்பது வடசொல்லாகும். பாரதி காலத்தில் தமிழும் வடமொழியும் மொழிப் பயன்பாட்டில் சிறப்புப் பெற்றிருந்தன. ஆனால் பாரதி அடுத்த பாடலில் தமிழ்மொழியைத் தனிச்சிறப் புடையதெனக் காட்டியுள்ளான்.

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - அதைத்
தொழுது படித்திடடி பாப்பா
செல்வம் நிறைந்த ஹிந்துஸ்தானம் - அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா"

பாரதி தமிழ்மொழியின் உயர்வைச் சிறுவர் உணரவேண்டும் என எண்ணி இப்பாடலைப் பாடியுள்ளான். தமிழ்மொழியைத் தொழுது படிக்கும்படி கூறியுள்ளான். தெய்வத்தைத் தொழுதால் எல்லாவற்றையும் பெறலாம். அதுபோல தமிழ்மொழியையும் தொழுது படித்தால் எல்லாச் சிறப்பையும் பெறலாம். புகழவேண்டிய ஹிந்துஸ்தானையும் சிறப்பாகப் பாரதி குறிப்பிட்டிருப்பது இங்கு கவனத்திற்குரியது. மேலும் தமிழ்நாட்டின் எல்லையும் ஒருபாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வடக்கில் இமயமலை பாப்பா - தெற்கில்
வாழும் குமரி முனை பாப்பா
கிழக்கும் பெரிய கடல் கண்டாய் - இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா"

நாட்டின் பரந்துபட்ட நிலையைச் சிறுவயதிலேயே அறிந்து கொள்ளவேண்டும். உலக வரைபடத்தில் தமிழ்நாட்டைப் பார்க்கும் போது வடக்கே இமயமலையும் தெற்கே குமரிமுனையும் உள்ளன. கிழக்கிலும் மேற்கிலும் கடல் எல்லையாகவுள்ளது. அதனால் படத்தைச் சிறுவர் மனத்திரையில் பதிவுசெய்ய இப்பாடலே போதுமானது.

அடுத்து நாட்டுமக்கள் பற்றிப் பாரதி கூறியுள்ளான். இந்த நாடு வேதம் உடையது. நல்ல வீரர்கள் பிறந்தநாடு. முன்னைய நாட்டு வரலாற்றைப் பாடலிலே குறிப்பாகச் சுட்டித் தற்போதும் நாட்டு மக்கள் வீரர்களாக இருக்கவேண்டும் என்பதே பாரதியின் விருப்பமாகும். ஹிந்துஸ்தானத்தின் வளர்ச்சி நிலையைச் சுட்டி அதை வணங்கவேண்டு மெனப் பாடியுள்ளான். பாரதி மக்களியல்பு பற்றிப் பாடும்போது நாட்டில் நிலவிய ஏற்றத்தாழ்வைச் சிறுவர்களுக்கு உணர்த்தி அதை நீக்கவும் வழிகாட்டியுள்ளான்.

"சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்த மதி கல்வி - அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்"

பாரதி வாழ்ந்த காலத்தில் இந்தியாவிலே மக்களிடையே சாதிப்பாகுபாடு பெரிதும் பேணப்பட்டு வந்தது. பாரதி உயர்ந்த சாதியான பிராமணனாக இருந்தபோதும் ஏற்றத்தாழ்வை நீக்கவேண்டு மென்ற கருத்துடையவனாக இருந்தான். சாதி பற்றிய தெளிவைச் சிறுவர் பெறவேண்டும் என்பதை நோக்காகக் கொண்டு பாடல் பாடியுள்ளான். மனிதர்களிடையே உயர்வு தாழ்வு பார்ப்பது பாவமாகும். பிறப்பினால் எல்லோரும் மனிதப்பிறவிகளே. மனிதர்களிடையே வேறுபாடு பார்ப்பதாயின் அவர்களுடைய அறிவு நிலையைக் கொண்டே அதை அளவிடவேண்டும். நீதி, உயர்ந்தமதி, கல்வி, அன்பு என்பவற்றை உடையவர்களே மேன்மக்கள் என்பதே பாரதியின் வரையறையாகும். யார் எங்கே பிறந்தாலும் இப்பண்புகளை உடையவராக இருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலோர் ஆவார். சிறுவர் உள்ளத்தில் சாதிப்பாகுபாட்டை நீக்கப் பாரதி காட்டிய புதிய வழிமுறை இதுவாகும். வள்ளுவரும் எல்லோரும் பிறப்பினால் ஒத்தவரே என்றார் ஔவை. இட்டார் பெரியோர் எனவும் இடாதார் இழிகுலத்தோர் எனவும் சாதியை இரண்டாக வரையறை செய்துள்ளார். ஆனால் பாரதியோ நல்லியல்புகளை உடைய எல்லோரும் மேலோர் எனக்கூறி எல்லோரையும் உயர்ந்தவராக்க வழிகாட்டியுள் ளார்.

**வாழும் முறைமை**

பாப்பாப் பாட்டின் இறுதிப் பாடல் வாழும் முறைமையை வலியுறுத்தியுள்ளது.

"உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும் - இது
வாழும் முறைமையடி பாப்பா!"

மானிட வாழ்வியல் சிறப்பாக அமைய ஒரு வழிநடத்தல் தேவை. பாரதி அதற்கு வழிகாட்டியுள்ளான். 3 விடயங்களை அதற்குக் காட்டுகிறான்.

1. உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல்.
2. தெய்வம் உண்மையென்ற அறிவு வேண்டும்.
3. வயிரமுடைய நெஞ்சு வேண்டும்.

பாப்பாப் பாட்டின் தொடக்கம் முதல் முடிவு வரை உயிர் களிடம் அன்பு செலுத்தும் பண்பு பேசப்பட்டுள்ளது. பாப்பாப் பாட்டின் அடிநாதமாக இது விளங்குகிறது. குருவி, பறவை, பசு, நாய், குதிரை, காக்கா, மாடு, ஆடு என்பவற்றுடன் அன்பாக வாழும் வாழ்க்கை ஒரு வாழும் முறைமையாகும். அன்பு என்பது மனிதரிடம் செலுத்தும் ஓர் உணர்வுமட்டும் அல்ல. எல்லா உயிர்களிடத்தும் செலுத்தப்பட வேண்டும். இந்தவகையில் 'உயிர்களிடத்தில் அன்பு வேணும்' என்ற தொடர் முன்னர் கூறியவற்றை எல்லாம் தொகுத்துக் கூறுவது போல அமைக்கப்பட்டுள்ளது.

அடுத்து மனித வாழ்வியல் சிறப்புறத் தெய்வபக்தி தேவை. எம்மிடையே தெய்வம் உண்டு என்ற மனஉறுதியை ஏற்படுத்திக் கொண்டால் செய்யும் காரியம்யாவும் சிறப்பாக நடக்கும். தெய்வம் என்று ஒன்று இல்லை. மனிதனாலே எல்லாவற்றையும் செய்யமுடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நினைப்பே இன்று எல்லோரிடமும் தோன்றி யுள்ளது. குறிப்பாகச் சிறுவரது உள்ளத்திலே இத்தகைய பிழையான கருத்து வேரூன்றிவிடக் கூடாது என்பதே பாரதியின் நோக்காக இருந்தது. வாழ்க்கையில் எதிர்கொள்ளும் துன்பங்களை வெல்லத் தெய்வ நம்பிக்கையே துணை செய்யும். இதற்கென வயிரமுடைய நெஞ்சம் வேண்டும். எதையும் தாங்கி ஏற்றவற்றைச் செய்துமுடிக்கலாம். நெஞ்சில் உரம் தேவை. சிறுவர் கோழைகளாகிவிடக்கூடாது. மனித வாழ்க்கையைச் செம்மையாக நடத்த நெஞ்சில் உரம் தேவை. பாரதி அதனை 'வயிரமுடைய நெஞ்சு' எனச் சிறப்பித்துக் கூறியுள்ளான்.

பாப்பாப் பாட்டில் பாரதி பயன்படுத்தியுள்ள சொற்கள் சிறப்பாகப் பெண்குழந்தையையே அறிவுறுத்தியதைச் சுட்டி நிற்கின்றன. தோழனடி, வேணுமடி, கும்பிடடி, இனியதடி, தேசமடி, படித்திடடி, புகழ்ந்திடடி, முறைமையடி என்னும் சொற்கள் இதற்குச் சான்றாக உள்ளன. கும்பிடடி என்ற சொல் இருதடவை பயன்படுத்தப்பட்டுள்ளது. பாப்பா என்ற சொல் 36 தடவை பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சொற்பயன்பாட்டை அட்டவணைப்படுத்திப் பாடல் வருமாறு அமைவது.

| | | | |
|---|---|---|---|
| பாடல் - 1 | 04 தடவை | பாடல் - 9 | 02 தடவை |
| பாடல் - 2 | 02 தடவை | பாடல் - 10 | 03 தடவை |
| பாடல் - 3 | 02 தடவை | பாடல் - 11 | 03 தடவை |
| பாடல் - 4 | 03 தடவை | பாடல் - 12 | 02 தடவை |
| பாடல் - 5 | 01 தடவை | பாடல் - 13 | 02 தடவை |
| பாடல் - 6 | 01 தடவை | பாடல் - 14 | 01 தடவை |
| பாடல் - 7 | 04 தடவை | பாடல் - 15 | 01 தடவை |
| பாடல் - 8 | 03 தடவை | பாடல் - 16 | 01 தடவை |

சொல்லவந்த கருத்தை அழுத்தமாகச் சொல்லவேண்டிய இடங்களில் பாப்பா என்ற சொல் பாடலிலே ஒவ்வொரு அடியிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. குழந்தையின் விளிப்பெயரான 'பாப்பா' என்றசொல் தற்போது வழக்கிழந்து வருகிறது. பாப்பாப் பாட்டு பாரதியின் தாய்மைக் குணத்தையும் குழந்தைகள் மீதுகொண்ட அக்கறையையும் விளக்கி நிற்கிறது. இப்பாட்டு சிறுவருக்குரிய பாடல் அன்று என்ற கருத்தும் நிலவுகிறது. ஆனால் பாரதி குழந்தை வளர்ப்பில் செலுத்தவேண்டிய கவனத்தை எல்லோரும் மனங்கொள்ள வேண்டு மென எண்ணினான். இன்றைய குழந்தையே நாளைய சமூக அங்கத்து



பொது நூலகம் யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனாகிறது. எனவே குழந்தையின் வளர்ப்பில் எல்லோரும் போதிய கவனம் செலுத்தவேண்டும். குழந்தையைச் சரிவர வழிநடத்த வேண்டும். காலத்தின் தேவைமட்டுமன்றி மனிதவிழுமியத்தைப் பேணவும் இத்தகைய வளர்ப்புமுறை இன்றியமையாதது.

பாரதி கண்ணன் பாட்டில் பாடியுள்ள 'கண்ணம்மா என் குழந்தை'; கண்ணன் என் தீராத விளையாட்டுப் பிள்ளை என்ற இரு பாடல்களும் வேறுபட்ட உணர்வுடையவை. கண்ணன் என்ற தெய்வத்தைக் குழந்தையாகப் பாவனை செய்து பாடல்களானவை. ப்பாப்பாப் பாடல் மனிதக் குழந்தைக்குப் பாடியிருப்பது. இந்த வேறுபாட்டைப் பாடல்களிலும் காணமுடிகிறது. பெண்குழந்தைப் பண்புகளையும் ஆண்குழந்தைப் பண்புகளையும் கண்ணன் பாட்டுத் தொகுதியில் உள்ள பாடல்கள் காட்டுகின்றன. பாப்பாப் பாடலில் ஒரே பாடலில் இரு குழந்தமைப் பண்புகளும் பேசப்பட்டுள்ளன.

பாட்டினால் இந்த வையத்தைப் பாலிக்க எண்ணிய பாரதியின் கவனம் சிறுவர் மீதும் இருந்துள்ளது. அந்தவகையில் பாப்பாப் பாட்டு பாரதிபாடிய சிறந்தபாட்டு. சிறுவர் உலகைப் பற்றிய ஓர் உணர்வினை எழுப்பும் இனியபாட்டு. குழந்தை எல்லோராலும் பொறுப்புடன் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய ஒரு கொடைப் பொருளாகும். இன்றைய காலகட்டத்தில் பெற்ற குழந்தையையே பற்றைக்குள் வீசிவிட்டுச் செல்லும் புதிய நாகரிகம் தலையெடுத்துள்ளது. பாரதி குழந்தையை வீரனாக்கி நாட்டை மீட்டுத்தரும் சமூக அங்கத்தவனாகப் பார்க்கிறான். நாட்டுப்பற்றை, வீரஉணர்வை, மனிதவிழுமியப் பண்பு களையெல்லாம் மீண்டும் கட்டியெழுப்பும் பொறுப்பை வருங்காலச் சந்ததியிடம் கையளிக்கப் பாரதி பாடினான்.

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய புதுமைக் கவிஞன் பாரதி செய்த புதுமை இது. தலாட்டுப் பாடல்களைத் தாண்டி ஒரு மனித உருவாக்கத்தைக் குழந்தைப் பருவத்திலிருந்து செய்யவேண்டும் என அவன் சொன்னசெய்தி இன்றைய காலகட்டத்திற்கும் பொருத்தமாக உள்ளது. சின்னக் குழந்தையை அன்போடு அரவணைத்து அன்போடு பாட்டுப்பாடி மனிதனாக்க முயலும் பாரதியின் தாய்மைப் பணி உலகம் இன்று பெரிதும் வேண்டிநிற்கும் பணியாகும். எதிர்காலத்துச் சிறந்த மனித உருவாக்கத்திற்கும் இதுவே துணைசெய்யும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பு - சங்கச் சான்றோர் முதல் பாரதி வரை

காலத்தை வென்ற கவிஞர்கள் வரிசையிற் பாரதியும் ஒருவன். இருபதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கியத்தின் நெடுவழிப்பாதையில் ஒரு மைல் கல்லாக மதிக்கப்படுவதற்கும் முக்கிய காரணமானவன் பாரதியேயாகும். மேலைத்தேயத்துப் பண்பாட்டுப் பரம்பலால் புதுமையையே வேண்டிநின்ற தமிழ்மக்கள்; பாரதியின் இலக்கியப் புதுமையையும் மறுக்காது ஏற்றுக்கொண்டனர். பாரதி தான்வாழ்ந்த காலத்தைவிட இறந்த பின்னர்தான் மக்களால் உணரப்பட்டான். அவன் பிறந்து ஒரு நூற்றாண்டு கழிந்த பின்னரும் புகழோடு மக்கள் மனதிலே வாழ்கின்றான். அவனது நினைவாக எழுந்துள்ள மணிமண்டபமும், வெளியிடப்பட்ட நினைவு முத்திரையும், நூல்களும், மொழிபெயர்ப்புக் களும் எதிர்காலத்தும் அவன் புகழ் மங்காது நிலைபெற உதவும் சான்றுகளாகும்.

பாரதியின் சுயசிந்தனைகளை அவன் வெளியிட்ட கருத்துக் களைக்கொண்டே இனங்காணும் முயற்சி, பாரதிபற்றிய ஆழமான ஆய்வாக வளர்ந்துவருகின்றது. தனிமனித சிந்தனைகளாக அவன் கருத்துக்கள் கணிக்கப்படாமல்; மனித சமூகத்தின் ஒருமித்த சிந்தனையாக மதிக்கப்படுகின்றது. தனிமனிதனால் மனித சமூகத்தின் சிந்தனைகளை வெளிக்கொணர முடியும் என்ற உண்மையைத் தமிழ் மக்களும் நன்கு அறியவைத்தவன் பாரதி. உலகமொழிகளிலே கூறப் படும் கருத்துக்கள் மொழியின் அந்தஸ்தினாலும், செல்வாக்கினாலும் மதிப்புப் பெறுவதுண்டு. சிறப்பாக ஆங்கிலமொழி இத்தகையதொரு செல்வாக்கினைப் பெற்ற மொழியெனலாம். வர்த்தகம் செய்வதற்காகச் சென்ற நாடுகளிலே தமது அரசியல் ஆதிக்கத்தையும் நிலைநாட்டிய வர்கள் ஆங்கிலேயர்கள். பாரதி வாழ்ந்த காலம் இந்திய நாட்டில் ஆங்கிலேயர் ஆதிக்கம் செய்த காலம்; ஆங்கிலமொழியும் இந்தியாவிற் செல்வாக்குப் பெற்றிருந்தவேளை; நவீன கருத்துப் பரவி மக்களும் அவற்றால் மனம்மயங்கி வாழ்ந்த நேரம். தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட பாரதி இக்காலகட்டத்தில் தமிழ்மொழியின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்தான். அந்நியமொழியினை ஊடகமாக்கி விஷம்போலத் தமிழ்ச் சமூகத்திலே வேகமாகப் பரவிவந்த மேலைத்தேயப் பண்பாட் டைத் தடுக்க எண்ணினான். பாரிய பண்பாட்டுப் பரம்பலைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியொருவனாகத் தடுக்கவுந் துணிந்தான். தமிழ்மொழியையே தனக்கொரு கருவியாக்கினான்.

தமிழ்மொழியின் சிறப்பைப் பரப்பப் புதியவழியைத் தேடினான்.

"பொய்க்கும்கலியை நான் கொன்று பூலோகத்தார் கண்முன்னே
மெய்க்கும் கிருத யுகத்தினையே கொணர்வேன் தெய்வவிதியிஃதே"

என்ற பாரதியின் வஞ்சினமே பண்பாட்டைக் காத்தது. பிறமொழியாளர் செல்வாக்கினை அழிக்கும் வலிமை தமிழுக்கு உண்டென்பதை மீண்டும் மனித சமூகத்திற்கு உணர்த்தினான். "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்."[2] என எண்ணி எண்ணம் வீண்போகவில்லை. தமிழின் சுவையைப் பாமரரும் அறியவைத்தான். இதுவரையிற் கற்றோர்க்கென நின்ற மொழியினை யாவருக்கும் பொதுமையாக்கினான். தமிழை; மக்களுக்கு அன்னை யாக்கினான். தாயின் பெருமையை உலகமே தெரிய வைத்தான். எளிய சொற்களிலே இலகுவான நடையிலே கவிதைகளைப் பாடினான்.

"எளிய பதங்கள், எளிய நடை. எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய சந்தம், பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவிய மொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோர்க்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்.[3]

"பாஞ்சாலி சபதம்" என்னும் நெடும்கவிதைக்குப் பாரதி எழுதிய முகவுரையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளான். தமிழ்மொழியில் எதனையும் பாடமுடியும்; இலகுவாக உணர்த்தமுடியும் என்று பாரதி அன்று காட்டிய நெறியிலே இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறு வளர்ந்து செல்கிறது.

முன்னைய காலத்தில் தமிழ்க் கவிதைகளில் மிக்கோங்கியிருந்த இறுகியமொழிநடையினைப் பாரதி இளகவைத்து இலகுமொழி நடையாக்கிப் புதுமை செய்தான். தாம்தாம் நின்ற நெறியிலே எல்லோரும் தமிழிற் கவிதைபாட வழிசமைத்தான். அடிமைப்பட்டுக் கிடந்த நாட்டுக்கு விடுதலை ஊக்கம் அளித்த பாடல்கள் பலவற்றைப் பாடிச் சமூகத்திலே விடுதலை உணர்வுக்கு வித்திட்டான். தமிழ்மொழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவியாக அவன் செய்த விடுதலைப்போர் வெற்றியையே தந்ததுமட்டு மன்றி அவன் பெருமையையும் உலகம் உணரவைத்தது.

"இந்த நிமிஷத்தில் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளி யுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் அறிவொளி சற்றே மங்கியிருந்ததையும் நான் அறிவேன். ஆனால் போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் சத்தியம் இல்லை. நாளை வரப்போவது சத்தியம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என்பேரை மாற்றி அழையுங்கள்."[4]

1916ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மூன்றாம் திகதி "சுதேச மித்திரன்" என்னும் பத்திரிகையிற் பாரதி மேற்கண்டவாறு எழுதினான். இன்று இச்செய்தியை மீண்டும் படிக்கும்போது பாரதியை யாரும் தரிசனம் செய்யாமலிருக்கவே முடியாது. பாரதியின் பாடல்கள் தமிழ்மொழிக்குப் புதிய சிறப்பைத் தந்தன. அதன்மூலம் நாட்டுக்கு விடுதலை கிடைத்தது. தமிழ்மொழியின் வளமும் பிறநாடுகளிலும் பரவியது. அந்நியர் ஆதிக்கம் இந்தியாவில் அழிந்தது. அவ்வழியே சென்ற அந்நிய ஆதிக்கத்துக்குட்பட்டிருந்த ஏனைய நாடுகளும் விடுதலையைத் தேடப் பாரதியின் புதுமை உதவியது. தேசபக்தி என்ற நவீன மார்க்கம் மக்களின் வாழ்க்கையிற் புதிய திருப்பங்களையும் ஏற்படுத்தியது. தேசத்தின் விடுதலைக்காக மக்களை ஒன்றுசேர்க்க வேண்டிய பணியினைப் பாரதி சிறப்பாகவே செய்துள்ளான். பாரதமாதாவாகப் பாரததேசத்தை மக்களுக்கு அறிமுகம் செய்தான். பாரதியின் தாய்மை யெனும் தத்துவம் உலகமுழுமைக்குமே ஏற்புடைய தத்துவமாகும்.

உலகில் அன்னைபெறும் சிறப்பு மிகவும் உயர்வானது. தான்பெற்ற குழந்தைகளுக்குத் தன்னையே தருபவள் அன்னையே.

"தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா!
அமிழ்தில் இனியதடி பாப்பா - நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா!"[5]

எனப் பாப்பாப் பாட்டிற் பாரதி, பெற்ற தாயாக, நாட்டைப் பேணவேண்டுமென குழந்தைக்குச் சொல்லித்தருகிறான். நாட்டைத் தாயென மதித்த பாரதி வீட்டு நிலையிலே உண்மைத் தாயார் வாழ்ந்த நிலையையும்பற்றிச் சிந்தித்தான். வீட்டு விடுதலையில்லாமல் நாட்டு விடுதலைபற்றிப் பேசுவது அர்த்தமற்றதென எண்ணினான். பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை பற்றிப் பாரதி ஆழமாகவே சிந்தித்தான். சிறுமை தீர, தாய்த்திரு நாட்டைத் திரும்ப வெல்வதற்காக, ஆணும் பெண்ணும் சேர்ந்து நாட்டின் உருவாக்கத்தை ஏற்படுத்திய வகையினைப் பின்னோக்கிப் பார்க்கவேண்டிய தேவையும் பாரதிக்கு இந்நிலையில் மிக அவசிய மாயிருந்தது.

பழந்தமிழர்; சமூகத்தைப் பற்றிய கருத்துக்களைத் தாம் உருவாக்கிய இலக்கியங்களிலே கூறிச்சென்றுள்ளனர். பண்டைய இதிகாசங்களும், தனிப்பாடல்களும், காவியங்களும், புராணங்களும் தனிமனித வாழ்வு நெறிகளையும், சமூகவாழ்வு நிலைகளையும் எடுத்துக் கூறியுள்ளன. மனித வாழ்க்கையின் நோக்கம் எது என்பதை மக்கள் அறிய இலக்கியங்கள் உதவுகின்றன. நமது முன்னோர்களின் வாழ்வு நெறிகளைப் பற்றியறிய இதிகாசங்களும், காவியங்களும், புராணங் களும் உதவிசெய்யும் எனப் பாரதி நம்பினான். கம்பனையும், வள்ளுவனையும், இளங்கோவையும் போலப் பூமியிலே வேறு புலவர்கள் தோன்றவில்லையெனும் பாரதியின் கூற்று இதனைப் புலப்படுத்து கின்றது. ஆனால், சங்கப் பாடல்களை ஆழமாகப் படிக்கும் வாய்ப்பும் வசதியும் பாரதி வாழ்ந்த காலத்தில் அவனுக்கு இருக்கவில்லை. எனினும் தனது கட்டுரையிலே புறநானூற்றுப் பாடல் பற்றிக் குறிப்பிட்டது சங்கப் பாடல்களில் பாரதிக்கிருந்த விருப்பினைக் காட்டுகின்றது. சங்கப் பாடல் களில் தனிமனித வாழ்வு விளக்கமாகக் கூறப்படுகின்றது. ஆனால்; அத்தனி மனிதவாழ்வு மனித சமூக அமைப்பிலே; அக்கால கட்டத்திற் பெற்றிருந்த முக்கியத்துவத்தையும் அப்பாடல்கள் காட்டுகின்றன. சிறப்பாகக் குடும்பநிலையிலே ஆணும் பெண்ணும் பெற்றிருந்த நிலையைச் சங்கப் பாடல்கள் தெளிவாக எடுத்துக்காட்ட வேண்டியதும் அக்காலத்தின் தேவையாக இருந்திருக்கவேண்டும். ஆணும் பெண்ணு மாக ஒன்றிணைந்து குடும்பம் என்ற அமைப்பை ஏற்படுத்தி வாழத் தொடங்கியபோது அவ்வமைப்புக்கான சில ஒழுங்குமுறை களையும் திட்டமிட வேண்டியிருந்தது. விலங்குகளைப்போலன்றிச் சில விடயங்களைச் சிந்தித்துச் செயற்பட வேண்டியிருந்தது. ஒழுக்க நிலையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடற்ற விதிமுறைகளையே பழந்தமிழர் பேணிவந்துள்ளனர். குடும்பம் என்ற அமைப்பின் நிலைப் பாட்டிற்குச் சில ஒழுக்கவிதிகள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டன. ஒரு ஆணுடன் சேர்ந்து ஒற்றுமையாக வாழ்வு நடத்துபவளே வீட்டினது தலைவியாக இல்லாள் என்று அழைக்கப்பட்டாள். இல்லக் கிழத்தி, மனைவி, மனைக்கிழத்தி, மனையாள் எனப்பல பெயர்களும் பெண்ணுக்கு ஏற்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய சங்கப் பாடல்களிலே தலைவன், மனையோள் என்ற இரு சொற்கள் முறையே ஆணையும் பெண்ணையும் குறிக்கின்றன. ஊரன், நாடன், வெற்பன், துறைவன் போன்ற சொற்கள் ஆணைக் குறிக்கும் சொற்களாகப் பல பாடல்களிலே வந்துள்ளன. பெண் வீட்டிலிருந்து குடும்ப அமைப்பினைப் பேணுபவளாகவும், ஆண் வெளியிலிருந்து பேணுபவனாகவும் குடும்பநிலை இருந்ததை அறியமுடிகின்றது. ஆணும் பெண்ணுமாக நிலையாக ஓரிடத்தில் தங்கி வாழ்க்கை நடத்திய போது, மனை; மனித வாழ்வில் முக்கிய இடத்தைப் பெற்றது. இதனால் பெண் மனையிலேயே இருக்கவேண்டியவளாக நியமிக்கப்பட்டாள் எனக்கொள்வதற்கும் இடமில்லை. ஆணும் சில காலங்களிலே மனையில் இருக்கவேண்டிய நியதி இயற்கையால் ஏற்பட்டிருந்தது. கார்காலத்திலே ஆண் வெளியே சென்று எதனையும் செய்யமுடியாது. அதேபோன்று பயிர்ச்செய்கை நடைபெறுங்காலங்களிற் பெண்ணும் வெளியே செல்லவேண்டியவளானாள். அவளது உதவியினாலேயே ஆண் நிலத்தைப் பண்படுத்திப் பயன்பெறவும் அறிந்துகொண்டான்.

உணவுதேடல், இருப்பிடம் அமைத்தல் என்றநிலை மட்டுமன்றி, வம்சவிருத்தியெனும் முக்கியமான அம்சமொன்றும் குடும்பம் என்ற அமைப்பிலே; சில வரையறைகள் தோன்ற அவசியமாக இருந்தன. இச்சந்தர்ப்பத்திலேயே ஒருவனுக்கு ஒருத்தி; ஒருத்திக்கு ஒருவன் என்ற வரையறை ஏற்பட்டிருக்க வேண்டும். குடும்ப நிலையிலே கணவன், மனைவி, மக்ககள், உறவினர், நண்பர் என்ற நிலைகள் மக்களிடையே உறவுநிலைகளாக அமைந்தன. இந்நிலைகளில் அவரவரது கடமைகளும் பொறுப்புக்களும் வகுக்கப்பட்டன. பகுத்தறிவு கொண்டு அவை வகுக்கப்பட்டன. விலங்கு வாழ்க்கையிலிருந்து மனித வாழ்க்கை இப்புதிய கடமைகளாலும், பொறுப்புக்களாலும், வேறுபட்டுச் சிறப்புப் பெற்றது. மனித வாழ்க்கைக்காகக் கற்பிக்கப்பட்டநெறிகள் சமூகத்தின் பண்பாடாக நிலைபெற்றமைந்தன. நிலத்தைப் பண்படுத்தி விளைநிலமாக்கிப் பயன்பெற்றதுபோன்று மனிதனும் தனது வாழ்க்கைநெறி முறைகளைக் கடைப்பிடித்து வாழ்வதன்மூலம் நீண்டகாலம் மகிழ்வாக வாழமுடிந்தது. அதனால் பயன்தரும் வாழ்வில் மனிதன் கடைப்பிடித்த நெறிகள் மரபுகளாகப் பேணப்பட்டன. அம்மரபுகளை மனித வாழ்க்கை நெறிபற்றிப் பாடியவர்கள் தமது பாடல்களிற் குறிப்பிட்டனர். அவை இலக்கிய மரபுகளாக இன்று கொள்ளப்படுகின்றன.

அத்தகைய இலக்கிய மரபுகளைப் பிற்காலத்தில் இலக்கியம் படைத்த புலவர்கள் எடுத்துத் தமது பாடல்களிலே பாடியபோது சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பட்ட கருத்துக்களையும் சமூகத்தினர் முன்வைத்துள்ளனர். பழந்தமிழ்ப் புலவர்களாகிய சங்கப்புலவர்கள் மனித வாழ்க்கைக்காகக் கற்பித்த நெறிகளை வெகு நுணுக்கமாகத் தமது பாடல்களிலே கூறிச்சென்றுள்ளனர். சிறிய பாடல்களிலே அந்நெறிகள் பற்றிய விரிவான விளக்கங்களைத் தராமற் குறிப்பினாலே உய்த்துணரும்படி அமைத்துள்ளனர்.

அவ்வாறு அவர்கள் குறிப்பிட்டுச்சென்ற விடயங்களிலே "கற்பும்" ஒன்று. பிற்காலத்தவர் பலர் கற்பு என்பதைச் சரியாக விளங்கிக் கொள்ளாமல் தவறான விளக்கங்களைத் தந்து சென்றுள்ளனர். கற்பு என்னும் சொல் சங்கப்பாடல்களிலே பல இடங்களில் வந்துள்ளது. சங்க இலக்கியங்கள்பற்றி ஆய்வு செய்தவர் பலரும் இதுபற்றிய கருத்துக் களைக் கூறியுள்ளனர். பிற்கால இலக்கியங்களிலே கற்பு என்பது மிகச் சுருங்கிய பொருளிலே கூறப்பட்டுள்ளது. குறிப்பாகக் கற்பு என்பது பெண்களின் ஒழுக்கத்துடன் மட்டுமே சம்பந்தப்பட்டதாக இன்று பொருள் கொள்ளப்படுகின்றது. கற்பு என்ற சொல்லின் தோற்றப் பொருள்; கற்பித்தபடி ஒழுகுதல் என்பதே. இதனையே சங்கப்புலவர்கள் அச்சொல்லைக் கையாளுகின்ற இடங்களில் நுணுக்கமாகக் கூறிச் சென்றுள்ளனர். "இகலடுகற்பு", "வெளிறில் கற்பு" என்னும் தொடர்கள் கற்பு என்பது கற்பித்தவை எனப்பொருள் தருவதற்குச் சிறந்த உதாரணங் களாகும். கற்பு என்பதற்கு ஔவையார் கூறுகின்ற விளக்கமும் இப்பொருளையே தருகின்றது. சொற்றிறம்பாமையே கற்பு எனப் பட்டது. சங்க இலக்கியங்களுக்கு இலக்கணம் வகுத்த ஆசிரியர் தொல்காப்பியரும் கற்பு என்றால் என்னவென்று விளக்கியுள்ளார்.

தொல்காப்பியர் கற்பு என்பதை விளக்கும்போது அதுபற்றி வழக்கிலிருந்த கருத்தினையும், தனது கருத்தினையும் கூறியுள்ளார். செய்யுளியலிற் களவு, கற்பு என்பன பற்றி வழக்கிலிருந்த கருத்துக் கூறப்படுகிறது.

"காமப்புணர்ச்சியும் இடந்தலைப் படலும்
பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமென்
றாங்கநால் வகையினும் அடைந்த சார்வொடு
மறையென மொழிதல் மறையோர் ஆறே"[6]

என்னும் சூத்திரத்திற் களவுபற்றிய கருத்து கூறப்பட்டுள்ளது.

"மறைவெளிப் படுதலுந் தமரிற் பெறுதலும்
இவைமுத லாகிய இயனெறி திரியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலியும் புலவியும் ஊடலும் உணர்வும்
பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே"[7]

என்னும் சூத்திரத்திற் கற்புப்பற்றிய கருத்துக் கூறப்பட்டுள்ளது. இவ்விரு கருத்துக்களும் சங்கப் பாடல்களில் நுணுக்கமாகக் கூறப்பட்டிருப்பதைத் தொல்காப்பியர் உணர்ந்து, அவற்றைச் செய்யுள் மரபாகக் கண்டு, தமது இலக்கணத்தும் செய்யுள் மரபுபற்றி விளக்குமிடத்திற் கூறினார். சங்க இலக்கியங்களின் பொருள் மரபு பற்றி விளக்குமிடத்திலே அவர் கற்பு என்றால் என்னவென்பதைத் தன்கருத்தாகக் கூறியுள்ளார்.

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"[8]

தொல்காப்பியரது இச்சூத்திரவடிவான கருத்திற்கு இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் விளக்கவுரைகள் எழுதியுள்ளனர். "கற்பென்று சொல்லப்படுவது, கரணத்தோடு பொருந்திக் கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழவன் கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழத்தியைக் கொடுத்தற்குரிய மரபினையுடையோர் கொடுப்பக் கொள்வது"[9] என இளம்பூரணர் கூறும் விளக்கம் தனிமனித வாழ்வில் குடும்பம் என்ற அமைப்புத் தோன்றும்போது நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் கற்பாக அமைந்ததைத் தெளிவாக உணர்த்துகின்றது. நச்சினார்க்கினியர் கூறும் விளக்கம் இதனை மேலும் கூர்மைப்படுத்துகிறது.

'கற்பென்று சிறப்பித்துக் கூறப்படுவது வேள்விச் சடங்கோடு கூட ஒத்த குலத்தோனும் மிக்க குலத்தோனுமாகிக் கொள்ளுதற்குரிய முறைமையினையுடைய தலைவன் ஒத்த குலத்தாளும், இழிந்த குலத்தாளுமாகிய தலைவியைக் கொடுத்தற்குரிய முறைமையினையுடைய இருமுதுகுரவர் முதலாயினர் கொடுப்பக் கொள்வது"[10]

இங்கு இளம்பூரணர் விளக்காத "கரணம்" என்பதை விளக்கியும், குடும்ப அமைப்பிலே இணையும் ஆண், பெண் நிலைகள் பற்றியும் நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார். கற்பு என்பது கற்பித்த நெறியே என்பதைத் தொல்காப்பிய உரையாசிரியர்களும் தெளிந்துள்ளனர். ஆனால் இக்கற்பு நெறியானது எவ்வாறு பெண்ணுக்கே சிறப்பானது என்பது சிந்தனைக்குரியதாகும். பழந்தமிழர் வாழ்க்கையை எடுத்துக் காட்டும் சங்கப் பாடல்களில் வெகுநுணுக்கமாகவே இதனை விளக்கியுள்ளனர். குடும்பம் என்ற அமைப்பினைக் காக்கும் பெண்ணே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

கற்புநெறிகளைத் தனது சந்ததியினருக்குப் போதிக்கவேண்டிய சிறப்பான குணவியல்புகளையும் இயற்கையாகவே பெற்றிருந்தாள். கற்பு நெறி களை அவளிடமிருந்தே குழந்தைகள் அறிந்தனர். கணவனைக் குழந்தை யின் தந்தையாகவும், ஏனையவர்களை உறவினர்களாகவும் அமைய, தாயே குழந்தைக்கு நெறிமுறையாக முதன்முதற் கற்பிக்கத் தொடங்கு கின்றாள். அவள் கற்பிக்கும்நெறி செம்மையுடையதாக இருந்தது. மனித வாழ்வில், சமூக நிலையிற் பலரையும் குழப்ப நிலையின்றி அமைதியுடன் வாழ வழிசெய்தது.

அகநானூறு 86ஆம் பாடலிற் குடும்ப அமைப்புக்கான சடங்கு களைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. ஆணும் பெண்ணும் குடும்ப வாழ்வு வாழத்தொடங்கிய பின்னர், குழந்தைப் பேற்றினால் குடும்பத்தின் அளவு கூடுகிறது. வீடு பலர் வாழுகின்ற இடமாகின்றது. மனை என்ற பழைய சொல் அடிப்படையாகப் பெண்ணுக்கு மனைவி என்ற பெயர் உண்டாகின்றது, பெண்; மனைவி என்ற நிலையிலிருந்து தாய் என்னும் சிறப்புநிலையை அடைகின்றாள். அந்நிலையிலே ஆணைவிடக் குடும்பம் என்ற அமைப்புக்கு மிகமுக்கியமானவளாக மாறு கின்றாள். கணவனின் செயல்களையெல்லாம் அவதானித்து குடும்ப நிலைக்குப் பங்கம் ஏற்படாதவகையில் அனைவரும் நடந்துகொள்ள அவளே உதவுகின்றாள். கணவன் கற்புநெறிகளில் தவறும்போது அவனைத் திருத்துகின்ற பொறுப்பும் அவளுடையதாகின்றது. ஒழுக்க நிலையிலே மனத்திண்மையற்று ஆண் பிறபெண்களிடம் தொடர்பு கொள்வது பழைய சமூகநிலையிலே இருந்துள்ளது. சங்கப் பாடல்களிற் பெரும்பான்மையான மருதநிலப் பாடல்கள் ஆணின் ஒழுக்கக் கேட்டையே வர்ணிக்கின்றன. குடும்பநிலையில் வாழமுடியாத பல பெண்கள் ஆணின் ஒழுக்கச் சீர்கேட்டிற்கு இடம் கொடுக்கின்றனர். இந்நிலையிலும் பெண்ணே கற்புநெறியினை ஆணுக்கு உணர்த்துப வளாகிறாள். இதனாலேயே குடும்பநிலையில் வாழும் பெண்களுக்கு கற்பு, சிறப்பித்துக் கூறப்படவேண்டிய தொன்றாயிற்று. பெண்ணிடம் கற்பித்த நெறிப்படி வாழும் ஆற்றல்மிக்கிருந்தது. ஆணைவிடப் பெண்ணே மனவுரம் மிக்கவளாக இருந்தாள். தனது நலத்தை மட்டு மன்றித் தன்னைச் சார்ந்தவர்களது நலத்தையும் காக்கின்ற கருணை உள்ளங்கொண்டவளாக வாழ்ந்தாள். தொல்காப்பியர் இப்பண்புகளை

"கற்புங் காமமும் நாற்பால் ஒழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலுஞ் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்"[11]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கூறியுள்ளார். இலக்கியங்களிலே பெண்ணின் இக்குண நலன்களே மாசறுகற்பு, செயிர்தீர்கற்பு, அணங்குக்கற்பு, தெய்வக்கற்பு, அடங்கியகற்பு, ஆறியகற்பு, உரைசால்கற்பு, அமைவுறுகற்பு, செம்மை சேர்கற்பு, வியனுறுகற்பு எனப் பலபடக் கூறப்பட்டுள்ளன. இதனால் கற்பு என்பது நடைமுறைப் பொருளில் மனவுரம் என்ற கருத்தினையும் பெறுவதாயிற்று. பின்வந்த காவியங்களிலும் புராணங்களிலும் பேசப் பட்ட கண்ணகி, சீதை, மண்டோதரி, புனிதவதி, தமயந்தி, பாஞ்சாலி போன்றோர் மனவுரம் படைத்தவர்களாகக் கூறப்பட்டுள்ளனர். இளங்கோ கண்ணகியை உரைசால் பத்தினியாகக் காண்கிறார். கம்பர் சீதையைக் கற்பின் கனலியாகக் காண்கிறார்.

பெண்ணோடு சேர்த்துக் கற்பைப்பற்றிக் குறிப்பிடும்போது நெருப்பு இணைக்கப்பட்டுள்ளது. கற்பு வெம்மைப் பண்புடையது எனவும் ஒரு விளக்கமும் உருவாகியது. இளங்கோ தமது சிலப்பதி காரத்தில் இந்த விளக்கத்தை; மனித சமூகவாழ்வு நெறியூடாக விளக்கி யுள்ளார். கண்ணகி மதுரையை அழித்த செய்தி காப்பிய நிகழ்ச்சியாக அமைக்கப்பட்டாலும் கற்பின் பெருமையைக் காட்டவே அமைக்கப் பட்டுள்ளது. கோப்பெருந்தேவி, கண்ணகி என்ற இரு பெண்களின் கற்பு நெறிகளையும் அருகருகே வைத்து இளங்கோ காட்டுவதன்மூலம் பெண்ணின் மனவுரத்தின் சிறப்பினை வெளிப்படுத்தியுள்ளார். அதேவேளை கோவலனின் மனவுரமின்மையே குடும்ப நிலையை மட்டுமன்றி நாட்டு நிலையையும் சிதைத்தது என்பதையும் காட்டி யுள்ளார். மனை என்ற நிலையிலிருந்து நாடு என்னும் பரந்துபட்ட நிலை வரை கற்பின் அவசியத்தை அழகுற விளக்கியுள்ளார். உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் என்னும் இளங்கோவின் கருத்து; பெண்ணின் குணநலன்கள் சிறப்பிக்கப்பட வேண்டியவை என்பதை மறைமுகமாக உணர்த்துகின்றது.

கற்புப் பற்றிப் பேசவந்த வள்ளுவரும் வாழ்க்கைத் துணைநலம் பற்றிக் கூறும்போது

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின்"[12]

என்று கூறுகின்றார். வள்ளுவரும் "மனவுரம்" என்ற நிலையிற் கற்புப் பெண்ணிடம் நிலைபெற்றிருந்ததையே விளக்கியுள்ளார். தன்னை யும் காத்து; தன்னைக் கொண்டவனையும்பேணி; இருவர்க்கும் குடும்பநிலையில் அமைந்த கற்புநெறிச் சொல்லையும் காத்து, சோர்வில் லாமல் வாழும் திறமைபெற்றவள் பெண் என்பதை வள்ளுவரும் உணர்ந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளார். ஆனால் சமூக அமைப்பில் பெண்ணின் கற்புநெறி பெறக்கூடிய சிறப்பினைப் பற்றி வள்ளுவர் சிந்திக்கவில்லை. இல்லறம் என்ற நிலையில் மட்டுமே பெண்ணின் கற்புநெறி சிறப்புறும் என்பது அவர் முடிவாயிருக்க வேண்டும். ஆணின் கற்புநெறி பற்றியும் அவர் கருத்து வெளியிடவில்லை. இதற்கு அவர் காலத்திய பிறபண்பாட்டுத் தாக்கங்களே காரணமாயிருந்திருக்க வேண்டும். ஆனால் காமத்துப்பாலில் கற்பியல் என்ற அடிப்படையில் பழைய இலக்கிய மரபுகளையே நிலைப்படுத்த முற்பட்டதால் கற்பு என்றால் என்ன என்பதை அவர் சிந்திக்கவில்லையென்றே கொள்ளக் கிடக்கின்றது. இதனால் பிற்காலத்தில் பழந்தமிழ் இலக்கியத்திற் கூறப்பட்ட கற்புநெறி பற்றிய சிந்தனை சமூக நிலையிலே பெண்களுக்கு மட்டுமே இருக்கவேண்டிய குணநலன்களில் ஒன்றாகக் கருதப்பட்டது. கம்பன் இராவணனின் கற்புநெறி தவறுதலை தான் இயற்றிய இராமாயணத்தில் காட்டியுள்ளான். ஆனால் இராவணன் மனிதனாக அன்றி அரக்கனாகக் கூறப்பட்டிருப்பதால் கற்புநெறிகளை அறிந்தவனாகவோ அன்றிக் கடைப்பிடிக்க வேண்டியவனாகவோ இல்லையெனலாம்.

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரதி கற்பைப்பற்றிச் சிந்தித்துச் சில கருத்துக்களைத் தனது கவிதைகளிலே வெளியிட்டுள்ளான். நாட்டு விடுதலைக்கான வழிகளைத் தேடும்போது வீட்டுநிலையிலிருந்தே வழிதேடியது பாரதியின் உள்ளம். பெண்களின் நிலையும் சமூகத்தின் பலக்குறைவுக்கு முக்கிய காரணமாக இருந்ததைப் பாரதி உணர்ந்தான். பழைய காலத்தில் வீட்டு நிலையிலும் சமூகநிலையிலும் பெண்கள் பெற்றிருந்த நிலைப்பாட்டை மீண்டும் வெளிப்படுத்த வழிதேடினான். புதுமைப் பெண்களை உருவாக்கவேண்டிய பெண்களின் சிறப்பியல்புகளை மரபான வாழ்க்கை முறைகளைத் திரும்பவும் கொணர வேண்டிய நிலையை விளக்கிக் கவிதை பாடினான். புதுமையை அவாவி நின்ற சமூகத்திற்கு இந்நிலையிலேயே புதுமைப் பெண்ணை அறிமுகம் செய்தான். "ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்"[13] என்ற பாரதியின் கேள்வியற்றிவு கவிதையிலே இடம்பெற்றது.

"நிலத்தின் தன்மை பயிர்க்குளதாகுமாம்;
நீசத்தொண்டும் மடமையும் கொண்டதாய்
தலத்தில் மாண்புயர் மக்களைப் பெற்றிடல்
சால, வேயரி தாவதோர் செய்தியாம்
குலத்து மாதர்க்குக் கற்பியல் பாகுமாம்"[14]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே கற்பு குலத்து மாதர்களுக்கு இயல்பானதொரு குணமாகவே பாரதியினால் கொள்ளப்படுகின்றது. பழைய மரபான செய்தியாகவே பாரதி இதனைக் கூறுகின்றான். பெண்கள் பழைய காலத்தில் மாதவத்தவர்களோடு ஒப்பச் சிறப்புற வாழ்ந்தமையை திருக் குறளும், சிலப்பதிகாரமும், கம்பராமாயணமும் பாரதிக்கு உணர்த்தியி ருந்தன. தெய்வக் கற்புடன் பெண்கள் திகழ்ந்து, தெய்வநிலையையும் பெற்றிருந்ததால் சமூகத்தில் அவர்களது நிலையும் உயர்ந்திருந்தது என பாரதி எண்ணினான். அதனால் குலத்து மாதர்களுக்கு கற்பு இயல்பானது என்ற கொள்கையை கற்பின் அடிப்படை விளக்கங்களில் ஒன்றாகப் பாரதி கண்டிருந்தான். ஆனால் கற்பு இத்தகைய பெண்ணுக் குரிய சிறப்பான குணங்களுள் ஒன்றாக அன்றிப் பொதுநிலையில் பேணப்பட வேண்டுமென்பதே பாரதியின் இலட்சியமாக இருந்தது.

தனிப்பாடல்களிலும் நெடும்பாடல்களிலும் பாரதி தனது கற்புப் பற்றிய கருத்துக்களைக் கூறியுள்ளான். கண்ணன்பாட்டு, குயிற்பாட்டு, பாஞ்சாலி சபதம் என்னும் நெடும்பாடல்களில் கற்புப் பற்றிய பாரதியின் சிந்தனை வேறுபட்டதாகவே உள்ளது. பாரத நாட்டின் குலதெய்வமாகி விட்ட கண்ணனைக் காதலனாகவும் தன்னைக் காதலியாகவும் பாவனை செய்யும்போது, பிறன் கல்யாணம் செய்து விட்ட பெண்ணை ஒருவன் பார்க்கவுந்தகாது என்ற ஒழுக்க மரபினைப் பாரதி வெளிப்படுத்துகிறான். குயிற்பாட்டில் இம்மரபு இன்னும் இறுக்கமாக அமையவேண்டு மென்பது பாரதியின் குறிக்கோளாகிறது.

**"பட்டப்பகலிலே! பாவிமகள் செய்தியைப்பார்!**
**கண்ணாலங் கூட இன்னுங் கட்டிமுடியவில்லை**
**மண்ணாக்கி விட்டாள்! என் மானந்தொலைத்துவிட்டாள்!**
**நிச்சயதாம்பூலம்! நிலையா நடந்திருக்கப்**
**பிச்சைச் சிறுக்கிசெய்த பேதகத்தைப் பார்த்தாயோ?"[15]**

என்று நின்று கலங்கும் நெட்டைக்குரங்கனில், பெண் ஒரு ஆணுக்குரியவள் என நிச்சயிக்கப்பட்டுவிட்டால் ஒழுக்கநிலையில் மாறமுடியாதவள் என்ற கருத்து வைக்கப்பட்டுள்ளது. பாஞ்சாலி சபதத்திலே கர்ணன் பாஞ்சாலியைக் குறிப்பிடும்போது,

**"சீரிய மகளுமல்லள்**
**ஐவரைக் கலந்த தேவி"[16]**

என்று கேலி செய்கிறான். "மகாபாரதம், இந்தியாவிலே தோன்றிய இதிகாசங்களில் பெருமைபெற்ற ஒன்று. அதனைத் தமிழிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லிபுத்தூரர் பாடியுள்ளார். மக்களிடையே உறவுமுறைகள் அமைந்த விதத்தைப் பாரதக்கதை அழகாக விளக்குகின்றது. சமூகத்தில் குடும்ப நிலையில் ஒரு பெண் ஐந்தாண்களுக்கு மனைவியாக வாழ்ந்ததைப் பாரதக்கதை கூறுகின்றது. ஐவருக்கு மனைவியாக வாழும்போது அத்தகைய வாழ்க்கைக்கெனக் கற்பிக்கப்பட்ட நெறியிலிருந்து தவறாத வளாக பாஞ்சாலி கூறப்படுகிறாள். அவளது கற்புநெறியின் ஆற்றல் நெறிதவறியவர்களுக்கு அழிவையே தேடிக்கொடுக்கின்றது. ஆனால் பாரதி பாஞ்சாலி சபதத்தினைப் பாமரமக்களும் அறியவிரும்பும் இலகு தமிழில் பாடினார். பழைய மரபுகள் எவ்வாறு சமூகநிலையில் பேணப் பட்டன என்பதையும் தன் நெடும்பாட்டிலே எடுத்துக் காட்டினான். பெண்ணுக்குரிய சமூகநிலையினை வீட்டுமன் வாயிலாகக் கூறுகின்றான்.

"........................ கோமகளே, பண்டையுக
வேதமுனிவர் விதிப்படி நீ சொல்லுவது
நீதமெனக்கூடும்; நெடுங்காலச் செய்தியது
ஆணொடு பெண் முற்றும் நிகரெனவே அந்நாளில்
பேணி வந்தார். பின்னாளில் இஃது பெயர்ந்து போய்
இப்பொழுதை நூல்களினை யெண்ணுங்கால், ஆடவருக்
கொப்பில்லை மாதர்; ஒருவன் தன் தாரத்தை
விற்றிடலாம், தானமென வேற்றவர்க்குத் தந்திடலாம்
முற்றும் விலங்கு முறைமையன்றி வேறில்லை"[17]

மரபுகளைப் பின்நோக்கிப் பார்க்கும்போது ஆரம்பகாலத்தில் ஆணும் பெண்ணும் சமமானவர்களாகவே கருதப்பட்டனர். இடைக் காலத்தில் வகுக்கப்பட்ட நெறிகளுக்கமைய வாழ்வு நடத்த முடியாத வர்கள் கற்பு என்பதைப் பெண்ணுக்குரிய அணிகலனாக்கித் தாம் ஒழுக்கநெறிக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை பெற்றுக்கொண்டனர். அப்பொழுதுதான் ஆண் பெண்ணைவிட உயர்ந்தவன் என்ற புதிய கட்டுப்பாடு தோன்றலாயிற்று. பெண் சுதந்திரமற்றவளாக ஆணுக்கு அடிமைப்பட்டவளாக அமைந்தாள்.

இவ்வடிமைநிலை பாரதி வாழ்ந்த காலத்திலும் சமூகத்திலே நிலவியது. பெண் அடிமைத்தனத்தை எதிர்த்துப் பாரதி பாடினான். "புதுமைப் பெண்", "பெண் வாழ்க", "பெண்கள் விடுதலைக்கும்மி", "பெண் விடுதலை" போன்ற கவிதைகள் இதனைப் புலப்படுத்துகின்றன. பெண் கல்விமுறை, திருமணம், சமூகமதிப்புப் போன்ற விடயங்களில் புதுமையை ஏற்படுத்தினாலன்றி பெண்களின் சமூகநிலைகளை மாற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதெனப் பாரதி கண்டான். பெண்களும் அடிமைப்பட்டிருந்தனர். "கரும்புத் தோட்டத்திலே" என்னும் பாடலில் பெண்களின் நிலையைப் பாரதி கூறுமிடத்து,

"நெஞ்சங் குமுறுகிறார் - கற்பு
நீங்கிடச் செய்யுங் கொடுமையிலே"[18]

என்று குறிப்பிடும்போது கற்பு என்ற சொல்லை இடைக்காலப் பொருளான ஒழுக்கம் என்றே கொண்டுள்ளான். இதே கருத்தினை.

"மாதரைக் கற்பழித்து வன்கண்மை பிறர்செய்யப்
பேதைகள் போலுயிரைக் - கிளியே!
பேணி யிருந்தாரடி"[19]

என "நடிப்புச் சுதேசிகள்" என்னும் பாடலிலும் கூறுகின்றான். மாதரின் கற்பை அழிப்பவர் ஆண்களே என்பது பாரதியின் எண்ணமாக அன்றிப் பலகாலமாகச் சமூகத்தவரிடையே நிலவும் எண்ணமாகும். பெண் ஆணைக் கற்பழித்ததாக யாரும் கருத்துக் கூறுவதில்லை. ஆனால் விசுவாமித்திரர் மேனகை கதையின் அடிப்படைக் கருத்து ஆணின் கற்புநெறியைப் பெண் கெடுப்பதாகவே காணப்படுகின்றது. மனவுரம் என்ற நிலையில் ஆண் பெண் இருவருக்குமே கற்பு; பொதுவான குணமாவது. கற்புப் பற்றிய கருத்து முரண்பாட்டைப் பற்றியும் பாரதி சிந்தித்தான்.

சமூகநிலையிலே ஆண் பெண் தொடர்பு நெறியுடன் அமை வதற்குக் கற்பு உதவுகின்றது. அந்நெறிமுறை தவறும் ஆணும்சரி பெண்ணுஞ்சரி கற்பிழந்தவர்களாகவே கொள்ளப்பட வேண்டி யவர்கள். குடும்ப அமைப்பிலே ஆணும் பெண்ணும் தொல்காப்பியர் கூறிய கற்பு மரபிலே இணையமுடியாத சந்தர்ப்பங்களும் ஏற்படுவ துண்டு. பாரதி தனது சுயசரிதையிலேயே இதனைக் கூறியுள்ளான். சங்க இலக்கியப் பாடல்கள் காட்டுகின்ற களவு, கற்பு என்னும் இரு பகுப்புக் களும் மனித சமூகத்திற்கு எக்காலத்திற்கும் ஏற்புடையனவாயுள்ளன. கற்புப் பற்றிய பாரதியின் குறிக்கோள் "விடுதலைக்காதல்" என்னும் பாடலில் நன்கு விளங்குகின்றது. ஆனால் உடற்சேர்க்கை என்ற நிலை யிலேதான் கற்பின் தன்மை அங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது. பாஞ்சாலி பற்றிய வரலாற்று நிலையிலோ, கண்ணன் மீது கொண்ட பக்தி நிலையிலோ வெளிப்படுத்த முடியாத தனது சமூகநிலையினைத் தனிப்பாடலில் பாரதியால் உணர்ச்சியுடன் கூறமுடிகிறது. ஐரோப்பாவிலே காதல் விடுதலை பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் தாங்கள் விரும்பியவாறு விரும்பிய ஆணுடன் வாழ்வதை மிருகவாழ்க்கை என்கிறான். மனிதனின் ஆரம்ப காலத்து வாழ்க்கையது. நெறியற்ற பகுத்தறிவில்லாத மனவுர மற்ற அந்த வாழ்க்கையினால் மனித சமூகத்திற்கு நன்மை கிடையாதென் பதைப் பாரதி உணர்த்த விரும்பினான். அதேவேளையில் பண்டைய கற்புநெறி செயற்பட முடியாமைக்குரிய உண்மையையும் விளக்கியுள்ளான்.

"சோரரைப் போல் ஆண்மக்கள் புவியின் மீது
சுவைமிக்க பெண்மைநல முண்ணுகின்றார்
காரணந்தான் யாதெனிலோ ஆண்களெல்லாம்
களவின்பம் விரும்புகின்றார் கற்பே மேலென்று
ஈரமின்றி யெப்போதும் உபதேசங்கள்
எடுத்தெடுத்துப் பெண்களிடம் இயம்பு வாரே!"[20]

ஆண்களின் ஒழுக்கநிலையினை வெளிப்படையாகப் பாரதி கூறியது சமூகத்தின் அன்றைய போக்கினையன்றிப் பண்டுதொட்டு நிலவிய சமூக ஒழுக்கப் பிறழ்வுக்கான காரணத்தையும், கற்பு பெண்ணுக்கே உரித்தாக்கப்பட்ட நிலையையும் தெளிவுபடுத்து கின்றது. "ஆண் கற்பைவிட்டுத் தவறு செய்தால் அப்போது பெண்மை யுங் கற்பழிந்திடாதோ?" என்ற பாரதியின் கேள்வி கற்புப் பெண்ணுக்குரி யது என்று கருதுபவர்களுக்குரியதாகும்.

"ஆணெல்லாம் கற்பை விட்டுத் தவறுசெய்தால்
அப்போது பெண்மையுங்கற் பழிந்திடாதோ?"[21]

என்னும் அடிகளில் பாரதி கற்பு என்பதைச் சரியான பொருளிலே கூறியுள்ளது கவனிக்கத்தக்கது. சமூகத்திலே கற்பிக்கப்பட்ட நெறி முறைகளை ஆண் மீறும்போது அவனே தவறு செய்தவனாகிறான். அவன் செய்கின்ற தவறுக்கு உதவியாக இருப்பதால் பெண்ணும் கற்பு நிலை அழிந்தவளாகிறாள். எனவே சமூக அமைப்பிலே மாற்றம் ஏற்பட ஆண்கள் காரணமாயிருந்ததையும் பாரதி தயங்காமல் எடுத்துக் காட்டியது குறிப்பிடத்தக்கதாகும். நடைமுறையிலே காணுகின்ற காட்சிகளையெல்லாம் மறைத்து வைத்துக் கற்பினைப் பற்றி உலகத்தவர் கதைக்கின்றாரே என்ற பாரதியின் சமூக மதிப்பீடு அவனது பழமையை மீண்டும் காணும் நோக்கால் ஏற்பட்டதெனலாம். கடந்தகால நிகழ்வு களை அறியுஞ் சான்றுகளாக இலக்கியங்கள் இருந்தன. மேலைத் தேசத்தி லிருந்து அறிமுகமான ஆங்கிலக்கல்வியும் பண்பாடுமே பாரதியைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்விடுதலை பற்றிச் சித்திக்க வைத்தன. அக்கருத்தினைப் பாரதியின் கருத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது சிந்திக்க வேண்டியுள்ளது. "விடுதலைக்காதல்" எனும் பாடலில் மேலைநாட்டுப் பெண்களின் வாழ்க்கை நடைமுறையை வியந்து கூறுபவரை "வீரமில்லா மனிதர்" என்று பாரதி குறிப்பிடுகிறான். மேலைத்தேசக் கல்வி முறையினால்தான் பாரதநாட்டுப் பெண்களின் அடிமைவாழ்வு தீரும் எனப் பாரதி எண்ண வில்லை. "தாய் மாண்பு" பற்றிக் கூறுமிடத்தில்

"தாய்க்குமேல் இங்கேயோர் தெய்வ முண்டோ?
தாய் பெண்ணே யல்லளோ? தமக்கை, தங்கை
வாய்க்கும் பெண் மகவெல்லாம் பெண்ணே யன்றோ?
மனைவியொருத்தியை யடிமைப் படுத்த வேண்டித்
தாய்க்குலத்தை முழுதடிமைப் படுத்த லாமோ?"[22]

எனப் பாரதி கேட்பது சமூகத்தின் பெண்விடுதலைக்கு நமது முன்னோர் கற்பித்த நெறிகளே போதுமானது என்பதைப் புலப்படுத்து கின்றது. ஔவையின் கூற்றை மீண்டும் ஞாபகப்படுத்துவதன்மூலம் நடைமுறை வாழ்க்கையின் நியதியையே பேண எண்ணுகிறான்.

"பெண்ண றத்தினை ஆண்மக்கள் வீரந்தான்
பேணு மாயின் பிறகொரு தாழ்வில்லை"[23]

என்று பண்டைய சமூக நிலையையே நாமும் கடைப்பிடிக்க வேண்டும் பாரதியின் எண்ணம் இன்னும் செயற்படவில்லை. பெண்ணின் மனவுரமும் கருணையும் மனிதனைப் பாதுகாத்து நிற்பவை. வலிமை சேர்ப்பது தாய்ப்பாலே என்று விஞ்ஞானம் இன்று விளம்பு கின்றது. "மானம் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்"[24] என்றான் பாரதி. மனிதனுக்குச் சகல விடயங்களிலேயும் சமமாக நின்றுதவும் பெண்; குடும்பம் என்ற நிறுவனத்தைக் கட்டிக்காப்பவள். அப்படிக் காக்கப்படும் குடும்பங்கள் சேர்ந்து சமூகம் உருவாகின்றது. சமூகங் களின் இணைப்பினால் நாடு தோன்றுகிறது. இதுவே இயற்கையான நடைமுறையாக இருந்துவந்துள்ளது.

"கற்பு நிலையென்று சொல்லவந்தார் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"[25]

என்ற பாரதியின் விடுதலைக்கும்மி பெண்ணின் விடுதலையை மட்டும் குறிப்பிடவில்லை. அந்நியராதிக்கத்துக்கும், பண்பாட்டிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமையாகிவிட்ட பாரதநாட்டின் விடுதலைக்கே வழியாகப் பழைய கற்புநிலையினை எல்லோருக்கும் பொதுவாக்க வேண்டுமென்கிறான்.

பல பழந்தமிழ் இலக்கியங்களைப் பாரதி நன்கு கற்றவன். குறளுக்கு முன்னர் தோன்றிய சங்கப் பாடல்களையும் படிக்கும் வாய்ப்பு அவனுக்கிருந்திருந்தால் சமூகத்தின் நிலைப்பாட்டுக்கான வழிகளை இன்னும் ஆழமாகச் சிந்தித்திருக்கக்கூடும். இயற்கையிலே பெரிதும் ஈடுபாடு கொண்ட பாரதிக்கு இயற்கைநெறியுடன் இயைந்த வாழ்வுக் கென நம்முன்னோர் வரையறை செய்து வைத்த கற்புநெறிகள் விளக்க முற்றிருக்கும். பாரதியின் பாடல்களில் பரந்துகிடக்கும் விடுதலை யுணர்வு தனிமனித நிலையில் ஏற்பட்டதல்ல. சங்கப்புலவர்களைப் போல சமூகத்தின் நல்வாழ்வுக்கென ஏற்பட்டது. தமிழர் பண்பாட்டைப் பாதுகாத்துப் பேணவே பாரதி விரும்பினான். "தமிழ்ச்சாதி" பற்றிய பாடலிலே இருதலைக் கொள்ளியினிடை நம்மவர் வாழ்கிறாரே என விதியைக் கேட்பதற்கும் சங்கப்பாடல்களில் காணும் வாழ்வுநெறியை அறியாததே காரணமாகும்.

> **"நமதுமூ தாதையர் நயமுறக் காட்டிய**
> **ஒழுக்கமும் நடையும் கிரியையும் கொள்கையும்**
> **ஆங்கவர் காட்டிய அவ்வப் படியே**
> **தழுவிடின் வாழ்வு தமிழர்க்குண்டு"[26]**

என்ற தன் கருத்தினைப் பாரதி மனச்சஞ்சலத்துடன் வெளியிட்டதை அவன் மரபினை ஆழமாக அறியாததையே உணர்த்துகின்றது. பெண் சமூக நலன்கள் உருவாவதற்கு ஆரம்பகாலத்திலிருந்தே காரண மானவள். சங்கப்பாடல்களில் குடும்பநிலையிலேயே ஆண் கற்பு நெறியைக் கடைப்பிடியாது வாழும் சந்தர்ப்பங்களில் பெண் நடந்து கொள்ளும்விதம் பல பாடல்களிலே கூறப்பட்டுள்ளது. நற்றிணை 280ஆம் பாடலில்,

> **"நன்மனை நனிவிருந்து அயரும்**
> **கைதூவு இன்மையின் எய்தாமாறு புலவேன்"[27]**

எனவரும் அடிகள், மனைக்கு வருகைதருகின்ற விருந்தினரை உபசரிப்பதையே முக்கிய கடமையாகக் கொண்ட பெண்; தன் கணவனது கூடா ஒழுக்கத்தையறிந்தும் அவனோடு ஊடல் கொள்ளா திருக்கின்றாள். ஆனால் அவள் அவ்வாறு ஊடல் கொள்ளாதிருப்பதற்கு முக்கியகாரணம் அவளுக்குப் பொருளில்லாமல் போய்விடும் என்ற நிலையே எனலும் கருத்துக்கூறுவர். பெண் பொருள் வளத்தைப் பாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பவளாக ஆரம்பத்திலிருந்து வாழ்ந்து வந்துள்ளாள். அவள் துணை யுடனேதான் சமூகத்தில் ஆண் மதிக்கப்பட்டான். கற்பித்த நெறிகளை யும் மேலதிக கல்வியறிவினால் பெற்ற பகுத்தறிவையும் ஆண் இழந்து நிற்கும்போது பெண்ணே அவனைப் பாதுகாத்து நின்றாள். குடும்ப நிலையிலே அவன் கற்பு மீறல்களைப் பாதுகாத்துச் சமூக நிலையில் அவனை உயர்த்தினாள். இதனால் திருமணம் என்னும் அம்சம் ஆணின் வாழ்வு நெறிப்பட அமைய இன்றியமையாததாயிற்று. தாயின் பாது காப்பிலே வளரும் ஆண் இளமைக் காலந்தொட்டு இறப்புவரை மனைவியின் பாதுகாப்பில் வாழவேண்டியவன். இக்கருத்தையே பாரதி யும் சுயசரிதைப் பாடல்களிற் கூறியுள்ளான்.

"காளையீர்! ஆண்மை வேண்டின் மணஞ் செய்தல் ஓம்புமின்"[28]

என்ற பாரதியின் வாக்கு ஆண் வாழவழி கூறுகிறது. தான் இயற்றிய புதிய "ஆத்திசூடி"யிலும் "ஆண்மை தவறேல்" என அமைத்துள்ளான். எல்லோரும் பெண் நெறியோடு வாழவேண்டும் என்று எண்ணிய காலத் தில் புதுமையாகப் பாரதி ஆண்மை தவறக்கூடாது என்று கூறுகிறான். பாரதியின் இக்கூற்று ஆண்களின் உடல் வலியை மட்டும் கருதாமல் சமூகத்தின் ஒரு அங்கமான ஆணின் நிலைப்பாட்டின் அடிப்படை யையே கருதிக் கூறப்பட்டதாகும். சமூக ஒருமைப்பாட்டிற்குப் பண்டை நெறிகள் அவசியமானவை. இயற்கை நிலைகளின் வேறுபாட்டினை அனுசரித்தே பண்டைய வாழ்வுநெறிகள் வகுக்கப்பட்டன. இன்றைய நாகரிக உலகிலே பழைய மரபுகள் பல புதுமைகளாக நோக்கப்படு கின்றன. பாரதியின் புதுமைகளும் அத்தகையவே. பெண்விடுதலை எனப் பாரதி கூறியவை யாவுமே பழந்தமிழர் கற்பித்த நெறிகளே. மேலைத் தேயப் புதுமைக் கருத்துக்களைக் கண்டு பாரதி அவற்றைச் சமூகத்திலே திணிக்க விரும்பவில்லை. காலாகாலம் சமூகத்திலே வந்து கலந்த பிறநாட்டுப் பண்பாடுகளின் தாக்கத்தினால் தமிழினத்திற்கு நேர்ந்த கேடுகளை எண்ணிச் செயற்பட்டான். நம்முன்னோர் வகுத்த நெறிகளே மனித சமூகத்திற்கு ஏற்புடையவை எனக் கண்டான்.

பழமை பழமையென்று பாவனை பேசியவர்களை வெறுத்த பாரதி பழமை இருந்த நிலையைப் பாமரரும் அறிய வைக்க வேண்டுமென எண்ணினான். உயர்கல்வி வாய்ப்பற்றவர்களும் உலக நடைமுறையை உணர வைத்தான்.

"மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

வைய வாழ்வு தன்னில் எந்த
வகையி னும்நமக்குளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வம் இந்த நாட்டிலே"[29]

என்று நல்வாழ்வுக்குப் பாரதி காட்டிய வழி நம்முன்னோர் கற்பு வழியேயாகும். பழைய கற்பு நெறியைப் புதுமையாக எடுத்துக் காட்டிய பாரதியும் சங்கப்புலவர்களோடு வைத்து எண்ணப்பட வேண்டியவனே யாம்.

**அடிக்குறிப்புகள்**

1. விநாயகர் நான்மணிமாலை, **பாரதியார் கவிதைகள்** 2ஆம் பதிப்பு (சென்னை, பூம்புகார் பிரசுரம், 1977) பாடல் 39.
2. **மேற்படி,** 'தமிழ்" பாடல் 1; வரி 7 - 8.
3. **மேற்படி,** "பாஞ்சாலி சபதம்" - முகவுரை ப. 313.
4. **சுதேசமித்திரன் பத்திரிகை** 3-4-1916.
5. **மேற்படி,** "பாப்பாப் பாட்டு" ப. 203; பத்தி. 11.
6. **தொல்காப்பியம்** பொருளதிகாரம் - இளம் பூரணம், செய்யுளியல், 2ஆம் பதிப்பு கழக வெளியீடு, சென்னை -1 அக்டோபர் - 1969) ப. 528.
7. **தொல்காப்பியம்** பொருளதிகாரம் - செய்யுளியல், நச்சினார்க்கினியர் உரை (சென்னை கழக வெளியீடு, பெப்ரவரி 1965) "செய்யுளியல்" ப. 234, நூ.எ.189.
8. **தொல்காப்பியம்** பொருளதிகாரம் **இளம்பூரணம்** 2ஆம் பதிப்பு (கழக வெளியீடு) சென்னை-1 அக்டோபர் 1969) கற்பியல் நூற்பா எண் 140, ப.249.
9. **மேற்படி,** ப. 249 நூற்பா எண் 140, இளம்பூரணர் விளக்கம்.
10. **தொல்காப்பியம்** - பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை 2ஆம் பதிப்பு (கழக வெளியீடு,) சூலை. 1977 "கற்பியல்" ப. 163.
11. **மேற்படி,** (கழக வெளியீடு சென்னை-1, ம.ப. அக்டோபர் 1969) கற்பியல் நூற்பா எண் 150 ப. 301.
12. திருக்குறள் **மூலமும் பரிமேலழகருரையும்,** முதல் பகுதி, **"அறத்துப்பால்"** (மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை 1972) வாழ்க்கைத் துணை நலம் பாடல் எண் 4, ப. 67.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

13. **பாரதியார் கவிதைகள்** (வானவில் பிரசுரம் - சென்னை-36. புதிய பதிப்பு 24-01-1980), பகுதி "சமூகம்" பாடல் தலைப்பு, "புதுமைப் பெண்" பத்தி 4, வரி 1-2.
14. **மேற்படி,** பக். 5. ப. 501.
15. **பாரதியார் கவிதைகள்,** (பூம்புகார் பிரசுரம், சென்னை-13 மு.ப. மே, 1976) "குயில் பாட்டு" வரி, 123-127.
16. **பாரதியார் கவிதைகள்,** (வானவில் பிரசுரம்,) சென்னை-36, புதிய பதிப்பு, 24-01-1980) "பாஞ்சாலி சபதம்" ப. 450, வரி. 87.
17. **மேற்படி,** ப. 445. வரி. 3-11.
18. **மேற்படி,** ப. 222, பக் 4. வரி. 1-2.
19. **பாரதியார் கவிதைகள்,** (பூம்புகார் பிரசுரம், சென்னை-13, பு,பதி. 24-01-1980) "நடிப்புச் சுதேசிகள்", பத்தி 8, ப. 197.
20. **பாரதியார் கவிதைகள்,** வானவில் பிரசுரம் பாரதி அறுபத்தாறு, பாடல் 55.
21. **மேற்படி,** பாடல் 56.
22. **பாரதியார் கவிதைகள்** (வானவில் பிரசுரம், பு. பதி. 24-01-1980) "தாய் மாண்பு" ப. 252, வரி, 47.
23. **பாரதியார் கவிதைகள்** (மெர்க்குரிப் புத்தகக் கம்பனி, கோயம்புத்தூர்-2ஆம் பதி. மே, 1971), "பெண்மை", ப. 503, பத். 4.
24. **மேற்படி,** "பெண்மை" ப. 503, பத். 3.
25. **மேற்படி,** "பெண்கள் விடுதலைக்கும்மி" ப. 499.
26. **பாரதியார் கவிதைகள்,** வானவில் பிரசுரம், பு: பதி. 24-01-1980) "தமிழ்ச்சாதி" ப. 173, வரி. 26-29)
27. **நற்றிணை** (கழக வெளியீடு, சென்னை-1 நான்காம் பதிப்பு, பெப்ரவரி 1967) ப.ச.எ.அ, பா. எ. 280.
28. **பாரதியார் கவிதைகள்** (வானவில் பிரசுரம், பு.பதி. 24-01-1930) "மணம்" ப. 235, வரி. 31-32.
29. **மேற்படி,** "விடுதலை" ப. 180, பத். 3.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Harikanan (Pvt.) Ltd., Jaffna.

ISBN 955989255-X

9 789559 892557

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org